நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYA POOMI புதிய பூமி

சுற்று 06 ஒகஸ்ட்/செப்டம்பர் 1999 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்சி 30


## 'மனித முகம்' கொண்ட தனியார் மயம்

- எப்பாவலை போஸ்பேற் கனிவள நிலம் அமெரிக்க கம்பனிக்கு விற்பனை.
- கொழும்புத் துறைமுக எலிசபெத் இறங்குதுறை பல்தேசியக் கம்பனிவுக்கு கையளிப்பு
- புத்தளம் புகையிரதப் பாதை சீமெந்துக் கம்பனிக்கு தாரைவாய்ப்பு
- அனல் மின்சார உற்பத்திக்கு அமெரிக்க கம்பனிக்கு அனுமதி
- நுரைச் சோலை அனல் மின் உற்பத்தி நிலைய நிர்மாணத்தை கைவிட மறுப்பு

இன்னும் இன்னும் தொடரும்!!

# அரசாங்கம் — ஐ.தே.கட்சி பேச்சுவார்த்தை விளையாட்டு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் அரசாங்கமும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் தமக்குள் பேசி ஒரு இணக்கப் பாட்டிற்கு வரவேண்டும் என்பது வர்த்தக சமூகத்தினரின் வற்புறுத்த லாகும். அவர்களது அழுத்தத்தை நிராகரிக்க முடியா மலும் தேர்தல்கள் வர இருப்பதால் மக்கள் மத்தியில் த்தமது கட்சிகளுக்கு பழி ஏற்படா மலும் இருப்பதற்காக அரசாங்கமும் ஐ.தே.கட்சியும் பேச்சுவார்த்தை விளையாட்டில் இறங்கியுள்ளன. ஆனால் இவர்கள் நேர்மையாகவும் மனப்பூர்வமாகவும் நடந்து கொள்வார்களா? என்பதே பிரச்சினையாகும்.

நாட்டின் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு சமாதானத்தை நிலை நிறுத்த வேண்டும் என்பது வர்த்தக சமூகத்தினரின் விருப்பமாக உள்ளது. தொடரும் யுத்தம் வர்த்தக சமூகத்தின் மூலதன முதலீடு களையும் தொழில் வர்த்தகத்தையும் கடுமையாகப் பாதித்துள்ளதன் வெளிப்பாடே அவர்களது முயற்சியாகும். இவர்கள் முதலாளித்துவ சுரண்டல்காரர்கள் என்பதும் மக்களைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாதவர்கள் என்பதும் சுகபோக வாழ்வின் சொந்தக்காரர்கள் என்பதும் யாவரும் அறிந்ததே. இருப்பினும் தமக்கும் தமது மூலதனத்திற்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பினால் யுத்தம் இனப்பிரச்சினை விடயத்தில் தலையிட்டு நாட்டின் சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற அவர்களது விருப்பும் நோக்கும் நாட்டு மக்களுக்கு நன்மை அளிக்குமானால் அந்த முயற்சியை யாவரும் வரவேற்கவே வேண்டும்.

ஆனால் அடுத்த ஆட்சிக் கதிரைக்காக ஒருவரை ஒருவர் எதிர்த்து நிற்கும் அரசாங்க கட்சியும் எதிர்க் கட்சியும் எவ்வாறு இவ்விடயத்தில் இணங்கிப் போவார்கள். இவ்விரு கட்சியினரும் தான் இலங்கையின்

## ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

இன்றைய யுத்த நிலைக்கு காரணகர்த்தாக்கள். சுதந்திரம் என்பதற்கு முன்பும் அதற்குப் பின்பும் மிக இலகுவாக இனப்பிரச்சினையில் தோன்றிய ஆழமான பள்ளங்களையும் வெடிப்பு களையும் ஆரம்பத்திலேயே இவர்கள் நிறைவு செய்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்னும் கேள்வி இன்று எழ வேண்டிய நிலையே தோன்றியிருக்காது. குறைந்த பட்சத் தீர்வுக்கு முயன்ற ஒவ்வொரு சந்தாப்பத்திலும் இவ்விருவரில் ஒரு பகுதியினர் அதனை எதிர்த்துக் குழப்புவதிலேயே வெற்றி பெற்றுக் கொண்டனர். அத்தகைய வெற்றிகளால் ஆளும் வர்க்கமும் அவர்களது சொத்து சுகங்களும் பொலிவு கண்டன. பௌத்த சிங்களப் பேரினவாதிகள் மன மகிழ்வு கொண்டு பெருமை கொண்டனர். மறு முனையிலே இன்றைய யுத்தத்தை நோக்கி தமிழ் மக்களையும் நாட்டையும் தள்ளிக் கொண்ட தமது எதிர்நிலை விளைவுகளைத் தூர நோக்குடன் காணத் தவறினர். இன்றும் கூட இனப்பிரச்சிணையைத் தீர்த்து வைக்கத் தவறும் தமது குறுகிய நிலைப்பாட்டால் அடுத்த பத்து இருபது வருடங்களுக்கு

தொடர்ச்சி 9ம் பக்கம்...

## யுத்தமும் கடவுளும்

நாட்டில் யுத்தம் தொடர்வதற்குக் காரணம் திருச்சி சிறிரங்கம் கோவிலின் உயர்ந்த கோபுரம் இலங்கையைப் பார்த்து நிற்பது தானாம். எனவே அதற்கு நிகரான ஒரு கோபுரத்தை கொழும்பு நகருக்கு அருகாமையில் முத்துராஜ வெலப் பகுதியில் அமைக்க யுத்த அமைச்சர் ரத்வத்தை மும்முரமாக நிற்கிறாராம். அதேவேளை நான்கு படைகளினதும் வழிகாட்டும் உயர் அதிகாரியாக நியமனம் பெற்ற ரோகான் தலுவத்தை யுத்த ஆசி வேண்டி சக்தியசாயிபாபாவிடம் சென்று வந்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

## வீடு சும்மா அல்ல

மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் பிரசாரம் பிரமாதம். ஆனால் அவ் வீடுகள் மலசல கூட அளவிலான புறாக் கூடுகள் போன்றன என்பதும் அவை கூட தொழிலாளர்களின் சேமலாப நிதி (ஈ.பி.எவ்.) யினை பிணையாக வைத்து கடன் அடிப்படையில் கட்டப்படுகிறது என்பது பலர் அறியாத இரகசியம்.

## குடா நாட்டு நிலைமை

யாழ் குடாநாட்டில் 91ஆயிரம் வீடுகள் சேதம். 70ஆயிரம் விவசாய-மீனவருக்கு வேலை இல்லை. 90ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கி வந்த உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது. 20சத வீதமான மாணவர்கள் பாடசாலை செல்வதில்லை. 113 பஸ்கள் மட்டுமே அங்கு உண்டு. அவற்றிலும் 26 பஸ்கள் கிடப்பில் உள்ளன. 24 ஆயிரம் வீடுகள் மட்டுமே மின்சாரம் பெறுகின்றன. அவையும் அரைகுறையாக இவற்றுக்குப் பெயர் இயல்பு வாழ்க்கை.

# மலையகத்தில் புதிய கூட்டணிக்கு ஆள் சேர்ப்பு நடைபெறுகின்றது!

அடுத்து வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக மலையக மக்கள் முன்னணி தலைமையிலான கூட்டணி ஒன்று உருவாகி இருப்பதாக தெரிகிறது. மேல்மாகாணசபையின் உறுப்பினர் மனோ கணேசன் மலையக மக்கள் முன்னணி தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இ.தொ.காவைவிட அடுத்த பெரிய சக்தி மலையக மக்கள் முன்னணி என்பதால் அக் கட்சியை சிறிய சிறிய கட்சிகளுடன் சமமானதாக ஒப்பிடக்கூடாது. ஆனால் அதன் தலைமையை ஏற்றுக்கொண்டுள்ள எந்தவொரு கட்சியுடனும், தொழிற்சங்கத்துடனும் கூட்டணியாக செயற்பட ம.ம.மு தயாராக இருக்கிறது என்று ம.ம.மு தலைவர்கள் மனோ கணேசனிடம் கூறியதாக அறிய முடிகிறது.

ம.ம. முன்னணி மேற்படி நிபந்தனைகளை விதித்தபோதும் எவ்வளவுக்கு அதிகமான சக்திக ளுடன் கூட்டுசேர முடியுமோ அவ் வளவுக்கு கூட்டணியை அமைத்து வருகிற பாராளுமன்ற தேர்தலில் ஒரு பாராளுமன்ற ஆசனத்தையாவது பெற்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் காய்களை நகர்த்தி வருகிறது. தற்போதிருக்கும் ஒரு பாராளுமன்ற ஆசனத்தை எப்படியும் மீண்டும் பெறுவதிலேயே அதன் இருப்பு தங்கியுள்ளது.

நடந்து முடிந்த மாகாணசபை தேர்தலில் ம.ம.முயிலிருந்து மத்திய மாகாணசபைக்கு இரண்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பட்டிருந்த போதும் 1994பொதுத் தேர்தலில் ம.ம.மு தலைவர் சந்திரசேகரனுக்கு கிடைத்த வாக்குகளை விட குறைவான வாக்குகளையே ம.ம.மு மாகாணசபை தேர்தலில் பெற்றிருந்தது. 1994 இல் பொதுத்தேர்தலில் போனாஸ் ஆசனத்தை பெறும் தகுதியை பெற்றதாலேயே சந்திரசேகரன் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் போனஸ் ஆசனத்தையே பெற்றுவிட வேண்டும் என்ற நம்பிக்கையை ம.ம.மு கொண்டிருக்க முடியாது. அந்த போனஸ் ஆசனத்தை பெற்றுக் கொள்ளவும் அதிகமான வாக்குகளை பெற வேண்டியிருக்கும்.

எப்படியும் ஒரு ஆசனத்தை பெற்றுவிட வேண்டும் என்பதுடன் நாடெங்கும் போட்டியிட்டு தேசிய பட்டியளிலிருந்து இன்னொருவரையும் பெற்றுவிட முடியும் என்று சில ம.ம.மு தலைவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். அந்த அடிப் படையிலேயே சிறிய தொழிற் சங்கங்களுடனும் அமைப்புகளுடனும் எப்படியாவது இணைந்து அமைப்பு களை பயன்படுத்தி வாக்குகளை பெற்றுவிட ம.ம.மு வியூகம் அமைத்து செயற்படுவதாக தெரிகிறது. அத்துடன் கொழும்பு போன்ற இடங்களிலும் தேர்தலை நோக்கமாகக் கொண்ட குழுக்களை அமைத்து

9ம் பக்கம் பார்க்க...

## சிவசேனை வேண்டுமாம்

இந்திய சிவசேனைத் தலைவர் பால் தக்காரே அவரது இனத்துவேச-சாதிவெறிப் பேச்சுக்காக குற்றவாளியாகக் காணப்பட்டு ஆறு ஆண்டுகளுக்கு தேர்தலில் நிற்கவோ வாக்களிக்கவோ முடியாது என தேர்தல் ஆணையம் ஆணை பிறப்பித்துள்ளது. அதேவேளை இங்கு இந்துத்துவ சாதி வெறியில் ஏற்கனவே தோற்றுப்போன மாவை ஆதீன கர்த்தா பத்திரிகைப் பேட்டி ஒன்றில் இங்கு சிவசேனை வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். அதனை மிகுந்த மனமகிழ்வுடன் நூலாக்கி உள்ளார் ஒரு தமிழ் இளைஞன். சிவசேனைக்கும் பால்தக்கரேக்கும் வக்காலத்து வாங்கும் திருக் கூட்டம் பற்றி எச்சரிக்கை கொள்வத அவசியம்.

# பலாலி நிலச் சுவீகரிப்புக்கு புதிய வர்த்தமானி தயாராகின்றதா?

பலாலி ராணுவத் தள விஸ்தரிப்புக்கு அதனைச் சூழவுள்ள பெரும் தொகையான நிலத்தை சுவீகரிக்கும் புதிய வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வெளியிட இருப்பதாக அறிய முடிகிறது. இதன் மூலம் தமது காணிகள், வீடுகள் விவசாய நிலங்கள் மற்றும் பொது இடங்கள் என்பன பறிபோய் விடுமோ என வலி வடக்கின் மக்கள் ஏங்கித் தவிக்கும் நிலைக்கு உள்ளாகி உள்ளனர். கடந்த பத்து வருடங்களாக இடம் பெயர்ந்து விபரிக்க முடியாத இன்னல்கள் மத்தியில் வாழ்ந்து வரும் 25885 வலி வடக்கு குடும்பங்களுக்கு புதிய வர்த்தமானி அறிவித்தல் வர இருக்கும் செய்தி பேரிடியேயாகும்.

முன்றைய யூ.என்.பி. ஆட்சிக் காலத்தில் 1987ல் பலாலி ராணுவத்தளத்தின் தேவைக்கென காணி சுவீகரிக்கும் வர்த்தமானி அறிவித்தல் காமினி திசநாயக்காவினால் வெளியிடப் பட்டது. அதன் படி பலாலி, மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி தெற்கு ஆகிய பகுதிகளில் 397 காணித்துண்டுகள் 261.7365 ஹெக்டெரில் சுவீகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு சுவீகரிக்கப்படவுள்ள காணிகளுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதாகவும் ஆசை வார்த்தை காட்டப்பட்டது. அன்றும் இச் சுவீகரிப்புக்கு எதிராக மக்கள் தமது கடும் எதிர்ப்பைக் காட்டினர். ஆனால் 1989ல் இருந்து படிப்படியாக ராணுவ நடவடிக்கை மூலம் முழு வலி வடக்கு மக்களும் விரட்டப் பட்டனர். இன்று வரை அப்பிரதேச மக்கள் மீளக்குடியமர் வதற்கு அனுமதிக்கப் படவில்லை.

இந் நிலையில் இவ்வருட மூன்றாம் மாதத்தில் பலாலி ராணுவத் தளத்தைச் சூழவுள்ள பன்னீராயிரம் ஏக்கர் நிலங்களைச் சுவீகரிக்கும் முடிவும் முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டன. இதற்கு

தொடர்ச்சி 9ம் பக்கம்....

## வெட்கம் ரோசம்

ஈபிடிபி கட்சி இறுதி நேரப் பம்மாத்துக் காட்டுவதற்காகவேனும் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு எனக் கூறி அவசரகாலச் சட்ட வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் பத்து மலையக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்னும் வெட்கம் ரோசம் வரவே இல்லை. எவ்வித தயக்கமும் இன்றி பத்துக் கைகளும் உசாராக உயர்த்தப்பட்டுள்ளன. தூ... இதுவும் ஒரு பிழைப்பா?

நன்றி - நூலகத்திட்டம்



# கிராமசேவையாளர் நியமனம் உரிமைகோரும் அமைச்சர்கள்!

மலையகத் தமிழ் கிராம சேவகர்கள் நியமனத்தை வலியுறுத்தி நீண்டகாலம் பல மட்டங்களிலும் இயக்கங்கள் நடத்தப்பட்டன. கடந்தவாரம் 101 மலையகத்தமிழ் கிராமசேவகர்களுக்கு நியமனம் பத்திரங்களை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க வழங்கியுள்ளார். அந்நியமனப்பத்திரங்களை வழங்கும் வைபவத்தில் இ.தொ.கா வின் அமைச்சர் தொண்டமானும் ம.ம.மு.யின் பிரதியமைச்சர் சந்திரசேகரமும் கலந்துகொண்டுள்ளனர். இவர்கள் இருவரும் கலந்துகொண்டதால் நியமனப் பத்திரங்களை வழங்குவதில் இவர்கள் இருவருக்கும் புங்கிருப்பதாக படம் காட்டுவதற்கு இலகுவாகும்.

அதில் நியமனங்களை யார் முதலில் கோரியது என்பதில் போட்டி நிலவுவதை அறியமுடிகிறது. அவ்வைபவத்தில் உரையாற்றிய சந்திரசேகரம் தான் 1994 ஆம் ஆண்டு அரசாங்கத்தை கோரியதாகவுதம், தொண்டமான் தான் 1985ம் ஆண்டே கோரிக்கை விட்டதாகவும் ஆளுக்காள் முன்னுரிமை கோரியுள்ளனர்.

எப்போதுமே எந்தவொரு விடயத்திலும் போராடுபவர்கள் போராட பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட அல்லது வைபவத்தில் கலந்து கொண்ட அல்லது அரசாங்கத்துடன் நெருங்கி இருப்பவர்கள் சாதனை படைத்தவர்களாக காட்டப்படுவது வழக்கம்.

எதுஎவ்வாறிப்பினும் முதலாளித்துவ அரசியல்வாதிகள் போன்றோ முதலாளித்துவ கட்சிகள் போன்றோ புதிய ஜனநாயக கட்சியோ வேறெந்த நேர்மையான இடதுசாரி கட்சியோ எவ்வித வெற்றிகளுக்கும் தாமே காரணம் என்று உரிமை கோரமுடியாது. ஆனால் 101 கிராம சேவையாளர் நியமனத்திற்கு பின்னணியில் கவனிக்க வேண்டிய சில விடயங்களும் இருக்கின்றன.

1. 1993 ஆம் ஆண்டு மலையக மக்களின் பிரச்சினைகள் பற்றி பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது மேற்படி .மலையகத் தமிழ் கிராமசேவகர்கள் நியமனம் பற்றி புதிய ஜனநாயக கட்சி வலியுறுத்தியிருந்தது.

2. 101 கிராமசேவையாளர் நியமனங்களையும் தமிழ் லிகிதர் நியமனங்களையும் இரத்துச் செய்யும்படி சிங்கள வீரவிதான, இயக்கம், பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி என்பவை கோரியிருந்தமையினால் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அந்நியமனங்களை இடைநிறுத்தியிருந்தது. இடைநிறுத்தத்தை எதிர்த்தும் நியமனங்களை வழங்கும்படி கோரி புதிய ஜனநாயக கட்சியும் ஏனைய இடதுசாரி கட்சிகளும் இணைந்த புதிய இடதுசாரி முன்னணி 1999 பெப்ரவரி 14ஆம் திகதி ஆர்ப்பாட்ட பேரணியையும் கூட்டத்தையும் நடத்தியது, இதில் பெரும் எண்ணிக்கையில் சிங்கள பொரியோர்களும், இளைஞர்களும் பெண்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

3. புதிய ஜனநாயக கட்சியின் ஏற்பாட்டினால் இடதுசாரி பாராளுமன்ற உறுப்பினரான தோழர் வாசுதேவநாணயக்கார மார்ச 10ஆம் திகதி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு கடிதமொன்றை எழுதி மேற்படி மலையக தமிழ் கிராம சேவகர்கள், லிகிதர், நியமனங்களை இடைநிறுத்த வேண்டாமெனவும், உடனடியாக நியமனங்களை வழங்கும்படி கேட்டிருந்தார்.

4. மேற்படி நியமனங்களை வழங்குவதில் நிலவும் தாமதம் குறித்து தோழர் வாசுதேவ நாணயக்கார பாராளுமன்றத்தில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் வாய்மூல கேள்விகளை கேட்பதற்கான கடிதத்தை ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி பாராளுமன்ற கேள்விகள் பிரிவுக்கு அனுப்பியிருந்தார்.

5. தோழர் வாசுதேவநாணயக்காரவின் மேற்படி முயற்சிகளுக்கு பதிலாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கடிதமொன்றை எழுதியிருந்தார். மலையக தமிழ் கிராம சேவையாளர்கள் நியமனத்தை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக அக்கடிதத்தில் பதிலளிததிருந்தார்.

6. மார்ச் 13ஆம் திகதி பதுளை, நுவரெலியா மாவட்டங்களில் கிராம சேவையாளர் நியமனங்களுக்கு மீண்டும் நடத்தப்பட்ட தெரிவு பரீட்சையின் சட்டபூர்வமான தன்மைப் பற்றி கேள்விக்குட்படுத்தி சட்டநடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சிகளில் புதிய ஜனநாயக கட்சி ஈடுபட்டிருந்தது.

7. மலையகத்தில் தமிழ் கிராமசேவையாளர்கள் நியமிக்கப்படுவதன் அவசியம் பற்றி சிங்கள மக்களுக்கு அறிவூட்டும் கலந்துரையாடல்களை புதிய ஜனநாயக கட்சியும், தேசிய ஜனநாயக இயக்கமும் நடத்தியிருந்தன.

எனவே சில கிராமசேவையாளர் நியமனங்களை பெற்றதற்கு ஆதாரமாக போராட்ட இயக்கங்களும் அமைந்துள்ளன என்பதை நியமனத்தை பெற்றுக்கொண்டவர்கள் தெரிந்து கொள்ளல் அவசியம். இதிலிருந்து சமாதானமான மௌனங்களை விட போராட்ட அழுத்தங்களினூடாகவே பல உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பது விளங்கிக் கொள்ளப் பட வேண்டும். அதேவேளை அழுத்தங்களை ஏற்படுத்தும் போராட்டங்கள் சிறிய போராட்ட வடிவங்களேயன்றி சமுதாய விடுதலையை பெறுவதற்கு அவை மட்டுமே போதுமானவை அல்ல. மேலும் சில நியமனங்களைப் பெற்றுவிட்டால் யாவும் சரியாகிவிடும் என்ற மயக்கத்தைத் ஏற்படுத்தி விடவும் கூடாது.

முழுமையாக போதியளவு மலையக தமிழ் கிராமசேவையாளர்கள் நியமனங்களை வென்றெடுக்கும், மலையக தமிழ் லிகிதர்கள் நியமனங்களை வென்றெடுக்கும் இயக்கங்கள்க்கு வலுவூட்ட வேண்டியது அவசியமாகும்.

**எஸ். மணி**
இராணிவத்தை, லிந்துலை.

## தேர்தல் இணையம்

தமிழ் இணையம் 2000 என்ற மாநாடு அடுத்த வருடம் கொழும்பில் நடக்க இருக்கிறது. தமிழில் கொம்பியூட்டர் என்ற நோக்கத்துடன் பெரிய பெரிய திட்டங்கள் எல்லாம் போடப் படுகின்றன. கவர்ச்சியான இந்த ஆலோசனைகளில் எத்தனை உண்மையில் நடைமுறையாகும் என்பது ஒரு பிரச்சினை, இவை சாதாரண தமிழ் மக்களுக்கு எவ்வளவு பயனுள்ளவை என்பதும் ஒரு பெரிய பிரச்சினை. என்றாலும் இதில் அரசியல் லாபம் உண்டு என்பது கருணாநிதிக்கும் தெரியும் தொண்டமானுக்கும் தெரியும்.

கொம்பியூட்டர் மூலம் தமிழ் வளர்க்கிறதாகச் சொல்லி ஏதேதோ நாடகமாடினாலும் கருணாநிதி இதில் நல்ல விளம்பரம் தேடுகிறார். தொண்டமான் ஜனாதிபதியிடம் கெஞ்சி மன்றாடி மாநாட்டு நிதி வாங்கிச் சாதனை புரிந்திருக்கிறார். அந்தப் பணம் எப்படிச் செலவாகிறது என்பது ஒருபுறம் இருக்க, இந்தியாவிலிருந்து 1000 கொம்பியூட்டர்களை வரவழைத்து மலையகத் தமிழ் உயர் பாடசாலைகளுக்கு வழங்குகிற நோக்கமும் விளம்பரப்படுத்தப் பட்டுள்ளது.

பல பாடசாலைகளில் இந்தக் கொம்பியூட்டர்களை இயக்க ஆட்கள் இருக்கிறார்களோ, மின்சாரம் இருக்கிறதோ என்று கூட யாருக்கும் கவலை இல்லை. ஆனால் கொம்பியூட்டரைச் காட்டி வாக்குப் பறிக்க முடியும் என்பது மட்டும் அவர்கட்குத் தெரியும்.

மின்கம்பங்களைச் காட்டி சந்திரசேகரன் ஏமாற்றினார். இந்த முறை இவர் கொம்பியூட்டர்களையும் அவர் மின்கம்பங்களையும் காட்டி மக்களை ஏமாற்ற முயற்சி செய்யலாம். வாழ்க தமிழ் கொம்பியூட்டர்.

## அடுத்த ஐக்கியம் யாருடன்

12.8.99 அன்று புதிய இடதுசாரி முன்னணி தனது முதலாவது வருட நிறைவுக் கூட்டத்தை நடத்தியது. புதிய இடதுசாரி முன்னணி என்ற பேருக்கு உரிமை கொண்டாட விரும்புகிற விக்கிரமபாகு ஐயாவுக்கு ஒரே திண்டாட்டம், இருமுனைத் தாக்குதலுக்கு முயற்சி செய்தார். ஒருபுறம், பத்திரிகையில் தன் கட்சி ஆளான லீனஸ் ஜயதிலக மூலம் 12.8.99 அன்று முதலாம் வருட நினைவுக் கூட்டம் நடவாது என்று அறிக்கைவிட ஏற்பாடு செய்தார். மீறியும் கூட்டம் சிறப்பாக நடந்தது.

இந்தக் கூட்டத்திற்கு முதல் நாள் ஐயா கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால் யுத்தத்துக்கு எதிராகவும் வன்னிக்கு உணவு அனுப்பக் கேட்டும் ஒரு ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு செய்து, தானே புதிய இடதுசாரி முன்னணி என்று காட்ட முயற்சி செய்தார். யாருமே தன் பின்னால் வரமாட்டார்கள் என்று ஐயாவுக்குத் தெரியும். எனவே ஒரு புதிய கூட்டணியை உருவாக்கினார். .இந்திய வம்சாவழி மக்கள் பேரணியின் பிரமுகரான மனோ கணேசனும் ஒரு சில உதிரிகளும் உதவிக்கு வந்தார்கள். எனவே 30–40 பேர் பங்குபற்றிய ஒரு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அடுத்த ஐக்கியம் யூ.என்.பியோதான். பாவம் விக்கிரமபாகு!

## நாலு நடக்கும் உலகிலே

### யூ.ரி.எச்.ஆர்(ஜே)யின் பிழைப்பைக் கெடுக்கிறியே பாவி!

யாழ்ப்பாணத்திலோ பல்கலைக்கழகத்திலோ ஆசிரியர்களாகவோ இல்லாதவர்களால் மனித உரிமையின் பேரில் விடப்படும் யூ.ரி.எச்.ஆர்.(ஜே) அறிக்கைகள் சிங்கள இனவாதிகளை மிகவும் மகிழ்வூட்டுவது உண்மை. ஐலண்ட் நாளேடு தமிழர்களை ஏசி எழுதுகிறவர்கட்கு அடுத்தபடியாக நேசிப்பது இந்த யூ.ரி.எச்.ஆர்(ஜே) அறிக்கைக் காரர்களையே தான் என்றால் மிகையாகாது. இப்போது டெய்லி நியூஸ் ஏடும் யூ.ரி.எச்.ஆர். அறிக்கைகளுக்கு முன்பக்க கொட்டையெழுத்து முக்கியம் கொடுக்கத் தொடங்விட்டது. ஏற்கனவே அரசாங்கம் பிரசார ஊடகங்களின் செய்திகளான மடு அகதிகள் மீது புலிகள் தாக்குதல் போன்ற செய்திகளை தமது அறிக்கையில் யூ.ரி.எச்.ஆர். எழுதிவைக்க, அதை ஒரு புதிய செய்தி போல டெய்லி நியூஸ் பிரசுரிக்க, மனித உரிமைக்காரர்கட்கு மகா ரோஷம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

தங்கள் அரசாங்கத்தையும் கண்டித்து எழுதுகிறார்களாம். அதை விடுத்து வெறுமனே புலிகளைக் கண்டித்து எழுதுகிறதை மட்டுமே டெய்லி நியூஸ் முக்கியப்படுத்துவதாக இவர்கள் மிகவும் கோபித்துக் கொண்டிருக்கிறார்கள். எதோ நடுநிலை வேஷம் போக்குவதற்காக அரசாங்கத்தைக் கண்டித்து நாலு வரி எழுத வேண்டி இருக்கிறது. அதையும் நீக்கிவிட்டு டெய்லி நியூஸ் அவர்களது அறிக்கையின் முக்கியமான பகுதியை மட்டும் வெளியிட்டால் கோபம் வராதா. நடுநிலை, மனிதாபிமானம், மனித உரிமை என்கிற பிழைப்பில் டெய்லி நியூஸ் மண்ணை அள்ளிப் போடலாமா?

### தேர்தல் வரும் பின்னே, வன்னி(க்குழு) ஓசை வரும் முன்னே.

கொழும்புத் தமிழர் வன்னிக்குழுவில் உள்ள எல்லாரதும் கையாலாகாத்தனம் பற்றி எல்லாருக்கும் தெரியும். அரசாங்கம் கவிழாமல் கையை உயர்த்த மட்டும் நன்றாகப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இவர்களுடன் சேர்ந்து செயற்படுகிற நோக்கமே இல்லாமல் அதற்குள் போய் 'நான் அப்பவே சொன்னேன்' என்று சொல்ல இன்னொரு விளம்பர இடைவேளையை நாடியே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அங்கே போனார் என்பதும் எல்லாரும் அறிந்தது தான். தேர்தல் வரப்போகிறதல்லவா! எனவே தமிழர் மீது அக்கறையும் தூசுதட்டப்பட்டு அறிக்கைகளாக முன்வைக்கப்படுகிற காலமும் இதுவே.

இவர்களுடைய கோமாளிக் கூத்தும் கோரிக்கைகளும் ஒருபுறம் இருக்க, வன்னி அகதிகளை வாகனங்களில் ஏற்றி அனுப்பி வீணாக அல்லல்படுத்தி அரசாங்கப் படைத் தலைமை சேட்டை செய்துள்ளது. முன் கூட்டியே புலிகளின் சம்மதம் பெறாமலும் முன்பு ஆலோசனைக்கு எடுக்கப்படாத ஒரு பாதை வழியாகவும் மக்களை வன்னிக்கு அனுப்பியதன் அரசியல் பிரசார நோக்கம் பச்சைக் குழந்தைக்கும் விளங்கும்.

இது போக இன்னொரு கேள்வி: மக்கள் புலிகளிடம் தப்பி ராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகட்கு வர விரும்புகிறார்கள் என்றல்லவா அரசாங்கம் பிரசாரம் செய்கிறது. அப்படியானால், ஆயிரக் கணக்கானோர் திரும்பவும் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வாழ ஏன் விரும்புகிறார்கள்?

எப்படி இருந்தாலும் விடுதலைப் புலிகள் இன்னற்பட்ட இந்த மக்களின் பிரச்சினையைக் கூடிய மதிநுட்பத்துடன் கையாண்டிருக்க இடம் இருந்தது இருக்கிறது என்பதும் பரவலான தமிழ் மக்களது எண்ணம். அது நியாயமானதுங் கூட.

### தேவையற்ற ஒரு கொலையும் புதிய அந்தஸ்தும்

ஆளானப்பட்ட த.வி.கூ தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் கொலை செய்யப்பட்டட போது அமெரிக்க சனாதிபதியோ ஐ.நா. சபைச் செயலாளர் நாயகமோ .அதைப்பற்றி அறிக்கை விடவில்லை. நீலன் திருச்செல்வத்தின் கொலைக்குக் கிளின்றனும் அமெரிக்கக் கட்டுப்பாட்டில் இயங்குகிற ஐ.நா.சபைச் செயலாளர் நாயகம் கொ.ஃபி அனானும் மிகவும் துயரும் கோபமும் தொனிக்க ஒரு அறிக்கை விட்டுள்ளார்கள். என்றால் நிச்சயமாக நீலன் ஒரு முக்கியமான பேர்வழியாகத்தான் இருக்க வேண்டும். அரசாங்கத்துக்குப் யூ.என்.பி.க்கும் சுதுநெலும் இயக்கத்துக்கும் இனவாதக் கட்சிகள் பல பேருக்கும் விளங்குகிற இந்த உண்மை ஏன் சாதாரணத் தமிழ் மக்களுக்கு விளங்கவில்லை? "இவர் எங்களுக்காக என்னத்தைச் செய்தார்?" என்பது தான் செய்தி கேட்ட பல சாதாரண மக்களது உடனடியான கருத்தாக இருந்தது.

மறுபுறம் இந்த அரசியற் கொலை மூலம் எவரும் என்ன சாதித்தனர்? மக்களால் என்றுமே ஏற்கப்படாத அரசியல் தரகர்களைக் கொல்வதன் மூலம் அவர்கட்கு ஒரு புதிய அந்தஸ்தை வழங்கியதை விட என்ன கிட்டியது? வெகுஜன அரசியலின் மீதும் மக்கள் யுத்தத்தின் மீதும் நம்பிக்கை உள்ளவர்கட்கு இப்படியான கொலைகட்கான தேவையே இராது என்பதைக் 4றாமல் விடமுடியவில்லை.

### மன மாற்றம்?

சில மாதங்கள் முன்பு வி.ப.வி. என்கிற என்.ஜி.ஓ. நடத்திய 'இலக்கியக்' கூட்டத்தில் வந்து மாக்ஸியத்தைக் கொச்சை பண்ணிவிட்டுப் போன நோர்வே பேராசிரியரின் பேச்சுக்கு புதிய பூமியில் சூடாகவே பதில் வந்தது. எனவே தானே போராசிரியரின் பேச்சு அவர் பின்பு திருத்தி எழுதிக் கொடுத்த படி ஞாயிறு பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கிறது. திருத்தங்கள் பற்றி நாங்கள் மகிழலாம். ஆனாலும் பேராசியர் திருந்தி விட்டார் என்று நம்பத்தான் கஷ்டமாக இருக்கிறது. செய்த தவறை ஒப்புக் கொண்டு திருந்துவது ஒரு விஷயம். தவறை மூடி மறைக்கக் கதையைக் திருத்துவது வேறு விஷயம். பொறுத்திருந்து தான் பார்ப்போமே!

### எல்லாரும் ஜே.ஆர் தானே!

ஒரு சிங்கள நண்பர் ஜே.ஆர்.ஜயவர்த்தன என்றால் என்ன என்று தெரியுமா என்று கேட்டுவிட்டு, தானே பதிலையும் சொன்னார்: "ஜனதாவ ரவட்டன்ன (மக்களை ஏமாற்றும்) ஜயவர்தன என்று கருத்து" கேட்டுகொண்டிருந்த இன்னொரு நண்பர் உடனே கேட்டார்: அப்படியானால் எங்களுடைய பாராளுமன்றத் தலைவர்மார் எல்லாருக்குமே ஜே.ஆர். என்றுதானே பேருக்குமுன் வர வேண்டும்!

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

PUTHIYA POOMI | புதிய பூமி

S-47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக்கட்டிடத் தொகுதி, கொழும்பு 11, இலங்கை. தொலைபேசி இல. 435117, 335844


## அடிவருடும் ஆசாமிகள்!

பொதுசன ஐக்கிய முன்னணி 1994ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் ஒரே ஒரு பெரும்பான்மை வாக்கினாலேயே ஆட்சி அமைத்துக் கொண்டது. அந்த ஒரு வாக்கு மலையக மக்கள் முன்னணியினது. ஏற்கனவே முஸ்லீம் காங்கிரஸ் அரசாங்கத்தின் பங்காளியாகிக் கொண்டது. ஒரு வாக்கின் பலத்தில் ஆட்சியை நீடிக்க முடியாது என்பதால் தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா.வின் ஒன்பது உறுப்பினர்களையும் மந்திரிப் பதவி வழங்கி உள்வாங்கிக் கொண்டது. இத்துடன் நின்று விடாது எச் சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்திற்காக கை உயர்த்துபவர்களாக ஈபிடிபி, தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ரெலோ ஆகிய கட்சிகளையும் அரசாங்கம் இலகுவாக வளைத்துக் கொண்டது. பொதுசன முன்னணியின் ஐந்து வருட ஆட்சிக்காலம் முழுவதிலும் தமிழ் முஸ்லீம் பிரதிநிதிகள் என்போர் அரசாங்கத்திற்காக கை தூக்குபவர்களாக இருந்து வந்துள்ளனர் என்பது மிக முக்கியமான விடயமாகும்.

வடக்கு கிழக்கு மலையகம் ஆகிய பரந்த பிரதேசங்களினதும் மக்களினதும் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக உள்ள இருபத்தைந்து உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு தமது முழுமையான ஆதரவை வழங்கி வந்துள்ள போதும் அதற்கு பிரதியீடாக அரசாங்கம் எவற்றை வழங்கியது என்பதே மக்கள் எழுப்பும் கேள்வியாகும். வடக்கு கிழக்கின் யுத்தத்திற்கோ அதற்குக் காரணமான தேசிய இனப் பிரச்சினைகளுக்கோ இந்த அரசாங்கம் தீர்வையோ முடிவையோ காணவில்லை. தமிழ் முஸ்லீம் மக்கள் அனுபவிக்கும் கொடூரங்கள் எந்த வகையிலும் அகற்றப்படவில்லை. மேன்மேலும் வடக்கு கிழக்கில் யுத்த விஸ்தரிப்பும் ராணுவ மயமாக்கும் செயல்பாடுகளுமே செய்யப்படுகின்றன. ஒரு ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டில் ஆக்கிரமிப்புச் செய்த நாட்டின் ராணுவம் எவ்வாறு நடந்து கொள்ளுமோ அவ்வாறே தமது சொந்த நாட்டின் இரண்டு மாகாணங்களில் அரசாங்கமும் இராணுவமும் நடந்து வருகின்றமை நாளாந்த நடைமுறைகளாக உள்ளது. யாவற்றுக்கும் பயங்கரவாதம், பயங்கரவாதிகள், புலிகள் என முத்திரை குத்திவிட்டு ராணுவ செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அவ்வாறே மலையகத்தில் தோட்டத் தொழிற்துறை கம்பனிகளின் அப்பட்டமான தொழிலாளர் விரோத நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் சகல ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றது. சம்பள உயர்வு மறுப்பும் தொடக்கம் ஏனைய உரிமைகள், சலுகைகள் யாவும் படிப்படியாக பறிக்கப்பட்டு வந்துள்ளன. இன ரீதியிலான புறக்கணிப்புகள் எந்த வகையிலும் குறைந்ததாக இல்லை. ஆனால் இதோ அது வருகிறது அதோ இது வருகின்றது என்ற ஏமாற்றுத்தான் நடைபெறுகிறது. வீடு மின்சாரம் தருவதாக ஓர் அரை அமைச்சர் மூலமும் தொழில் கல்வி மற்றும் வாழ்க்கை முன்னேற்றம் என்பன தோட்ட உள்ளகக் கட்டமைப்பு ஊடே ஏற்படுவதாக ஒரு முழு அமைச்சர் மூலமாகவும் ஏமாற்றுக்கள் தொடருகின்றன. அத்துடன் இன்று சிறைகளில் முன்நூறு மலையக இளைஞர்கள் விடுதலை இன்றி அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களையும் பற்றி பத்து மலையக உறுப்பினர்களில் ஒருவராவது கருசனை காட்டி விடுவிக்கும் நடவடிக்கை எடுத்தது கிடையாது. அதேவேளை மக்களதும், பல்வேறு அமைப்புகளினதும் நடவடிக்கைகள் போராட்ட அழுத்தம் காரணமாக ஏதாவது கிடைத்து விட்டால் அவற்றுக்கு தனி உரிமை கொண்டாவும் மாலை மரியாதை வாங்கவும் போட்டி போட்டுக் கொள்வார்கள்.

இவ்வாறு வடக்கு கிழக்கு மலையக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு சாமரை வீசி ஆதரவு வழங்குவது தத்தமது சுயநல நோக்கோடு தான் தம்மையும் தம்மைச் சுற்றியுள்ள ஒரு கூட்டத்தையும் நன்கு வளர்த்துள்ள இந்தப் பா.உக்கள் ஏன் தான் மக்கள் பற்றிக் கவலைப்பட வேண்டும் ஒரு முறைதானும் அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுப்பதை நிறுத்தி எதிர்ப்பைத் தெரிவித்தால் என்ன? என்று ஒரு முறை ஒரு மலையக கட்சித் தலைவரிடம் சில ஆதரவாளர்கள் கேட்ட போது? கூறியது 'வீடுகள், வாகனங்கள், தொலைபேசிகள், ஏனைய வளங்கள் யாவற்றையும் உதறி விட்டு நடுவீதியில் நின்று எப்படி சேவையாற்ற முடியும்' என்பதாகும். இதுவே உண்மை நிலை. இது மலையக பா.உக்களுக்கு மட்டும் உரிய விடயமல்ல. வடக்கு கிழக்கு தமிழர் பிரதிநிதிகள் என்போரின் இன்றைய நிலையும் இதுதான். அரசாங்கத்தை அடிவருடி நடாத்தும் இவர்களது அரசியல் பிழைப்புக்கு ஒரு அடிப்படை உண்டு. அது உயர் வர்க்க சொத்து சுகபோக அடிப்படையேயாகும். இவற்றுக்கு மேலால் இனமொழி உணர்வு என்பது வெறும் பம்மாத்தேயாகும். அதனாலேயே பாரதி அன்று தெளிவாகக் கூறியது இன்றும் மிகவும் பொருந்தக் கூடியதாக உள்ளது.

சோந்தச் சகோதரர்கள் துன்பத்திற் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி கிளியே செம்மை மறந்தாரடி! அரசியல் ரீதியில் மக்கள் உண்மைகளைத் தெரிந்து கொண்டு தம்மை சரியான அரசியல் பாதையில் இட்டுச் செல்லத் தயாராகும் வரை இத்தகைய ஏமாற்று சக்திகளுக்கு கொண்டாட்டம் தான். நிச்சயம் மக்கள் உண்மைகளை உணர்ந்து கொள்ளும் காலம் வந்தே தீரும்?

20-08-1999 — -ஆசிரியர் குழு-

# ஆண்ட பரம்பரை ஆதிக்கமும் அரசியலில் அதன் நீடிப்பும்

**- வெகுஜனன் -**

தென் ஆசிய நாடுகளின் அரசியல் அரங்கிலே ஆண்ட பரம்பரைக் குடும்பங்களின் ஆதிக்க அரசியல் இன்றும் இறுக்கமுடையதாக இருந்து வருகின்றன. சுதந்திரம் கிடைத்ததென்றும், அதற்கு தேர்தல்கள் இடம் பெறுகின்றன வென்றும் கூறிக் கொள்ளலாம். ஆனால் கட்சித்தலைமை ஆட்சித்தலைமை அமைச்சர் நியமனம் மற்றும் நிர்வாக விடயங்கள் அனைத்திலும் குடும்ப பரம்பரை ஆதிக்கம் அரசியல் களத்திலே நன்கு காண இயலும்.

இத்தகைய பரம்பரை குடும்ப அரசியல் ஆதிக்கம் தொடர்வதன் அடிப்படை ஆராயப்படவேண்டிய தொன்றாகும். ஐரோப்பிய கொலனித்துவ வாதிகள் இங்கு வந்த வேளை நிலவுடைமை ஆமைப்பு முறைமையே வலுவுடையதாக

பாதிப்புகளை ஏற்படுத்திய போதிலும் நிலவுடமைக் கருத்தியல் சிந்தனைகளும் அதன் நடைமுறைகளுமே முதன்மை பெற்றிருந்தன.

இத்தகைய நிலவுடமை ஆதிக்க குடும்பங்களில் இருந்து சிறிய சிறிய முதலாளிகளும் புத்திஜீவிகளும் உருவாகினார்கள். குடும்ப ஆதிக்க அந்தஸ்து என்பதன் ஊடே அரசியலில் முன்னணி வகிப்பவர்கள் ஆனார்கள். சுதந்திரம் கோருவதிலும் அதனை மிகப் பணிவாகக் கேட்டு வாங்குவதிலும் அவர்களே முன்நின்றார்கள். தமது எதிர்கால இருப்பிற்கு உத்தரவாதம் வழங்கக் கூடிய நம்பிக்கைக்குரிய ஆண்ட பரம்பரைக் குடும்பங்களின் கைகளில் தான் வெள்ளைக்காரர்கள்

'ஆளப்பட்ட பரம்பரையில் வந்த மக்களும் கூட 'ராஜ குடும்பம்' 'பெரிய குடும்பம்' 'பரம்பரைப் பணக்காரர்' 'உயர்ந்த பரம்பரை' எனக் கூறி அடிமை விசுவாசத்துடன் பணிந்து நிற்கும் தன்மை எவ்வகையிலும் குறைவு படாமல் இருப்பதும் அவதானத்திற்குரியதாகும். இது இரண்டாயிரம் ஆண்டுகால நிலவுடைமைச் சிந்தனையின் வழி வந்ததாகும்.

இன்று ஆளும் வர்க்கத் தலைவர்கள் எவ்வளவிற்கு நவீன அரசியல் சிந்தனை பற்றிய பேசினாலும் நடைமுறையில் ஆண்ட பரம்பரை ஆதிக்க அரசியல் சிந்தனைகளே அவர்களது இறுதித் தீர்மானத்தை நிர்ணயிக்கின்றன. நில உச்சவரம்புச் சட்டம் நிலவுடைமைக் கருத்தியலை ஒழித்து விடவில்லை. நிலம் உள்நாட்டு வெளிநாட்டுக்





இருந்தது. அதன் பிரதான அம்சமான சாதியப் படி நிலையும் காணப்பட்டது. மேலே அந்தணன் அரசன் தொட்டு கீழே சாதாரண உடல் உழைப்பாளர்களான மக்கள் வரை படிநிலை வகையில் வாழ்ந்த முறைமை இறுக்கமானதாகவும் சமூக ஒழுங்காகவும் இருந்து வந்தது. காலனித்துவவாதிகள் இங்கு வந்து தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தி ஆட்சி அதிகாரத்தை வலுப்படுத்திய போது அவர்கள் ஏற்கனவே இருந்த இந்நிலவுடமை அமைப்பை எவ்விதத்திலும் தாக்கவோ தகர்க்கவோ விரும்ப வில்லை. நிலவுடமை அமைப்பின் ஆண்ட பரம்பரை ஆதிக்க சக்திகளுடன் சமரசம் செய்து இணங்கிக் கொண்டனர். முற்றிலும் அவர்களுடன் இயைபு கண்டு அவர்களது முழு ஒத்துழைப்புடன் தமது ஆதிக்கத்தைத் தொடர்ந்தனர். சுருங்கக் கூறின் ஐரோப்பிய கொலனித்துவ முதலாளித்துவமும் இலங்கை இந்திய நிலவுடமையும் ஒருவரை ஒருவர் திருமணம் செய்து கொண்டர் என்பதே உண்மையானதாகும். நாட்டையும் மக்களையும் அடக்கி ஒடுக்கி சுரண்டுவதிலும் சுகபோகம் அனுபவிப்பதிலும் இவர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவிக் கொண்டனர். இதனால் இந்த ஆண்ட பரம்பரையினரின் நிலவுடைமையும் சொத்துடமையும் பாதுகாக்கப்பட்டதுடன் கொலனித்து வத்தின் கீழ் அரச உயர் பதவிகளில் அமர்ந்து பெரும் பொருள் சேர்க்கவும் மக்கள் மீதான உள்ளூர் ஆதிக்கத்தைக் கொண்டிருக்கவும் முடிந்தது. இவர்களிடத்தில் மேற்கின் மொழியும் கலாசாரமும் சிலவகைப்

அதிகாரத்தைக் கையளித்துச் சென்றார்கள். இத்தகையவர்கள் சிங்கள தமிழ் முஸ்லீம் பரம்பரை ஆதிக்க குடும்பத்தினராகவே காணப்பட்டனர். சேனநாயக்கா, பண்டாரநாயக்கா, ரத்வத்தை ஜெயவர்த்தனா வகையான சிங்கள ஆதிக்க வளவுக்கார குடும்பங்களும் முத்துக்குமாரசுவாமி, சேர் பொன் இராமநாதன், சேர் வைத்தியலிங்கம் துரைசாமி மற்றும் உடையார் மணியகாரர் போன்றோர் தமிழ் நிலவுடமை ஆதிக்க குடும்பங்களும் சுதந்திரத்தை சுவைத்துக் கொண்டனர். அதே போன்றே முஸ்லீம்கள் மத்தியிலும் காணப்பட்டனர். இவர்கள் தான் இலங்கை அரசியலையும் ஆட்சிகளையும் தீர்மானிக்கும் மேட்டுக் குடியினராவர். இவர்களது குடும்ப வாரிசு ஆதிக்க அரசியல் தான் இலங்கையில் இன்றுவரை நீடித்து நிலைபெற்று நிற்கிறது.

அன்று டி.எஸ்.சேனநாயக்கா சேர் ஜோன் கொத்தலாவல போன்றோர் முன்பாகவும் பின்பு டட்லி சேனநாயக்கா, ஜே.ஆர். முன்பாகவும் ஏனையோர் பணிந்து நின்றனர். அவ்வாறே திரு பண்டாரநாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்கா இன்று சந்திரிகா குமாரணதுங்கா முன்னிலையில் அமைச்சர்கள் தொட்டு அங்கத்தவர்கள் வரை பணிந்து கூனிக் குறுகி நிற்கின்றமை அவர்களது பதவி வழியில் அல்ல. ஆண்டபரம்பரைத் தனத்தின் ஆதிக்கம் காரணமான தாகும். இத்தகைய நிலவுடைமைத் தன நடைமுறை ஆண்ட பரம்பரை யினருக்கு உரியது மட்டுமல்ல என்பது கவனத்திற்குரியது.

கம்பனிகளில் பங்குகளாக மாறி இருக்கிறது. பெரும் வியாபாரங்களை கொண்டிருப் பவர்களும் இக் குடும்பத்தவர் களேயாவர். நடை உடை பாவனையில் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கலாம். ஆனால் நிலவுடமை ஆதிக்க கருத்தியலில் மாற்றம் என்பது அடுத்த நூற்றாண்டிலும் தொடரவே செய்யும். ஆர்.பிரேமதாசா மட்டுமே இந்த குடும்ப ஆதிக்க அரசியலுக்கு அப்பால் தலைமைக்கு வந்த ஒருவராவர். அது ஒரு விதிவிலக்காகும்.

தமிழ் ஆண்டபரம்பரையினர் மத்தியில் சாதியத்திற்கு எதிரான போராட்டங்களும் அதன் பின் உருவாகிய தீவிரவாத இளைஞர்களது இயக்கப் போராட்டங்களும் ஆதிக்க அரசியலில் பாதிப்பை ஏற்படுத்தின. இருப்பினும் அவ் ஆதிக்க சக்திகள் மீண்டும் தலை நிமிரத்தருணம் பார்த்து நிற்கின்றன.

முதலாளித்துவ அரசியலை நிலவுடமை ஆதிக்க கருத்தியலே தலைமை தாங்கி வழிநடாத்து கின்றது. இவ்விரண்டும் ஒன்றை ஒன்று ஆரத்தழுவி இறுக்கமுடன் இருக்கும் வரை இலங்கையில் ஒடுக்கப்படும் சுரண்டப்படும் எந்த மக்களுக்கும் விடிவோ விமோசனமோ ஏற்படமாட்டாது. புரட்சிகர வெகுஜன எழுச்சியினால் இன்றைய அமைப்பு முறை உடைத்தெறியப்பட்டு புதிய ஜனநாயக புரட்சி நிறைவேற்றப் படுவதன் மூலமே ஆண்ட பரம்பரை ஆதிக்க அரசியலுக்கும் அதன் நீடிப்பிற்கும் முடிவு கட்டமுடியும்.

நன்றி - நூலகத்திட்டம்




# இர. சிவலிங்கம் வாழ்வும் பணியும்

## ஒரு மதிப்பீடு - ம. அழகேசன்

மலையகத்தில் எழுச்சியான காலகட்டத்தில் வாழ்ந்த கல்வியாளரான இர. சிவலிங்கத்தின் மறைவை அடுத்து அவரைப் பற்றி பலவிதமாக பலரும் எழுதுகிறார்கள். குறிப்பாக மலையக அடையாளம் இழந்து விட்டோமே என்று கவலைப்பட்டுக் கொண்டு கொழும்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் மலையகத்தின் படித்தோரில் அதிகமானோருக்கு அவரின் இறப்பு வாய்ப்பாகியுள்ளது. அதாவது அவரைப் பற்றி எழுதியும், பேசியும், கலந்துரையாடியும் அவர்கள் தங்களது மலையக அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றனர்.

60களில் மலையகத்தின் எழுச்சி முழுவதுமே இர.சிவலிங்கத்தை மையப்படுத்தியிருந்ததாக காட்டும் முயற்சிகளின் பின்னால் உள்நோக்கம் எதுவும் இருக்கிதோ என்று எண்ணத்தோன்றுகிறது. ஏனெனில் 60களில் மலையக எழுச்சியில் முக்கியப்பங்கை வகித்த இன்னொரு போக்கை சொல்லாமல் விடுவதன் மூலம் அதனை மறைக்க முயற்சிகள் எடுக்கப்படுவதாக தெரிகிறது. அதாவது 60களில் மலையக எழுச்சியில் இர.சிவலிங்கம், திருச்செந்தூரன், கிருஷ்ணன், தர்மலிங்கம் போன்றோருடைய சமூக சீர்திருத்த போக்கும், தோழர் நா.சண்முகதாசன் தலைமை மிலான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினை மையப்படுத்திய மலையகத்தின் இளம் மாக்சிஸ்ட் லெனினிஸ்டுகளின் புரட்சிகரப் போக்கும் இருந்ததை மறுக்க முடியாது. சமூகசீர்திருத்த போக்கில் ஈடுபட்டவர்களும், அவர்களுக்கு பின்னால் அணிதிரண்டவர்களும் பிற் காலத்தில் மௌனமாகி விட்டனர். புரட்சிகரப்போக்கில் ஈடுபட்டவர்களில் ஒரு சிலரைத்தவிர அதிகமானோர் மௌனமாகிவிட்டனர். குறிப்பிட்ட அந்த புரட்சிகர போக்கில் ஈடு பட்டு தற்போது மௌனமாக இருப்பவர்கள் கூட சிவலிங்கத்தின் சிறப்பை அடுத்து அந்தப் புரட்சிகர போக்கொன்று இருந்ததை மறைக்கின்றனர். சிலர் அந்த புரட்சிகர போக்கை கற்பனாரீதியானதாக காட்டவும் முயற்சிக்கின்றனர். அந்த வகையில் அவர்களும் இர. சிவலிங்கத்தின் 'சாதனைகள்' பற்றி மிகைப்படுத்தி பேசுகின்றனர்.

1960களில் சர்வதேசரீதியாக இருந்த புரட்சிகர எழுச்சிகளினாலும், அவர்களது பிற்பட்ட தொழிலாள வர்க்க நிலைப்பாட்டினாலும் அவர்கள் 1960களில் மாக்சிச லெனினிசத்தை ஏற்றுக் கொள்பவர்களாக இருந்தனர். பின்னர் அவர்களிடம் வர்க்க ரீதியாக குட்டிமுதலாளித்துவ சிந்தனைகள் மேலோங்கியதனாலும், சர்வதேச ரீதியாக புரட்சிகர போக்கிற்கு ஏற்பட்ட பின்னடைவுகளாலும் எமது நாட்டில் இனவாதம் உக்கிரமடைந்தாலும் அவர்கள் புரட்சிகர நிலைப்பாட்டை கைவிட்டனர். இர.சிவலிங்கத்தின் கொள்கையும் நடைமுறையும் 'மலையக பிரதேசவாதத்தை' பரப்புவதாக அன்று விமர்சித்த அவர்கள் தற்போது சிவலிங்கத்தின் நிலைப்பாடு சரியாக இருந்ததாக கூறுவது மட்டுமின்றி, அவர் 1998இல் இ.தொ.கா வுடனும் தொண்டமானுடனும் இணைந்ததையும் நியாயப்படுத்து கின்றனர். 1960களில் இ.தொ.கா தலைமைக்கு எதிராக பொதுவாக தொழிற்சங்க தலைமைக்கு எதிராக இர.சிவலிங்கம் தலைமையில் பல நடவடிக்கைகள் முன்வைக்கப் பட்டன. இ.தொ.கா. கூட்டங்களை குழப்புதல், கூழ்முட்டை அடித்தல் போன்றன குறிப்பிடத்தக்கன. பாரம்பரிய தொழிற்சங்க தலைமைத்துவத்தை ஒரு முனையிலிருந்து தகர்ப்பதற்கு இர.சிவலிங்கம் தலைமையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. என்பதை மறுப்பதற்கில்லை. மலையக மக்களின் கல்வி வளர்ச்சியிலும். அவர்களின் பண்பாட்டு அம்சங்களை பேணிப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தப் பட்டது என்பதும் உண்மை.



திராவிடக் கழக பகுத்தறிவுவாத நிலைப்பாட்டில் சாதியம், மதம் என்பவற்றுக்கு எதிரான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. இம் முயற்சிகள் யாவும் ஏறக்குறைய மலையகத்தின் படித்த இளம் சமூகத்தவரையே எழுச்சிகொள்ள வைத்தன. ஆனால் இலங்கை கம்யூனிஸ்ட கட்சியின் கீழ் இயங்கிய செங்கொடிச் சங்கம், புதிய செங்கொடிச் சங்கம் என்பவற்றின் அரசியல் வேலை களினூடாக தொழிலாளர் களிடையே பரவ லான எழுச்சி ஏற்பட்டன. தொழிலாளர்களிடையே இருந்து படித்த இளம் தலைமுறையினர் அவ்வெழுச்சிப் போராட்டங்களில் முக்கிய பங்கை வகித்தனர்.

எனவே இர.சிவலிங்கத்தை மதிப்பிடும் முயற்சிகள் எதுவும் 1960களில் மலையகத்திலிருந்த புரட்சிகர எழுச்சியை மறைப்பதோ, குறைத்து மதிப்பிடுவதோ ஏற்றுக்கொள்ளப்பட முடியாத தாகும். அதேபோன்று இர.சிவலிங்கத்தின் பலவீனங்களி னாலும் தளம்பலான அரசியல் நிலைப்பாட்டினாலும் இறுதியில் இ.தொ.காவுடன் இணைந்து கொண்டதற்கு தத்துவார்த்த நியாயப்பாடுகளை தேடுவது வெறும் பம்மாத்து முயற்சிகளாகவே அமையும். விரக்தியடைந்த, பலவிதமான நிலைமையில் இருந்து கொண்டு சிவலிங்கத்தின் சீரழிவான பக்கங்களை நியாயப்படுத்துவது தமது பலவீனங்களையும், விரக்தியையும் மூடி மறைப்பதற்கான ஒரு முயற்சியாகும்.

1960, 70களின் எழுச்சியான காலகட்டத்தை ஆராயும் போது இர.சிவலிங்கத்தை புறத்தொதுக்க முடியாது. மீண்டும் பாரம்பரிய தொழிற்சங்க பாராளுமன்ற அரசியலில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு இர.சிவலிங்கம் போன்றவர்களின் தளம்பலான அரசியல் நிலைப்பாடு காரணமாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளாதிருக்க முடியாது. 1971 கிளர்ச்சிக்கு பின்னால் 1977, 1983 இனவன்முறைகளுக்குப் பிறகும் ஏற்பட்ட சூழ்நிலைகளால் மலையகத்தில் இடதுசாரி அரசியல் பின்னடைவு களை சந்தித்தது. 1977 இற்கு பிறகு இர.சிவலிங்கம் அவரது டிரொஸ்கிய நிலைப்பாட்டுடனான தேசிய அரசியலை கைவிட்டு குறுகிய மலையக சிந்தனையில் மனங் கொண்டதுடன் 1983 இன வன்முறைக்குப் பிறகு இலங்கையை விட்டு இந்தியாவுக்கு வெளியேறினார். குறிப்பாக மலையக மக்களுக்கு ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் மேற்படி அவர் நாட்டை வெளியேறியதை மலையக மக்கள் நலனுக்கான ஒன்று என்று கூறமுடியாது. இதனை விமர்சனமாக பார்காது விடமுடியாது.

பிற்காலத்தில் இ.தொ.கா.வுடனும் அதன் தலைமையுடனும் அவற்றினுடைய மக்கள் விரோத செயற்பாட்டினால் செல்வாக்கிழந்த வேளையில் 1998 இ.தொ.கா.வுடன் நெருங்கிய செயற்பட சிவலிங்கம் முன்வந்தமைக்கு ஏற்கக்கூடிய நியாயங்களை கூறமுடியாது. அவர் பாரம்பரிய தொழிற்சங்க, பாராளுமன்றப் பாதையில் தனிப்பட்ட நன்மையடைய முயற்சித்தார் என்று பொதுவாகவே முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை அவ்வளவு இலகுவாக ஒதுக்கி தள்ளி விடமுடியாது.

ஆனால் தோட்டத்துரைத் தனங்களுக்கும், பாரம்பரிய தொழிற்சங்க தலைமைகளுக்கும் எதிரான மலையகமக்களின் போராட்டத்தில் இர.சிவலிங்கத் திற்கு பங்கிருக்கிறது. அவர் பகுத்தறிவுவாத கருத்துக்களை முன்னெடுத் திருக்கிறார். சீர்திருத்த வாத வேலைமுறைகளை மலையக மக்கள் மத்தியில் முன்னெடுத் திருக்கிறார். அவர் ஒரு முதலாளித்துவ மனிதாபிமானியாக வாழ்ந்துள்ளார். இவற்றுக்கு குறைவாக அவரை மதிப்பிடுவது எவ்வாறு ஒவ்வாததாக இருக்குமோ அதேபோன்று இவற்றுக்கு மேலாக மிகையாக மதிப்பிடுவதும் ஒவ்வாததே.

# மலையக தலைவர்களும் இளைஞர்களும்

மலையக வரலாற்றில் பல சந்தர்ப்பங்களில் மலையக அரசியல் தலைவர்களது பார்வை இளம் தலைமுறையினரை நோக்கி செலுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வோர் தேர்தல் காலத்தின் போதும் இளம் தலைமுறையினரை கவரும் வகையில் அதன் செயற்பாடுகள் அமைந்துள்ளமை அவதானிக்க முடிந்துள்ளது. இவர்கள் இளைஞர்களை கவரும் வகையிலான வேலைத்திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றனர், வந்துள்ளனர். அதன் அடிப்படையில், விளையாட்டு போட்டி, கலை நிகழ்ச்சி, இசை நிகழ்ச்சி, என் பற்பல. அவை மாத்திரமின்றி கிராம சேவகர் பரீட்சை, இலிகிதர் போட்டி பரீட்சை சமூர்த்தி உற்பத்தியோகத்தர் தெரிவு போட்டி, என பலவும் அடங்கும். அதன் மூலம் அரசு திறைசேரிக்கு பணம் சேர்த்துள்ளதுடன் வேலையற்ற இளைஞர்களை கடன்காரர்களாக்கி விரக்தியுற்ற நிலையில் தொடர்ந்தும் வீட்டு காவல் காரர்களாக இருப்பதுடன் இவ் இளைஞர்களை பயன்படுத்திய அரசியல்வாதிகளால் அரங்கேற்றப் படும் அவசரகால சட்டத்தினால் சாதாரணமாக வெளியில் செல்லமுடியாத நிலமை. இவர்களை வெளியில் அனுப்பி பலியிட முடியாமலும், தொடர்ந்தும் வைத்திருக்க முடியாத அவலநிலை பெற்றோருக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த தேர்தல் காலத்தில் பல வாக்குறுதிகளை முன்வைத்து வென்று ஆட்சிக்கு வந்த பொ.ஐ.ஐ.மு. அரசும் அதற்கு முண்டு கொடுக்கும் எமது அரசியல் தலைவர்களும் இதுவரை மலையக இளைஞர்களுக்கு எதுவித நன்மையும் செய்யாமல் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளமை தொடர்கின்றது. இதுஇவ்வாறிருக்க இவ் தலைவர்களால் பல இளம் தலைவர்களையும் அடையாளம் கண்டு காரியம் சாதித்து மறந்ததும் கண்கூடு. அவ்வரிசையில் அன்று ஆறுமுகம் தொண்டமானால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட டாக்டர் ஆரோன், கந்தப்பளை புவிராஜ் போன்றோருடன் இன்றைய அரை அமைச்சருமான சந்திரசேகரனால் பயன்படுத்தப்படும் அன்று லோரன்ஸ் இன்று மலையக தமிழ்ச் சங்க தலைவர் சி. இரவீந்திரன் போன்றோரும் அடக்கம். இவ்வாறு காலத்திற்கு காலம் இளைஞர்களைப் பயன்படுத்துவதற்காக தலைமைகளை தேர்ந்தெடுப்பதும் பின் இளைஞர்களை புறக்கணிப்பதும் மீண்டும் தேர்தல் வீர முழக்கம் ஆட்சேர்ப்பு புறக்கணிப்பு என எவ்வளவு காலம் தொடரப்போகின்றது. அதற்காக மலையக இளைஞர்கள் எவ்வளவு காலத்திற்கு முண்டு கொடுப்பது. அமைச்சர்களை வளர வைப்பதும், வாழவைப்பதும் அவர்களது சந்தர்ப்பவாத அரசியல் இலாபம் தேட தம்மை பலிக்கொடுப்பதும் என்பது பற்றி சிந்திப்பது இன்றைய இளம் தலைமுறையின் முன்னால் நிறுத்தப்படும் கேள்வியாகும்.

**மலையக கதிர்**

# விக்கிரமபாகுவின் சுயரூபம்

1997ம் ஆண்டிலிருந்து கடுமையான முயற்சிகளுக்கு பின்பு கடந்த ஆண்டு யூலை மாதத்தில் புதிய இடதுசாரி முன்னணி தோற்றுவிக்கப் பட்டது. அதன் ஓராண்டு நிறைவின் போது அந்த முன்னணிக்குள் ஏற்பட்ட கருத்து மோதலும் அதனால் இடம் பெற்ற கசப்பான சம்பவங்களும் கவலைக்குரியதாகும். ஆனால் தவறுகளும் தவறானவர்களும் இவ்வளவு விரைவில் தம்மை அடையாளம் காட்டிக் கொண்டமையால் புதிய இடதுசாரி முன்னணியில் உள்ள பெரும் பான்மையான கட்சிகள் திருப்தியுடன் முன்செல்ல தம்மை தகவமைத்துக் கொண்டுள்ளன. புதிய இடதுசாரி முன்னணி தொடர்ந்து விரிவடைவதற்கும் பலம் பெறுவதற்கும். அதன் ஆரம்பம் தொட்டே விக்கிரமபாகு கருனாரத்னாவும் அவரது ஆணையின் கீழ் உள்ள நவசமசமாஜக் கட்சியும் தடைக்கற்களாக. இருந்து வந்துள்ளனர். உறுதியானதும் சந்தர்ப்பவாதமற்றது மான நேர்மை மிக்க இடதுசாரிக் கொள்கை ஒன்றை வகுக்கும் பாதையில் அவர்கள் பதவிகள், குறுக்குவழிகள், சொந்தக் கட்சி நலன்களையே முதன்மைப் படுத்தி வந்தமையால் ஏனைய கட்சிகள் அவற்றுக்கு எதிராகப் போராடியே வந்துள்ளன.

ஒரு புதிய இடதுசாரி ஐக்கியத்திற்காக 'புதிய' ஜனநாயக கட்சியும் ஏனைய கட்சிகளும் ஐக்கிய முன்னணிக்குள் ஆகக் கூடிய விட்டுக் கொடுப்புகளை வழங்கி வந்தன. ஆனால் விக்கிரமபாகுவின் ஆணவம் மிக்க அதிகாரத் தன்மையும் பதவிவெறியும் ஏனைய கட்சிகளால் தொடர்ந்தும் சகித்துக் கொள்ள முடியாதவாகிக் கொண்டன. ஒருவர் எவ்வளவிற்கும் புரட்சிபற்றியும், இடதுசாரித் தீவிரம் பற்றியும் பேசலாம். ஆனால் நடைமுறையில் அவரது செயல் எத்தகையதாக அமைகின்றது என்பதே முக்கியமானதாகும். சிலரைத் தூர இருந்து பார்த்து அவரது பேச்சைக் கேட்டால் புரட்சிகரமானதாகத் தோன்றும். அதை மட்டும் நம்பி மிகவும் கிட்ட சென்று நெருங்கும் போதே அவரது சுய ரூபம் நன்கு வெளிச்சப்படும். அவ்வாறுதான் விக்கிரமபாகு என்ற 'இடதுசாரி' மனிதரின் முகமூடியும் மேலங்கியும் எத்தகையது என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. ஒரு மாகாண சபை உறுப்பினர் பதவி கிடைத்தவுடன் அதனைக் கொண்டு யூ.என்.பி. மின் செல்லப்பிள்ளையாகி மேல்மாகாண சபையின் சபாநாயகர் பதவியைப் பெற இரகசியப் பேச்சுவார்த்தை நடைபெற்றமை தான் அதிர்ச்சிக்குரியதாகும். இந்த மனிதரா? இவ்வாறு நடந்து கொண்டார் என அவரது ஆதரவாளர்கள் கூட ஆரம்பத்தில் நம்பவில்லை. ஆனால் நடந்த உண்மைகள் அனைவரையும் ஆட்டம் காண வைத்தது. பொதுசன முன்னணியின் அமைச்சர் ஒருவர் 'இடதுசாரி முன்னோடி' என்ற பெயரில் விக்கிரமபாகுவின் படத்தையும் அவரது தேர்தல் சின்னத்தையும் போட்டு ஐம்பதினாயிரம் கலர் போஸ்டர் அடித்துக் கொடுத்த கதையும் பின்பே அம்பலமாகியது. இன்னும் பல குத்துக்கரணங்கள் உண்டு. யாவும் இடதுசாரிக் கொள்கைக்காக அன்றி பதவி வெறிக்கு ஆட்பட்டேயாகும்.

இன்று புதிய இடதுசாரி முன்னணி என்ற பெயரை விக்கிரமபாகு பெயர்ப் பலகையாக வைத்திருக்க முற்படுவது ஏதோ இடதுசாரி ஐக்கியத்தில் அக்கறை கொண்டல்ல. அதன் பெயரில் பெற்ற மாகாண சபைப் பதவியை பாதுகாத்து அதன் பலாபலன்களை அனுபவித்துக் கொள்வதற்கேயாகும். இன்று அவரது நவசமசமாஜக் கட்சி தனித்து நிற்கிறது. ஏனெனில் தன்னுடன் நிற்பதாகக் காட்டிக் கொண்ட முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி ஏற்கனவே தனி வழியில் செல்கிறது. தற்போது அது முஸ்லீம் காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்து எதிர்வரும் தேர்தலிலும் நிற்க பேசிவருகிறது. ஆதலால் விக்கிரமபாகு தற்போது இந்திய வம்சாவளிப் பேரணியின் மனோ கணேசனுடன் ஐக்கியம் பூண்டு நிற்க முற்பட்டுள்ளார். அடுத்த பதவிக்கு யார் யாரைப் பயன்படுத்த முடியுமா என்பதே அவரது நோக்கமாகும்.

விக்கிரமபாகு இவ்வாறு நடந்து கொள்வதற்கு அவரது வர்க்க குடும்ப பின்னணி ஒரு அடிப்படைக் காரணியாகும். இது ஏற்கனவே சீரழிந்து சென்ற பழைய இடதுசாரித்தலைவர்களுக்கு உரிய ஒன்றேயாகும். அது வளவு ஆதிக்க குடும்பப்பின்னணியாகும். அந்தப் பரம்பரை ஆதிக்க அதிகாரத் தொனியை விக்கிரமபாகுவின் சிகப்புப் போர்வையால் மூடிமறைக்க முடியவில்லை, உரிய வேளைகளில் அந்த அதிகாரத்திமிர் வெளிவரவே செய்யும். அதன் விளைவானதே புதிய இடதுசாரி முன்னணியின் உடைவாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# 5 வருட ஆட்சியில் அரசாங்கம் புலிகள் அமெரிக்கா

- அ. பூபதி -

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஜனாதிபதி திருமதி சந்திரிகா தலைமையில் பதவிக்கு வந்து ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருதல், இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் நியாயமான அரசியல் தீர்வு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிப்பு, பொருளாதார சுபீட்சம், ஜனநாயக தொழிற்சங்க மனித உரிமைகளை மீட்டு நிலை நிறுத்தல், விலை உயர்வுகளை தடுத்து வாழ்க்கைச் செலவை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருத்தல், தொழிலாளர் உரிமைகளுக்கான தொழிலாளர் சாசனம் நிறைவேற்றல், வேலை வாய்ப்பும் வேலை பெறும் வரை உதவித் தொகை வழங்குவது, மலையக மக்களில் இந்திய கடவுச் சீட்டுப் பெற்றவர்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குதல்.

மேற்குறித்த ஒன்பது அதி முக்கிய விடயங்களில் சரியான அணுகுமுறைகளையும் தீர்வுகளையும் கொண்டு வந்து நாட்டையும் மக்களையும் சுபீட்சப்பாதையில் இட்டுச் செல்வதே தமது தலையாய கடமையென பொதுசன முன்னணி தேர்தல் வாக்குறுதி அளித்தது. பதினேழு வருடகால இருள் சூழ்ந்த யூ.என்.பி. ஆட்சியில் தத்தளித்த மக்கள் மிகுந்த எதிர்ப்பார்ப்புடன் பொதுசன முன்னணியைப் பதவிக்கு கொண்டுவந்தனர். இந்த அரசாங்கத்திற்கு தமிழ் முஸ்லீம் மலையகப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் ஆதரவு கொடுத்ததுடன் அமைச்சர் பதவிகளையும் பெற்று பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வரப்போவதாக பறைசாற்றிக் கொண்டனர்.

ஆனால் ஐந்து வருடங்கள் முடிவடைந்த நிலையில் தாங்கள் வாக்குறுதி அளித்த எந்தவொரு பிரச்சினையைத்தானும் தீர்த்து கொள்ளமுடியாத நிலையிலேயே அரசாங்கம் வந்து நிற்கின்றது. தேர்தல் காலத்தில் மக்கள் முன் வாக்குறுதிகள் வைத்து வாக்குகள் கேட்டு நின்ற போது மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு கொள்ள முடியும் என ஜனாதிபதியும் அவரது சகாக்களும் நம்பினார்கள் என்பது உண்மை. ஆனால் பதவிக்கு வந்து அவரவருக்குரிய இடங்களில் அமர்ந்து கொண்ட தும் அவர்களைச் சுற்றி உள்நாட்டு வெளிநாட்டு ஆதிக்க சக்திகள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் அரண்கள் அமைக்கத்தொடங்கிவிட்டன.



1994ல் அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை தொடங்கிய உடனேயே அதனைக் குலைக்கும் மறைமுக செயல்களில் அச்சக்திகள் ஈடுபட்டன. பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் உயர் மட்ட தூதுக் குழுவினரைக் கொண்டு பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படுவதற்குப் பதிலாக வெறும் அதிகாரிகளைக் கொண்ட தூதுக் குழுவினர் மூலம் பெயரளவிற்கான பேச்சுவார்த்தைகளே தொடரப்பட்டன. நேரடியாகவும் உள்நோக்கமின்றியும் வெளிப்படையாகவும் உயர் மட்டம் பேச்சுவார்த்தையை நோக்கிச் செல்வதற்குப் பதிலாக ஜனாதிபதி பிரபாகரன் ஆகியோருக்கிடையில் எட்டு மாதங்களுக்குள் நாற்பது கடிதப் பரிமாற்றம் இடம் பெற்றதே மிஞ்சியதாகும். இந்தக் கடிதங்கள் சமாதானத்தை நோக்கி இருப்பதற்குப் பதிலாக யுத்தம் ஒன்றை நோக்கியே காலத்தை நகர்த்திக் கொள்ள வழி வகுத்தது. விடுதலைப் புலிகளும் அதன் தலைவரான வே.பிரபாகரனும் பொறுமையாகவும் நிதானமாகவும் அச்சந்தர்ப்பத்தில் நடந்து கொள்ளவில்லை என்னும் குற்றச் சாட்டுக்கள் எழுந்திருப்பினும் ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் ஒரு போராட்ட இயக்கத்தை விடப் பன் மடங்கு பொறுப்புடனும் நிதானத்துடனும் நீண்டகால நோக்கிலும் நடந்திருக்க வேண்டும் என்பதைப் சிலர் இலகுவாகவே மறந்து கொண்டனர்.




ஆனால் இன்று வரையான அரசாங்கத்தின் யுத்த விஸ்தரிப்பு நிலைப் பாட்டை உற்று நோக்கும் போது அன்றைய பேச்சுவார்த்தை யுத்த நிறுத்தம் என்பன குழப்பப்பட்டமைக்கு புலிகள் மட்டும் காரணமானவர்கள் என்ற முழுமையான முடிவுக்கு வந்து விடமுடியாது. அன்று தோற்றுவிக்கப்பட்ட பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை சமாதானப்பாதையில் நியாயமான தீர்வுக்கான வழிகளில் சென்றுவிடாது தடுப்பதில் பல்வேறு உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் தத்தமது சுயதேவை நலன்களின் அடிப்படையில் செயல்பட்டன. அவை இன்றுவரை செயல்பட்டே வருகின்றன. பௌத்த சிங்கள மதவெறி சக்திகள், பௌத்த சிங்கள இனவெறிப் புத்திஜீவிகள், யுத்த வெறி கொண்ட உயர் நிலை ராணுவ அதிகாரிகள், யுத்தத்தின் மூலம் தத்தமது பைகளை பணத்தின் மூலம் நிரப்ப முன்னின் றவர்கள் அனை வரும் உள்நாட்டவர்கள். அதே வேளை நாட்டைத் தொடர்ந்தும் திறந்த பொருளாதாரத்தின் கீழ் தனியார் மயத்தை விரிவாக்கி பல்தேசியக் கம்பனிகளுக்கு களம் தேடிக் கொடுக்க நின்ற அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுக்கு யுத்தமே தேவையாக இருந்தது. தமது ஆயுத விற்பனையைப் பெருக்கவும் அரசு யந்திரத்தை நவீன ஆயுதங்களால் கட்டியெழுப்பவும் மக்களிடையே தீராத மோதல் பிளவுகளை நிரந்தரப்படுத்தவும் அச் சக்திகளுக்கு இந்த யுத்தம் அவசியமாக இருந்தது. ஏகாதிபத்தியமும் முதலாளத்துவமும் யுத்தங்களிலேயே உயிர் வாழ்கின்றன என்பதை நமது நாட்டின் அனுபவங்கள் நன்கு எடுத்துக் காட்டி நிற்கின்றன.

இன்றைய அரசாங்கத்திற்கு தாராள கடன் உதவி வழங்கி வரும் உலக வங்கியோ, சர்வதேச நாணய நிதியமோ தமது உதவிக்கு நிபந்தனையாக யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருமாறு ஒரு போதும் கேட்டதே கிடையாது. அரசாங்கம் யுத்தம்–இனப்பிரச்சினை விடயத்தில் மட்டுமின்றி தான் கொடுத்த ஏனைய தேர்தல் வாக்குறுதிகள் ஒன்றைத்தானும் நிறைவேற்ற முடியாமைக்கான காரணம் உள்நாட்டு வெளிநாட்டு சுரண்டும் வர்க்க சக்திகளின் வழிகாட்டலில் வழிநடந்து வந்தமையேயாகும். உலகின் மூன்றாம் உலக நாடுகளின் வளங்களைக் கொள்ளையிடுவதற்கும் சுரண்டிக் கொழுப்பதற்கும் திட்டங்களை முன் வைத்து கடன் கொடுத்து வரும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் வழங்கிய ஆலோசனைகள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதில் அரசாங்கம் எவ்வித தயக்கத்தையும் காட்டவில்லை. அதனால் முன்னைய யூ.என்.பி. ஆட்சி தொடக்கி வைத்த தாராள பொருளாதாரத்தின் கீழ் தனியார் மயபடுத்தலையும் மும்முரமாக முன்னெடுத்து வந்துள்ளது. தனியார் மயத்திற்கும் திறந்த பொருளாதார சுரண்டலுக்கும். எதிராக எழுந்துள்ள எதிர்ப்புக்களை முறியடிப்பதில் . அரசியல் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுவதிலும் இந்த அரசாங்கம் பின்நிற்கவில்லை.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பாராளுமன்ற இடதுசாரிகளின் கூட்டுடன் பதவிக்கு வந்தபோது ஆகக் குறைந்தது ஒரு தேசிய முதலாளித்துவ அரசாங்கம் செய்யக்கூடிய வரையறைக்குள் நின்றாவது செயல்படும் என எதிர்பார்த்த பலருக்கு ஐந்து வருட கால ஆட்சி பேரிடியாகவே அமைந்து கொண்டது. ஏகாதிபத்திய ஆதரவு வழிகாட்டலுடன் பெருமுதலாளித்துவ பேரினவாத யூ.என்.பி. எதைச் செய்து வந்ததோ அதனையே சாராம்சத்தில் இன்றைய அரசாங்கம் செய்து வந்துள்ளது. ஆட்சியின் தலைவர்கள் மாறியுள்ளார்களே தவிர விடயங்கள் அனைத்தும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுபவைகளாகவே இருந்து வந்துள்ளன. ஒரு உதாரணம் போதுமானதாகும். தனியார் மயத்திற்கு எதிராக தொடர்ந்தும் தொழிலாளர்கள், விவசாயிகள் மக்கள் மாணவர்கள் வீதியில் இறங்கிப் போராடி வருகிறார்கள். அவற்றுக்கு அரசாங்கம் எவ்வித செவிமடுப்பையும் காட்டவில்லை. ஆனால் தொழிலாளர் உரிமைகளுக்கான தொழிலாளர் சாசனத்தை பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்க விடாது கிடப்பில் போடவைப்பதில் பல்தேசியக் கம்பனிகளும் உள்நாட்டு முதலாளித்துவ சக்திகளும் வெற்றி பெற்றுள்ளன. இவை தான் பொதுசன ஐக்கிய முன்னணியின் ஐந்து வருட ஆட்சியின் லட்சணம். எனவே இன்றைய அரசாங்கம் யூ.என்.பிக்கு நேர்மாறான நிலைப்பாட்டின் மூலம் நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு கொள்ளும் ஒரு அரசாங்கம் அல்ல என்பதை தனது ஐந்து வருட ஆட்சியின் மூலம் நிரூபித்துள்ளது என்பதே உண்மையானதாகும்.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பேச்சு வார்த்தையை முன்னெடுப்பதற்குப் பதிலாக புலிகள் இயக்கத்தின் மீது தொடுத்த யுத்தம் ஆரம்பத்தில் சமாதானத்திற்கான யுத்தம் என்னும் முழக்கத்துடனேயே முன்னெடுக்கப்பட்டது. ஆனால் அது விரைவாகவே புலிகள் இயக்கத்தை தடைசெய்து பயங்கரவாதத்திற்கு எதிரான, யுத்தமாக மாற்றம் கண்டது. இந்த யுத்தத்தில் புலிகள் இயக்கம் குடாநாட்டில் இருந்து வன்னிப் பெரு நிலப்பரப்பிற்கு தள்ளப்பட்டது. அதே போன்று பாதை திறப்பது என்னும் பெயரில் வன்னியின் சில பகுதிகளும் ராணுவத்தால் கைப்பற்றப்பட்டது. இவற்றை எல்லாம் கூட்டிக் கழித்த அரசாங்கம் எண்பது வீதம் யுத்தத்தில் வெற்றி பெற்றுவிட்டதாகவும் மிகுதியானவற்றை விரைவில் வெற்றி கொண்டு விடுவோம் என்று கூறி நிற்கின்றது.



நிலப்பரப்பும் கணிசமான சனத்தொகையும் ராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ள அதேவேளை வடக்கிலும் கிழக்கிலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் இன்னும் முக்கியத்துவம் உடைய பகுதிகளாகவே இருக்கின்றன. அப்பிரதேசங்களில் அவர்களது ராணுவபலம் மிகுந்த வல்லமையுடன் தான் காணப்படுகின்றது. ராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் புலிகள் ஊடுருவி தாக்குதல்களில் ஈடுபடுவது அதிகரித்தே வருகின்றது. இது போராட்டத்தின் நீடிப்பையும் அதனை ராணுவ ரீதியில் முடிவுக்கு கொண்டு வர இயலாது என்னும் உண்மையையும் எடுத்துக் காட்டுகின்றது. புலிகள் இயக்கம் வடக்கிலும் கிழக்கிலும் குறிப்பிடத்தக்க நிலப்பரப்பையும், கடல் பரப்பையும் தமது கட்டுப் பாட்டின் கீழ் வைத்திருக்கிறார்கள். அத்துடன் கணிசமான மக்கள் தொகையும் அப்பகுதிகளில் காணப்படுகிறது. எனவே பேரினவாத யுத்தவெறியர்கள் விரும்புவது போன்று புலிகள் இயக்கத்தை அழித்தொழித்து பௌத்த சிங்கள மேலாதிக்க தேசிய வெறியை நிலை நாட்டிக் கொள்ளலாம் என்பது வெறும் கனவாகவே இருக்கும்.

அதேவேளை புலிகள் இயக்கம் தமது அரசியல் ராணுவ போராட்டப்பாதையில் கடந்த கால அனுபவங்களில் இருந்து பல்வேறு விடயங்களைப் பட்டறிவாகக் கொள்ளல் வேண்டும். போராட்டத்தை தனியே ராணுவ செயற்பாடாக மட்டும் முன்னெடுப்பதற்குப் பதிலாக அரசியல் வெகுஜனத் தளத்திற்கு இட்டுச் செல்லல் வேண்டும். அதன் வழியில் மக்கள் மத்தியில் உள்ள ஏனைய தமிழர் அமைப்புக்கள். முஸ்லீம் மக்கள், நட்பு அரசியல் சக்திகள் உட்பட அனைவரையும் பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தில் ஐக்கியப்படுத்திக் கொள்வதும் அவசியமாகின்றது. அத்துடன் தெற்கே சிங்கள மக்கள் மத்தியில் உள்ள உழைக்கும் மக்களையும் பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளையும் பிரித்துப் பார்த்து சாதாரண சிங்கள மக்களுடனும் அவர்கள் மத்தியில் உள்ள நேர்மையான இடதுசாரி சக்திகளுடனும் ஐக்கியம் காண்பது தமிழ்த் தேசிய இனவிடுதலைப் போராட்டத்திற்கு அவசியமானதாகும். மேலும் ஏகாதிபத்தியவாத, பிராந்திய மேலாதிக்கவாத சக்திகளின் அடிப்படையான உள்நோக்கத்தைப் புரிந்து கொண்டு செயல்படுவது அவசியம். அத்தகைய சக்திகளைப் பயன்படுத்த முடியும் என இன்னும் நம்புவது விவேகமானதாக இருக்க முடியாது.

இவை அனைத்தையும் கவனத்தில் கொண்டு கடந்த ஒன்றரை தசாப்த கால பட்டறிவின் மூலம் தமது நிலைப்பாடுகளை மறுமதிப் பீட்டிற்கும் சுய விமர்சனத்திற்கும் உள்ளாக்குவது புலிகள் இயக்கத்திற்கு தேவையான ஒன்றாகும். அது முழுத் தமிழ்த் தேசிய இனத்திற்கும் வடக்கு கிழக்கின் சகல மக்களின் எதிர்காலத்திற்கும் அவசியமான தாகும். பேரழிவுகளுக்கும் பாரிய இழப்புகளுக்கும் விபரிக்க முடியாத துன்பதுயரங்களுக்கும் உள்ளாகி நிற்கும் தமிழ் மக்களின் வாழ்வு மேலும் சிதைக்கப்படாமல் பாதுகாப்பதற்கு உரிய அரசியல் போராட்ட வழிமுறைகள் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். அத்தகைய தேர்வு சரணடைதலாகவோ அன்றி போராட்டத்தை கைவிடுதலாகவோ அமையக் கூடாது என்பதும் கவனத்திற்குரியதாகும்.

புலிகள் இயக்கத்தை தோற்கடிக்கவோ அன்றி அழித்தொழிக்கவோ முடியாத நிலையில் அரசாங்கம் இருப்பதன் காரணம்

தொடர்ச்சி 7ம் பக்கம்

நன்றி - நூலகத்திட்டம்



# அரசு சார்பற்ற நிறுவனங்கள்

ஜேம்ஸ் பெட்ராஸ்

1980களின் ஆரம்பத்தில் நவதாராள ஆளும் வர்க்கங்களைச் சேர்ந்த சிந்தனையாளர்கள், தங்களது கொள்கைகள் சமூகத்தை பிளவு படுத்திவிட்டது மட்டுமல்லாமல் சமூகத்தில் பெரிய அளவில் அதிருப்தியையும் தோற்றுவிப்பதை உணர்ந்த, நவதாராள அரசியல்வாதிகள் அதற்கேற்ற ஒரு இணையான ஒரு செயல்திட்டத்தை உருவாக்கி நிதியுதவி செய்து "கீழிருந்து" ஏற்படுத்தினார்கள். இந்த "அரசு எதிர்ப்பு" கொள்கையுடன் வேர்களிலிருந்து தொடங்கும்" இந்நிறுவனம் வர்க்கங்களிடையே ஒரு சமூகத்தளத்தை உருவாக்கிக் கொள்ளவாரம்பித்தனர். பொருளாதாரரீதியாக நவதாராள மூலதாரங்களைச் சார்ந்த இந்த நிறுவனங்கள் உள்ளூர் தலைவர்களையும் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடும் சமூகங்களையும் தம்முடன் இணைத்துக் கொள்வதில் சமூக–அரசியல் இயக்கங்களுடன் போட்டி போடுகின்றன. 1990 வாக்கில் ஆயிரக்கணக்கில் உலகெங்கிலும் பெருகிய "இவ்வகை அரசுசாரா நிறுவனங்கள்" கிட்டதட்ட நான்கு மில்லியன் டாலர்கள் நிதியுதவி பெற்றுவந்தன.

## நவதாராளவாதமும் அரசு சாரா நிறுவனங்களும்:

அரசுசாரா நிறுவனங்களின் அரசியல் இயல்புகள் பற்றிய குழப்பம் 1970களில் சர்வாதிகாரங்களுடன் தொடர்புடைய அவற்றின் ஆரம்ப வரலாற்றிலிருந்தே தொடங்குகிறது. இந்தக் காலக்கட்டத்தில் இவை ராணுவ சர்வாதிகாரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் ஆதரவு வழங்கி. மனித உரிமை மீறல்களை கண்டனம் செய்தன. நவதாராள சர்வாதிகாரங்களை உண்டாக்கி முதல் கட்ட அதிர்ச்சி வைத்தியத்தை சகித்து மீள்வதற்கு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவ நிறுவப்பட்ட "இலவச உணவு முகாம்களை' இந்த அரசு சாரா நிறுவனங்கள் ஆதரித்தன. இந்த காலகட்டத்தில் இடசாரிகளிடையே கூட அரசுசாரா நிறுவனங்கள் ஒரு சாதகமான படிமத்தை பெற்றன. "முற்போக்கு முகாமின்" ஒரு பகுதியாக அவை கருதப்பட்டன.

ஆனால் அப்போதும் அரசு சாரா நிறுவனங்களின் வரையறைகள் தெளிவாகவே இருந்தன. உள்நாட்டு சர்வாதிகாரங்களின் மனித உரிமை மீறல்களை கண்டனம் செய்த அதேநேரத்தில், அவற்றுக்கு நிதியுதவியும் அறிவுரையும் வழங்கும் புரவலர்களான அமெரிக்க ஐக்கிய நாடுகளையோ, ஐரோப்பாவையோ இவை கண்டிக்கவேயில்லை. நவதாராள நிதிக் கொள்கையும் மனித உரிமை மீறல்களும் ஏகாதிபத்திய அமைப்பின் புதிய திருப்பம் என்பதாக இணைந்து நோக்குவதற்கான முனைப்பும் அவற்றுக்கு இல்லை. வெளியிலிருந்து பெறப்படும் நிதியுதவி விமரிசனத்தின் எல்லைகளையும் மனித உரிமைக் காப்பு நடவடிக்கைகளையும் குறுக்கிவிட்டது என்பது வெளிப்படை.

1980களின் ஆரம்பத்தில் நவதாராளமாக்கலின் மீது எதிர்ப்பு அதிகரித்தவுடன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய அரசுகள், உலகவங்கி ஆகியவை NGOகளுக்கான தங்கள் நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தன. நவதாராள மாதிரியை கேள்விக்குள்ளாக்கும் சமூக இயக்கங்களின் வளர்ச்சிக்கும், அவற்றை ஒடுக்கும் வகையில் NGOக்களும் உலகவங்கியும் ஒருங்கிணையும் மையப்புள்ளியாக இருந்தன. NGOக்கள் ஒரு "இடதுசாரி" கண்ணோட்டத்துடன் சமுதாயத்தை ஆதரித்து மேலோட்டமாக அரசை விமரிசிக்க, இதே காரியத்தை வலதுசாரிகள் "சந்தை" என்ற பெயரில் செய்தார்கள். ஆனால் உண்மையில் உலக வங்கியும், நவதாராள அரசுகளும், மேற்கத்திய அடிப்படை நிறுவனங்களும் ஒன்றுசேர்ந்து,

> **அரசு சார்பற்ற நிறுவனங்கள் உண்மையில் அரசு சார்பற்றவை அல்ல. அவை அந்நிய அரசுகளிடமிருந்து நிதி உதவி பெறுகின்றன.**

பன்னாட்டுக்கழகங்களினால் (MNCs) பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூக சேவை மூலம் நஷ்ட ஈடுகொடுத்து, தேசிய நலவாழ்வுத் திட்டங்களை முறியடித்து வந்தன. வேறு வார்த்தைகளில் சொல்லப் போனால் ஒருபுறம் நவதாராள அரசுகள் மேலே இருந்து கொண்டு சமூகங்களை நாசப்படுத்துவதற்காக மலிவான இறக்குமதிகளை நாட்டினுள் குவித்தும், வெளிநாட்டுச் செலாவாணியை அதிகரித்தும், தொழிலாளர் நலனுக்குரிய சட்டங்களை நீக்கியும், குறை கூலி உழைப்பாளிகள்–வேலையற்றோர் என்ற நாளுக்கு நாள் பெருகும் கூட்டத்தையும் உருவாக்கி விடுகின்றன. மறுபுறம் NGOக்கள் "சுய உதவி", திட்டங்கள் "பரவலான கல்வித்திட்டம்", "வேலைப்பயிற்சி" ஆகியவற்றை வழங்கி ஏழைகளுக்குள் சிறுசிறு குழுக்களை உருவாக்கி, உள்ளூர் தலைவர்களுடன் ஒத்துழைக்கச் செய்து, அமைப்புக்கு எதிராக எழக்கூடிய ஒருங்கிணைந்த போராட்டங்களை ஒடுக்கிவிடுகின்றன.

இப்படியாக NGOக்கள் நவதாராளமாக்கலின் மேல்நிலையிலுள்ளவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாகி, உள்ளூர் திட்டங்களுடன் தங்கள் நாசவேலைக்கு ஆதாயம் தேடிக்கொண்டு, நவதாராள வாதத்தின் "சமூக முகமாக" மாறிவிட்டன. அதாவது, நவீனமய வாதிகள் ஒருவகை "குறடு" வேலையை அல்லது இரட்டை நிலைப்பாட்டை உருவாக்கினார்கள். துரதிருஷ்டவசமாக இடதுசாரிகளில் பலரும் மேலிருந்தும் வெளியிலிருந்தும் செயல்படும் "நவீன தாராளமயவாதத்தை" (சர்வதேச நிதி நிறுவனம், உலகவங்கி) மட்டுமே மையப்படுத்தினார்களே ஒழிய கீழிருந்து (NGOs, சிறு நிறுவனங்கள்) எழும்பும் நவீன தாராளமயமாக்கலை விட்டுவிட்டார்கள். இந்த தவறு ஏற்படுவதற்கான முக்கிய காரணம், பல முன்னாள் மார்க்ஸிஸ்டுகள் NGOக்களின் வழிமுறைக்கும் நடைமுறைக்கும் மாற்றப்பட்டுவிட்டதுதான். அரசு எதிர்ப்புவாதம் என்பதே வர்க்க அரசியலிலிருந்து "சமூக முன்னேற்றத்துக்கும்" மார்க்ஸீயத்திலிருந்தும் NGOக்குமாக மாற்றிச் செல்லும் பயணச் சீட்டாகும்.

NGOக்கள் அப்பட்டமாக "அரசு" அதிகாரத்துக்கு எதிரான ஒரு நிலையில் நிறுத்துகின்றன. உள்நாட்டு அதிகாரம் மக்களுக்கு அணுக்கமானதாகவும் அதிக பயனுள்ளதாகவும் இருக்கின்றன, என்றும் அரசு அதிகாரம் குடிமக்களிடமிருந்து ஒருங்கிணைந்த தேசிய சக்தி தூரவிலகி தன்னிச்சையாக, கொடுங்கோன்மையாக செயல்பட்டு மக்களின் நன்மைக்கு மாறான, எதிரிடையான தன்மையில் வளரக்கூடும் என்றும் இவை வாதிடுகின்றன. இதன் எதிரிடைவாதம் உண்மையாகியிருக்க ஒரு சில வரலாற்று உதாரணங்களைத் தவிர மற்றபடி தேசிய அதிகாரத்துக்கும் "உள்ளூர்" அதிகாரத்துக்கும் இடையிலான முக்கியமான உறவை இது இல்லாமல் செய்துவிடுகின்றது. இதன் மூலம், ஒரு அடக்கியாளும் சுரண்டும் வர்க்கத்திடம் இருக்கும்போது உள்ளூர் முற்போக்கு முயற்சிகளை ஒடுக்கிவிடும் அரசு அதிகாரமானது, முற்போக்கு சக்திகளின் கையில் இருந்தால் இம்முயற்சிகளுக்கு உரமுட்டும் என்ற அப்பட்டமான உண்மையை மறுக்கின்றன.

அரசு அதிகாரத்துக்கும் உள்ளூர் அதிகாரத்துக்குமான எதிரெதிர் நிலையை நியாயப்படுத்த, உள்ளூர் நிறுவனங்களுக்கும் நவதாராள அந்நிய நன்கொடையாளர்களுக்கும் (உலகவங்கி, சந்தை அரசு



களுக்கும் இடையே NGOக்கள் தரகர்களாக செயல்படு கின்றன. ஆனால் இதன் பலனாக, உள் ளூர் போரா ட்டங் களுக் கும் நிறு வனங்களுக் குமிடையி லான உற வையும், தேசிய – சர்வதேசிய அரசியல் இயக்கங்க ளுக்கிடை மிலான உற வையும், துண்டித்து நவதாராள அரசுக ளைத்தான் இவை வலுப் படுத்து கின்றன: "உள்ளூர் நடவடிக்கை"களின்மேல் கவனம் செலுத்துவது நவதாராள அரசுகளுக்கு நன்மை செய்கின்றன. காரணம் அது பெரிய அளவிலான சமூக–பொருளாதார கொள்கையில் உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்களின் அடக்கு முறையை அனுமதிப்பதோடு, நாட்டின் வளங்களை ஏற்றுமதி செய்யும் முதலாளிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் மானியமாக வழங்கவும் செய்கின்றது.

ஆக, அபரிதமான தேசிய சொத்துக்களை வசதியான தனியார்களுக்கு மாற்றும் வேலையை நவதாராளவாதிகள் செய்து வந்த வேளையில், NGOக்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் பங்கேற்க வில்லை. மாறாக, உள்ளூர் தனியார் திட்டங்களில் ஈடுபட்டு, தனியார் நிறுவன சொல்லாடல்களை (சுய உதவி) உள்ளூர் சமூகங்களிடையே பரப்பி, சிறு நிறுவனங்களில் கவனத்தைக் குவித்தன. "அரசுக்கு எதிரான நடவடிக்கை" "சிவில் சமூகங்களை உருவாக்குதல்" என்ற பெயரில் NGOக்கள் சிறு முதலாளிகளுக்கும் தனியார்மயமாக்குதலால் பயனடையும் ஏகபோக சந்தையாளர்களுக்குமிடையே ஒரு கொள்கைரீதியான பாலத்தைக் கட்டியெழுப்பின. வசதிபடைத்தவர்கள் தனியார்மயத்தின் காரணமாக பெரும் பொருளாதார சாம்ராஜ்யங்களை தமதாக்கி கொண்ட வேளையில், NGOக்கள் மத்தியவர்க்க தொழில் நிபுணர்கள், அலுவலகங்களை நடத்தவும் போக்குவரத்துக்களுக்கு செலவிடவும் இன்னபிற சிறு அளவிலான பொருளாதார நடவடிக்கைகளுக்கும் தேவையான சிறுதொகைகளைப் பெற்றுக்கொண்டனர்.

இதில் முக்கியமான அரசியல் நோக்கில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், NGOக்கள் மக்களில் சில பகுதியினரை அரசியல் பிரக்ஞை இல்லாதவர்களாக்கி, பொது ஊழியர்களுக்கான அவர்களது அர்ப்பணிப்பை பலமிழக்கச் செய்து, வீரியமிக்க தலைவர்களை சிறுசிறு திட்டங்களில் இணைத்து பணிபுரிய வைத்துள்ளன என்பதுதான். NGOக்கள் பொது பள்ளி ஆசிரியர் போராட்டங்களில் கலந்துகொள்ளாமல் நழுவிவிடுகின்றன. ஏனென்றால் நவதாராள அரசுகள் பொதுக் கல்வியையும், மக்களுக்கு அறிவுறுத்தபவர்களுக்கும் எதிரானவை. அப்படி ஒருவேளை NGOக்கள் குறைவான ஊதியத்தையும் குறைந்த பட்ஜெட்டையும் எதிர்த்து வேலைநிறுத்தங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் ஆதரித்தாலும் அவை மிகவும் அரிதாகவே இருந்தன. NGOக்களின் கல்விக்கான நிதி நவதாராள அரசுகளிடமிருந்து வருவதால், பொது கல்வியாளர்களின் போராட்டங்களுக்கு NGOக்கள் ஆதரவு தருவதில்லை. ஆக, நடை முறையில் "அரசு சாரா" என்றால் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு செலவு செய்வது, ஏற்றுமதி செய்யும் முதலாளிகளுக்கு மானியங்களை வழங்கி நவதாராளவாதிகளுக்கு தாராள நிதி இருப்பை உறுதிச்செய்வது என்று அர்த்தமாகி விட்டது. இதன் மூலம் சிறு தொகைகள் அரசிலிருந்து அரசு சாரா நிறுவனங்களுக்குப் போய்ச் சேரும்.

உண்மையில் அரசு சாரா நிறுவனங்கள் அரசு சாராதவை அல்ல. அவை அந்திய அரசுகளிடமிருந்து நிதியுதவி பெறுகின்றன அல்லது உள்நாட்டு அரசுகளின் தனியார் சப்–காண்ட்ராக்டர்களாக செயல்படுகின்றன. பலமுறை வெளிப்படையாக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அரசு நிறுவனங்களுடன் கூட்டு சேருகின்றன. இந்த "சப்காண்ட்ராக்டர்" முறை தொழில் நிபுணர்களை குறிப்பிட்ட காண்ட்ராக்டுகளுடன் பிணைத்து உபயோகமில்லாதவர்களாக்கி, அவர்களிடத்தில் தற்காலிக தொழில், நிபுணர்களை அமர்த்தி விடுகிறது. ஒரு சமூகநல அரசு வழங்கக்கூடிய நீண்டகால அடிப்படையிலான தொடர்ச்சியான திட்டங்களை NGOக்கள் வழங்கமுடியாது. மாறாக அவை குறுகிய சமூகக் குழுக்களுக்கு குறைந்த அளவு உதவிகளை வழங்குகின்றன. எல்லாவற்றையும்விட முக்கமிமானது என்னவென்றால் இவற்றின் நடவடிக்கைகள் சம்பந்தமாக வெளிநாட்டு புரவலர்களுக்குத்தான் பதில் சொல்ல வேண்டிய அவசிய மிருக்கிறதே ஒழிய, உள்நாட்டு மக்களுக்கு அல்ல. இவ்வகையில் தான் NGOக்கள் சமூக திட்டங்களை உள்நாட்டு மக்களின் கையிலிருந்தும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்களிடமிருந்தும் பிடுங்கி மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத வெளிநாட்டு அதிகாரிகளுக்கும் அவர்களுக்கு உள்ளூரிலிருந்து சேவகம் புரியும் அதிகாரிகளுக்கும் வழங்கி ஜனநாயகத்தை இழிவுபடுத்தி வருகின்றன.

NGOக்கள் மக்களின் கவனத்தையும், போராட்டங்களையும் தேசிய பொருளாதாரத்திலிருந்து தூர நகர்த்தி, உள்ளூர் சமூக

> **வர்க்க ஒருமைப்பாட்டைக் குலைப்பதற்க NGOக்களின் பணபலம் சமூகத்தின் ஒரு சாராருக்கு வழங்கப்படுகிறது. அவர்கள் தனித்தனியே NGOக்களை ஏற்படுத்தி வெளிநாட்டு நிதி உதவிகளைக் கோருகிறார்கள்**

சேவைகளைப் பெறும் சுய–சுரண்டலை நோக்கி இட்டுச் செல்கின்றன. இது சமூக நிதி ஒதுக்கீட்டைக் குறைத்து அரசு நிதியை தனியார் வங்கிகளுக்கு மாற்றி அங்கு அது வாராக்கடன்களாக்கப்பட்டு அதன்பின் அந்நிதி ஏற்றுமதியாளர்களுக்கு கடன்களாக அளிக்கப்படுகிறது. இந்த சுய–சுரண்டலுக்கு (சுய–உதவி) அர்த்தம் என்னவெனில், ஏற்கனவே அரசுக்கு வரிகளைச் செலுத்தி அதற்குப் பிரதிபலனாக ஒன்றுமே கிடைக்கப்பெறாத 'உழைக்கும் மக்கள் பற்றாக்குறையான ஆதாரங்களை வைத்து மேலும் அதிக மணி நேரங்கள் உழைக்க வேண்டும் என்பது அர்த்தமாகும். முதலாளிகள் தொடர்ந்து அரசிடமிருந்து பெற்றுவரும் சேவைகளை பெற, தங்களிடமுள்ள பற்றாக்குறையான சக்தியையும் கூட விரையம் செய்யவேண்டும். இன்னும் அடிப்படையாகப் பார்த்தால், NGOக்களின் "தனியார் தன்னார்வ நடவடிக்கை" என்கிற கொள்கை, "பொது" என்பதன் அர்த்தத்தையே இழிவு செய்து விடுகிறது. தனது மக்களைப் பாதுகாத்து அவர்களுக்கு வாழ்வையும் சுதந்திரத்தையும், இன்பத்தைத் தேடும் உரிமையையும் வழங்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு என்ற எண்ணத்தையே இழிவு படுத்திவிடுகின்றன. குடிமக்களின் நல்வாழ்வுக்கு நாட்டின் அரசியல் பொறுப்புணர்வு அவசியம் என்பதையே மறுத்துவிடுகின்றன. பொதுவான பொறுப்புணர்வு, என்ற இந்த எண்ணத்துக்கு எதிராக சமூகப் பிரச்சனைகளுக்கு தீர்வாக நவதாராளவாதத்தின் தனியார் பொறுப்புணர்வு தனியார் சொத்துக்கள் என்ற எண்ணத்தை NGOக்கள் முன்னிறுத்துகின்றன. இதன் பலனாக ஏழை மக்கள் மீதான சுமை இரட்டிப்பாகிறது. அவர்கள் நவதாராள அரசை பொருாளதார ரீதியில் பலப்படுத்துவதற்காக தொடர்ந்து வரிகளைச் செலுத்துவதுடன், தங்கள் சுயதேவைகளை நிறைவேற்றிக்கொள்ள தனிப்பட்ட சுய சுரண்டலுக்கு ஆட்படுகிறார்கள்.

## NGOக்களும் சமூக-அரசியல் இயக்கங்களும்

NGOக்கள் வலியுறுத்துவது திட்டங்களைத்தானே ஒழிய, இயக்கங்களை அல்ல. பற்றாக்குறையாக உற்பத்தி செய்ய மக்களை இவை "ஒன்றுபடுத்து"மே ஒழிய, உற்பத்திசாதனங்களையும் செல்வத்தையும் தம் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் போராட்டத்தில் அல்ல. அவை கவனம் செலுத்துவது திட்டங்களுக்கான தொழில்நுட்ப நிதியுதவியின் மீதுதானேதவிர மக்களின் அன்றாட வாழ்வை மாற்றும் அமைப்பு நிலைமைகளின் மீது அல்ல. இடதுசாரிகளின் மொழியை NGOக்கள் பயன்படுத்திக்கொள்கின்றன : "பரவலான அதிகாரம்" "உரிமையாக்கம்" "ஆண்–பெண் சமத்துவம்" "தக்கவைக்கக் கூடிய வளர்ச்சி" கீழிருந்து மேலான தலைமை" இதில் பிரச்சினை என்னவென்றால் இந்த மொழிப்பிரயோகமானது நிதியுதவி செய்பவர்கள் மற்றும்

தொடர்ச்சி 11ம் பக்கம்.

நன்றி - நூலகத்திட்டம்



# அகிம்சையின் மறைவில் வன்முறையின் தோற்றம்

தமிழரசுக் கட்சித் தலைமையின் அகிம்சாவாதம் அவர்களுக்கு அகிம்சையை விட வேறு வழி இயலாததன் விளைவு என்பதற்கு நிறைய ஆதாரங்கள் அக் கட்சியின் வரலாற்றில் உள்ளன. சத்தியாக்கிரகத்தைக் கூடச் சரியாகத் திட்டமிட இயலாமலும் சிங்கள மக்களிடையே இருந்த நல்ல சக்திகளை எல்லாம் கவனமாகப் புறமொதுக்கியும் வந்த ஒரு தலைமையால் பாராளுமன்றப் பதவிக்கான வழியை விட வேறொரு அகிம்சை வழியையும் காட்ட முடியவில்லை. சாதியத்திற்கு எதிரான போராட்டம் வன்முறையானது என்று தார்மீகக் கண்ணீர் வடித்தவர்களின் பின்னால் இளைஞர்களின் வன்முறைப் போக்கு படிப்படியாக வளர்ந்து வந்தது. இதை ஊக்குவித்த அமிர்தலிங்கத்துக்குப் அந்த இளைஞர்களது எதிர்காலப் போக்கையோ எதிர்பார்ப்புக் களையோ பற்றிய பார்வைத் தெளிவு இருந்திருந்தால் அவர் அவர்களைத் தனது அரசியல் வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது பற்றிக் கூடிய கவனங்காட்டி யிருக்கக் கூடும்.


சிறிய அளவிலான வன்செயல்களைக் கண்டிப்பதில் தமிழரசுக் கட்சித் தலைமை காட்டிய தயக்கத்திற்குப் பல வேறு விளக்கங்களும் இருக்கலாம். எப்படியும் இளைஞர்கள் அதை ஒரு மறைமுகமான அங்கீகாரமாகக் கொண்டதையும் குற்றங் கூற இடமில்லை. யாழ்ப்பாண மேயராக இருந்த துரையப்பாவின் மீதான கொலை முயற்சி முதலில் தோல்வி கண்ட போது தமிழரசுக் கட்சி வட்டாரங்கள் அம் முயற்சிக்கான காரணங்களை அரசியல் சாராத விடயங்களில் தேடின. கொலை முயற்சியைக் கட்சிக்கு உள்ளே விசாரணை நடத்தி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் கட்சி மேலிடம் தவறிவிட்டது.


1972ல் பதவி விலகிய பின்பு, காங்கேசன்துறை இடைத் தேர்தல் நியாயமற்ற முறையிற் பிற்போடப்பட்டது பற்றி முன்பு குறிப்பிட்டேன். இடைத் தேர்தலை நடத்த வடக்கில் நிலைமை சுமுகமாக இல்லை என்ற காரணம் ஏற்கக் கூடிய ஒன்றாக இருக்கவில்லை. இடைத் தேர்தலில் வி. பொன்னம்பலம் செல்வநாயகத்தை எதிர்த்துப் போட்டியிட்டார், அன்றைய அரசியற் சூழலில் அத் தொகுதியில் தமிழரசுக் கட்சியைத் தோற்கடிப்பது இயலுமான ஒன்றல்ல. தமிழர் ஐக்கிய முன்னணி என்ற பேரில் உருவான போட்டியான தமிழ்த் தேசியவாத அரசியற் கட்சிகளை இல்லாமற் செய்யும் ஒரு முயற்சி என்பது தெளிவான விடயம். 1972ன் புதிய அரசியல் யாப்பை மையமாக வைத்து தமிழரசுக் கட்சி த.ஐ.முன்னணியை அதே ஆண்டு தோற்றுவித்தது. அதில் யூ.என்.பி. பிரமுகர் தேவநாயகமும் இ.தொ.கா தலைவர் தொண்டமானும் பங்காளிகளானதும் அம் முன்னணியின் அரசியற் தன்மை பற்றிய வேறு சந்தேகங்களையும் எழுப்பியது. இதனாலேயே வடக்கில் சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் முக்கியஸ்தரான வி.பொன்னம்பலத்திற்கு ஆதரவு தருவது பற்றிய கடுமையான கருத்து வேறுபாடுகளின் நடுவில், சில மாக்சிய லெனினிய வாதிகளும் வி.பொன்னம்பலத்துக்கு ஆதரவு தெரிவித்தனர்.

தேர்தலில் வி.பொன்னம்பலத்தை ஆதரிக்குமாறு கோரிப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர்கள் விடுத்த ஒரு அறிக்கை செய்தி ஏடுகளில் வந்தது. தேர்தல் முடிவுகள் செல்வ நாயகத்தின் வெற்றியை அறிவித்தன. அவருக்கு எதிராக விழுந்த வாக்குக்கள் அன்று வடக்கில் இருந்த சூழ்நிலையில் கணிசமானவையே. இதனாலோ என்னவோ, செல்வ நாயகத்தை எதிர்த்து நின்ற இனத் துரோகிகளாக அப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கருதப்பட்டனர். அறிக்கையில் ஒப்பமிட்ட ஒவ்வொருவருக்கும் ஒரு கொலை மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டது. தமிழரசுக் கட்சியின் மேலிடத்திற்கு சிலருக்காவது தெரியாமல் இது நடக்கவில்லை என்பது என் எண்ணம்.

வடக்கில் தமிழ் இளைஞர்கள் பொலிஸ் அதிகாரிகள் பற்றியும் தாங்கள் துரோகிகள் என்று கருதிய அரசியல்வாதிகள் பற்றியும் கொண்டிருந்த பகைமை உணர்வின் சரி பிழைகளும் நியாய அநியாயங்களும் எவ்வாறிருந் தாலும் இவை அரசியற் கோணத்தில் மதிப்பிடப்பட்டு மாற்று நடவடிக்கைகளும் அரசியல் முடிவுகளாகவே எடுக்கப்பட்டிருக்க வேண்டும். மாறாக, வடக்கில் இளைஞர்கள் முகங்கொடுத்த பிரச்சினைகளை தமக்கு வசதியாகப் பயன்படுத்தித் தமது தேசியவாத அரசியலை வளர்த்த தமிழரசுக் கட்சித் தலைமை இளைஞர்கட்கு வழிகாட்டுவதில் ஒரு நழுவல் போக்கையே கடைப்பிடித்தது.

தமிழரசுக் கட்சிக்குள் பலவேறு அரசியற் போக்குக்கள் எப்போதுமே இருந்து வந்துள்ளன. போராட்ட முனைப்புடையவர்கள் கட்சி அதிகாரத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகப் பின்தள்ளப்பட்டனர் அல்லது செல்வநாயகத்தின் 'மிதவாத' அரசியலை ஏற்றுக்கொண்டனர். மக்களால் தெரிவு செய்யப்படாத மு.திருச்செல்வம் கட்சியின் மீது செலுத்திய ஆதிக்கம்







## தந்தையும் மைந்தரும் (16)

இளைஞர்களை ஒரு மாற்றுத் தலைவரை நோக்கி உந்தின. இந்த இடைவெளியையே அமிர்தலிங்கம் அன்று தனதாக்கிக் கொண்டார். ஆயினும் அவருடைய தேவையும் இளைஞர்களுடைய தேவையும் முற்றிலும் வேறு, என்பதைச் செல்வநாயகத்தின் மரணத்தின் பின்பே இளைஞர்கள் அடையாளம் கண்டனர்.

பிரிவினை, ஆயுதப் போராட்டம் என்ற கருத்துக்கள் 1970க்குப் பின்பு சிலருடைய மனங்களில் ஆழமாக வேரூன்றிவிட்டன. நேரடியாக அரசியற் களத்தில் அவர்களது நிலைப்பாட்டை முன்வைக்க வசதி இல்லததால் தமிழரசுக் கட்சியை ஒரு தளமாகவும் நிழலாகவும் அவர்கள் பயன்படுத்தினர். இவர்களது நியாயமான மனக் கொதிப்பையும் அதற்காக அவர்கள் தேடிய அரசியற் பாதையையும் எவரும் குழப்பிக் கொள்ளக் கூடாது. ஆயினும் அந்த உணர்வுகளை அறிந்து அவர்களது அரசியற் பாதையை அறிந்தது போலவும் அங்கீகரிப்பது போலவும் நடித்தவர்களின் வேடம் உண்மையாகவே தமிழ்த் தேசியவாத வன்முறை அரசியல் வடக்கிற்கு வந்த போதுதான் கலையத் தொடங்கியது.

இளைஞர்களின் தீவிரவாதம் பற்றிச் செல்வநாயகத்தின் நிலைப்பாடு என்ன என்று கேட்பவர்கட்குப் பலவிதமான பதில்கள் கிடைக்கலாம். செல்வநாயகத்தின் 'காந்தி' படிமம் கலையாமல் பாதுகாப்பதற்கு 1976ல் அவரது மரணம் உதவியது. ஆயினும் மாற்று அரசியற் சக்திகள் வளராமல் தடுப்பதற்காக வன்முறையைப் பாவித்தவர்களை இந்தக் காந்தியவாதி மறிக்கவோ கண்டிக்கவோ நிராகரிக்கவோ ஏன் முன்வரவில்லை?

செல்வநாயகத்தைத் தமிழரசுக் கட்சிக்குள் இருந்த பலவேறு குழுக்கள் தமக்கு விருப்பியவாறு விளங்கிக் கொள்ள வசதியாக இருந்தது அவரது மௌனம் மட்டுமல்ல. அவரது செவிப்புலனின் போதாமை யையும் அவர் தனக்கு வசதியாகவே பயன்படுத்திக் கொண்டார் என்பது அவரது அரசியலுடன் உடன்பாடற்ற பலர் வெளிவெளியாகவே சொல்லியுள்ள ஒரு குற்றச்சாட்டுத் தான்.

1965ல் செல்வநாயகத்தைத் திருச்செல்வம் பயன்படுத்தினாரா செல்வநாயகத்தின் நோக்கங்கட்கு வசதியான கருவியாகத் திருச்செல்வம் பயன்பட்டாரா என்பது தமிழரசுக் கட்சிக்குள் விடுவிக்கப்படாத புதிராகவே இருந்தது. எனினும் திருச்செல்வத்தின் வெளி வெளியான யூ.என்.பி. சார்பையும் வலதுசாரிப் போக்கை செல்வநாயகம் எதிர்த்ததும் இல்லை, நியாயப் படுத்தியது மில்லை. செல்வநாயகத்தின் வீட்டில் இருந்த அலுவலகத்தில் ஒரு கட்சிக்குள் ஒரு சிறிய கட்சியை நடத்த முற்பட்ட சிவஜெயசுந்தரம், சந்திரஹாசன், ஈழவேந்தன், கோவை மகேசன் போன்றோர் யாவருமே செல்வநாயகம் தமது பக்கம் தான் என்றே பாவனை செய்து வந்தனர்.

செல்வநாயகம் பற்றிய காந்திய, தீர்க்கதரிசனப் படிமத்தைக் கலைப்பது அவரது கட்சிக்குள் இருந்த பலவேறு குழுக்களில் ஒவ்வொன்றுக்கும் பாதகமானதாகவே இருந்தது. கருத்து வேறுபாட்டு அடிப்படையில் 1975ல் வெளியேறிய முன்னாள் ஊர்காவற்றுறை பா.உ. வி.நவரத்தினம் கூட செல்வநாயகத்தைப் பகிரங்கமாக விமர்சிப்பதில் சிறிது கவனமாகவே இருந்தார். கட்சியின் நிதி பற்றிக் கணக்குக் கேட்டு திருப்தியான பதில் வராததால் வெளியேறிய கட்சிப் பொருளாளரான முன்னாள் கிளிநொச்சி பா.உ. செல்வநாயகத்தை கடுமையாக விமர்சித்தார். இந்தியாவின் காந்தி பண விஷயத்தில் மிகவும் கண்டிப்பானவர் என்பது ஈழத்துக் காந்தியாரின் சீடப்பிள்ளைகள் அறியாத விடயமுமல்ல. எவ்வாறாயினும் இந்தக் காந்திப் படிமத்தைக் குலைக்க எவருமே தயாராக இருக்கவில்லை.

செல்வநாயகத்தின் அகிம்சைப் படிமத்தைக் கலையாமற் காக்கின்ற அதே வேளை இளைஞர்களை அந்நியப்படுத்தாமலும் இருக்க அவரது மௌனம் பயன்பட்டது எனும்போது இந்த மௌனம் வன்முறையின் வெளிவெளியான கண்டனத்தையோ அங்கீகாரத்தையோ விடக் கேவலமான கோழைத்தனமும் நேர்மையீனமும் கொண்டது என்றும் நாம் கொள்ள வேண்டும்.

1972க்குப் பின்பு வடக்கில் மோசமடைந்து வந்த நிலவரங்களின் பின்னணியில் இந்திரா காந்தியை இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையிற் குறுக்கிடுமாறு கேட்பதற்கு புது டில்லிக்குப் போவதற்கும் செல்வநாயகம் திட்டமிட்டார் என்று அவரது அன்புக்குரிய மருமகனும் ஜே.ஆர்.ஜயவர்தனவின் அபிமானியாக இருந்தவருமான ஏ.ஜே.வில்சன் என்ற அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்தக் குறுக்கீடு நடந்திருப்பின் முடிவு சாத்வீகமான ஒன்றாக இருந்திருக்கும் என்று செல்வநாயகம் எதிர்பார்த்தாரா என்று தெரியவில்லை. சிறிமா பண்டாரநாயகவுக்கும் இந்திரா காந்திக்கும் இருந்த தனிப்பட்ட நெருக்கம் பற்றி அவர் அறியாமல் இருந்தார் என்று நம்பவும் முடியவில்லை. அவரது தீர்க்கதரிசனத்தின் இறுதி அத்தியாயமாகவும் அவரது அகிம்சையின் மௌனச் சாவின் சாட்சியமாகவும் 1970 – 1977 காலகட்டம் அமைந்தது என்றால் மிகையில்லை.

## 5வருட ஆட்சியில்....

5ம் பக்க தொடர்ச்சி.....

புலிகளின் ராணுவ பலமும் போராட்ட வழிமுறைகளும் மட்டுமல்ல. அவர்கள் ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனத்தின் பக்கத்தில் நின்று விட்டுக் கொடுக்காது சரணடையாது போராடி வருகின்றார்கள் என்பது முக்கிய அம்சமாகும். தவறுகள், குறைபாடுகள், முரண்பாடுகள் யாவற்றுக்கும் அப்பால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் மக்களிடத்திலும் ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்ட ஆதரவு சக்திகளிடமும் இத் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு இருந்தே வருகின்றது. புலிகள் இயக்கத்தின் ஜனநாயக மறுப்பு போக்கும் எதிரியார்? நண்பன் யார்? என்பதை அடையாளம் காணாமையும் போராட்டத்திற்கு பாரிய பாதிப்பு என்பதை அவர்கள் 'எப்போது உணர்ந்து கொள்வார்கள் என்பது கேள்வியாகவே தொடர்கின்றதையும் மறுப்பதற்கில்லை.

இலங்கையில் பேரினவாத யுத்தம் இன்றைய நிலைக்கு வளர்வதற்கு அந்நிய சக்திகளின் பங்கு கணிசமானதாகும். இந்திய மேலாதிக்க சக்திகள் தமது பங்கிற்கான காரியங்களைச் செய்து கொண்ட அதேவேளை அமெரிக்கா தனது உலக மேலாதிக்க நோக்கத்திற்கமைய செயலாற்றி வந்துள்ளது. அதிலும் பொதுசன முன்னணியின் ஐந்து வருட ஆட்சியில் யுத்தத்தை விரிவாக்குவதற்கான பாதையில் உதவி, ஆலோசனை, ஆயுத விநியோகம், பயிற்சி எனச் சகலதையும் செய்து வந்துள்ளது. பொதுசன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்த நேரத்தில் அந்த ஆட்சி மீது அமெரிக்காவிற்கு சந்தேகமும் திருப்தியின்மையும் இருந்தது. இடதுசாரிகளை அங்கமாகக் கொண்ட தேசிய முதலாளித்துவ போக்கை கடைப்பிடித்து வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான இவ் அரசாங்கம் தமக்கு குழிபறிந்து விடுமோ என ஐயமுற்றனர். ஆனால் ஒரு சில மாதங்களுக்கிடையேயே அமெரிக்காவினால் இந்த அரசாங்கம் வளைத்துக் கொள்ளப்பட்டது. அவ்வாறு அமெரிக்காவின் அரவணைப்பையும் இறுக்கத்தையும் பெறுவதற்கான வழிவகைகளைச் செய்வதில் அண்மையில் மறைந்த நீலன் திருச்செல்வம், அமைச்சர் கதிர்காமர், அமைச்சர் மங்கள சமரவீரா, அமைச்சர் ரத்வத்தை போன்றவர்கள் முக்கியமான பங்களிப்பு வழங்கினர். இன்று இந்த அரசாங்கம் அமெரிக்காவின் விரல் அசைவுக்கு தகுந்தாற் போல் செயற்படும் நிலைமையில் உள்ளது. அண்மையில் பசுபிக் பிராந்திய அமெரிக்க கட்டளைத் தளபதியின் வருகையும் வடக்குகிழக்கு யுத்தம் பற்றிய ஆலோசனைகளும் பகிரங்கமானவை. இன்றைய நிலையில் இலங்கையின் அரசியல் பொருளாதார ராணுவ யுத்த நிலைமைகளைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய சக்தியாக அமெரிக்கா இலங்கையில் தனது கால்களைப் பதித்துள்ளது. இதனை அரசாங்கத்தில் உள்ள எவரும் தட்டிக் கேட்க முடியாது. அதேபோன்று யூ.என்.பி.யும் எதிர்க்கப்போவதில்லை. இவற்றுடன் பேரினவாத சக்திகளும் அமெரிக்காவை துதிபாடி நிற்கிறார்கள். எனவே முன்னைய காலங்களுடன் ஒப்பிடும் போது அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்று தனக்குரிய ஒரு வசந்த காலத்தை இலங்கையில் தோற்றுவித்துள்ளது என்றே கூறலாம். ஆளும் வர்க்க சக்திகளும் பேரினவாத யுத்த வெறியர்களும் அமெரிக்காவும் கூடிக்குலாவி கும்மாளமிட்டாலும் இலங்கை மக்கள் தமது ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியாக முன்னேறவே செய்வார்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



# இந்திய தேர்தல் களத்தில் கட்சிகளும்-காட்சிகளும்

இந்தியத் தொலைக்காட்சியில் வருகிற தொடர்நாடகங்கள் எவ்வளவு தூரம் அபத்தமானவை என்று நாங்கள் அறிவோம். சமீபகால இந்திய அரசியல் நிகழ்வுகளைப் பார்க்கிற போது தொலைக்காட்சியில் காணுகிற நாடகங்கள் கூட நம்பகமானவையாகவும் குறைந்த சிரிப்பை வரவழைக்கிறவை யாகவும் தான் எண்ண வேண்டி இருக்கிறது.

"ஆரியமாயை", "ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?", "நேருக்கு நேர்" என்றெல்லாம் நூல்கள் வெளியிட்ட திராவிட இயக்கத்திலிருந்து குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து, கிளைத்த மூன்று கட்சிகளும் இந்து மதவாத, சாதிய, இந்தி மொழிவெறியின் அரசியற் கரமான பாரதிய ஜனதா கட்சியுடன் நெருக்கமான உறவை கடந்த இரண்டு வருட இடைவெளிக்குள் உருவாக்கி யதைக் கண்டோம். 1972க்குப் பிறகு காங்கிரஸ் ஏதாவது ஒரு தி.மு.க.வுடன் உறவு வைத்திருந்தது. சென்ற பொதுத் தேர்தலில் மட்டுமே அது தனித்துப் போட்டியிட்டுத் தமிழகத்தில் படுதோல்வி கண்டது. இம்முறை அது அந்தத் தவற்றைச் செய்ய விரும்பவில்லை.

பாரதிய ஜனதாவுக்கு சென்ற முறையும் தி.மு.கக்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இந்த முறையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை. திராவிட இயக்கங்களைப் பொறுத்தவரை, 1962ல் அண்ணாதுரை திராவிட நாடு கோரிக்கையை வசதியாகக் கைகழுவி, வட இந்தியக் கட்சிகளை விட இந்திய 'தேச பக்தி' மிகுந்த ஒரு கட்சியாக தி.மு.கவை உருவாக்க முற்பட்டதோடு சட்டமன்றமும் பாராளுமன்றமும் "அடைந்தால் திராவிட நாடு இல்லையென்றால் சுடுகாடு" என்றவர்களது திராவிட அரசியலின் மயானங்களாகி விட்டன.

திராவிட இயக்கங்களில் எதாவது உருப்படியாக மிஞ்சி இருந்தது என்றால் அது ஈ.வெ.ரா. அவர்களுடைய சாதிய எதிர்ப்புச் சிந்தனைதான். அவருடைய அரசியற் குறைபாடுகள் மத்தியிலும் பிராமண




ஆதிக்கம் பற்றியும் பெண்ணுரிமை பற்றியும் மூடநம்பிக்கை ஒழிப்புப் பற்றியும் அவர் மிகவும் உறுதியாகவே இருந்தார். அவையெல்லாம் ஒவ்வொன்றாகக் கழன்று போய்விட்ட நிலையில் மூன்று திராவிட முன்னேற்றக் கழகங்களும் யார் யாரை எல்லாம் எதிரிகள் என்றார்களோ அவர்களோடு எல்லாம் பதவிக்காகச் சமரசம் செய்தே வந்துள்ளார்கள். அண்ணா துரைக்கு 1966ல் சி.ராஜகோபாலசாரி வழங்கிய ஆதரவு லெனினின் உவமை ஒன்றைப் பயன்படுத்துவதானால் தூக்கில் தொங்குபவனுக்குக் கயிறு தருகிற ஆதரவுமாதிரித் திராவிட இயக்கத்தின் கொள்கையின் மையமாக இருந்த பார்ப்பனிய எதிர்ப்பிற்கு ஆப்பு வைத்தது. ராஜகோபாலாசாரி இதன் மூலம் காமராசர் மீதும் பழி தீர்த்தும் கொண்டார். ஏனெனில் தமிழக காங்கிரஸில் பார்ப்பனிய ஆதிக்கத்திற்குக் காமராசர் ஆட்சி பெரிய. தடையாக இருந்ததை ராஜகோபாலாசாரி நன்று அறிந்திருந்தார்.

எப்படி இருந்தாலும், மற்ற எந்த



மாநிலத்தையும் விடத் தமிழகம் ஒரு விடயத்தில் முற்போக்கானதாக இருந்தது. 1947ன் பின் பு இந்து மதவாத அரசியல் தமிழகத்தில் 40 வருடங்களாகத் தலை தூக்க இயலாமல் இருந்தது. என்னினும் திராவிடக் கட்சிகளின் ஊழல் அரசியல், புது டில்லியில் அதிகாரத்தில் உள்ளவர்களது தயவில் தங்கியிருக்கும்படி செய்துவிட்டது. கருணாநிதி மீதான வழக்குக்கள் அவரை மிரட்டுவதற்கு இந்திரா காந்தியால் பாவிக்கப்பட்டன. இந்திரா காந்தியின் அவசரகாலச் சட்டக் காலத்தில் அதற்கு எதிராக நின்ற முக்கியமான மாநில அரசாகத் தமிழகம் இருந்தது கருணாநிதி பெருமைப்படக் கூடிய சில விடயங்களில் ஒன்று. அதற்காகவும் அவர் இந்திரா காந்தியால் தண்டிக்கப்பட்டார். தி.மு.க. ஆட்சியைக் கவிழ்த்ததை அடுத்து எம்.ஜி.ராமச்சந்திரனின் அ.தி.மு.க கட்சியின் வருகையோடு தமிழக அரசியல் கோமாளிக் கூத்து முழுமை பெற்றது. அதற்குப் பின்னர் நடந்த யாவுமே தமிழ் நாட்டின் சட்ட மன்ற அரசியலில் என்னவும் நடக்கலாம் என்பதையே நிரூபித்தன. பாராளுமன்ற அரசியல் எவ்வாறு அரசியல் இயக்கங்களைச் சீரழிக்கும் என்பதற்கு அகில இந்திய அரசியலும் மாநில அரசியலும் சான்றுகளைத் தந்தபடியே இருந்துள்ளன.

கம்யூனிஸ்ட் கட்சி 1964ல் பிளவுபட்டது. அப்பிளவு, இலங்கையில் நடந்தது போலவோ பல வேறு நாடுகளில் நடந்தது போலவோ, பாராளுமன்ற சீர்திருத்தப் பாதைக்கும் புரட்சிகர போராட்டப் பாதைக்கும் இடையிலான விவாதம் ஒன்றின் விளைவானதல்ல. சி.பி.எம். என்கிற மாக்சியக் கம்யூனிஸ்ட் கட்சி பேரளவில் புரட்சி பேசினாலும் நடைமுறையில் ஒரு பாராளுமன்றவாதக் கட்சியாகவே தொடர்ந்தும் செயற்பட்டுவந்தது. தெலுங்கானாவில் 1950களில் ஒரு வீரமிக்க மக்கள் போராட்டத்தை



நடத்திய இக்கட்சி, நேரு ஆட்சியின் அடக்குமுறை யந்திரம் அப்போராட்டத்தைக் குரூரமாக நசுக்கிய பிறகு அரசு யந்திரம் பற்றி எதைக் கற்றது என்ற கேள்வி இன்று நம்மனதில் எழுகிறது.

சோவியத் சார்புக் கட்சியாகவும் அதன் விளைவாக இந்திரா காந்தி ஆட்சியின் அடிவருடியாகவும் சீரழிந்த சி.பி.ஐ. எனப்படும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமின்றி, சி.பி.எம். கூட இன்று தெலுங்கானா போராட்டம் பாரம்பரியத்தை நிராகரிப் பதிலேயே கூடிய அக்கறை யுடையதாக இருக்கிறது. இக் கட்சிகளில் இருந்து வந்த பல நல்ல போராளிகளையும் நேர்மையான தலைவர்களையும் பற்றி நாம் மறக்கக் கூடாது. என்றாலும் பாராளுமன்ற அரசியல் அதிகாரமே ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் இலக்காகி விட்டால் அதன் விளைவு சீரழிவு மட்டுமே என்பதை வரலாறு நமக்கு இந்தியாவிலும் நினைவூட்டி வருகிறது.

இன்று இந்தியாவின் பெரிய கம்யூனிஸ்ட் கட்சிகள் எனப்படுவன காங்கிரஸையும் பாரதிய ஜனதா கட்சியையும் விடப் பெரிய இந்திய தேசியவாதக் கட்சிகளாகி விட்டன. சுயநிர்ணயம், தேசிய இன விடுதலை என்பனவற்றை அவை ஏற்க ஆயத்தமாக இல்லை. காஷ்மீர் மக்களது விருப்பு வெறுப்புக்களை விட காஷ்மீர் இந்தியாவின் பகுதியாக இருப்பது அவர்கட்கு முக்கியமாகி விட்டது. மொத்தத்தில் அவர்கள் இந்தியாவின் ஒற்றுமை என்ற பேரில் இந்தியாவினுள் எந்தத் தேசிய இனமும் தேசிய சிறுபான்மையும் தனது உரிமைகட்காகப் போராடுவதை விரும்பவில்லை.

இந்தியாவின் மேலாதிக்கப் போக்கைக் கண்டிப்பதிலும் இந்தியாவின் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளிடமும் தயக்கம் காணப்படுகிறது. நவகொலனியம், உலகமயமாதல் என்பன பற்றிய கண்டனக் குரல்களை இவர்கள் எழுப்பினாலும் தாங்கள் அதிகாரத்தில் உள்ள மாநிலங்களில், குறிப்பாக மேற்கு வங்கத்தில், அயல் முதலீட்டை வரவேற்பதிலேயே குறியாக இருக்கிறார்கள். இவை எல்லாம் தற்செயலானவையல்ல. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டும் பிற பாராளுமன்ற அரசியற் கட்சிகள் போல அரசியற் பேரங்கள், ஊழல் போன்றவற்றால் மேலும் மேலும் கறைபட்டே வருகின்றன. இதன் பின்னணியில் கடந்த சில வருடங்களில் சி.பி.எம்., சி.பி.ஐ. ஆகிய கட்சிகளது நடத்தையை நாம் காணலாம்.

1996ல் சி.பி.எம். கோபாலாசாமியின் ம.தி.மு.வுடன் தமிழ்நாட்டில்



கூட்டணி அமைத்தது. அதன் படு தோல்வி இரண்டு கூட்டாளிகளதும் அரசியற் கணிப்பீடுகளை மாற்றிவிட்டது. தி.மு.கவுடன் கூட்டமைத்த சி.பி.ஐ. பாராளுமன்றத்தில் இரண்டு ஆசனங்களை வென்றது. 1998ல் மறுபடி தேர்தல் வந்தவுடன் சி.பி.எம். தி.மு.க.வின். பின்னால் போக வேண்டி வந்தது. இவர்களுடைய பாராளுமன்ற ஆசனத் தாகத்திற்காக உருவான ஜனதாதள கூட்டணியில் பங்காளிகளாக இருந்த பிராந்தியக் கட்சிகள் ஒவ்வொன்றாக இறுதியில் பாரதிய ஜனதாவுடன் சமரசம் செய்ததை நாம் கண்டோம். முதலில் காஷ்மீரின் பாருக் அப்துல்லாவும் பின்பு தெலுங்கு தேசம் கட்சியும் போயின. தம் மீதான ஊழல் வழக்குக்களைத் தடுக்கவும் தி.மு.க.



ஆட்சியைக் கலைக்கவும் தவறியதற்காக பா.ஜ.கவைக் கவிழ்க்க முன்வந்த ஜெயலலிதா வெளியேறியதுதான் தாமதம் முரசொலிமாறனின் தரகு வேலையின் உதவியோடு கருணாநிதி பாரதிய ஜனதாவின் கூட்டாளியாகி விட்டார்.

அதே வேளை சி.பி.எம். பாரதிய ஜனதா ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக செய்த காரியங்கள் அதன் அரசியல் மதியூகம் பற்றிய பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது. இந்தியாவில் சாதிய மதவாத அரசியலின் வளர்ச்சிக்கு முற்றிலும் பாரதிய ஜனதா கட்சியை அகற்றுவதால் மட்டுமே சமூகத்தில் வேரூன்றிப் பரவியுள்ள அந்த விஷத்தை அகற்ற முடியும் என்பது ஒரு கேள்வி. பாரதிய ஜனதாவின் இடத்தில் யார் பதவிக்கு வரக்கூடும் என்பது பற்றி சி.பி.எம் தலைமை நன்கு அறியும். சோனியா காந்தியை பிரதமராக்குவதற்கு சி.பி.எம். பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்த முயற்சி தோல்வி கண்டது. சோனியா காந்தியை ஆட்சியில் அமர்த்தி நேருபரம்பரை ஆட்சியை இன்னும் 50 வருடங்கட்கு நீடிப்பதற்கு அவர்கள் விரும்புகிறார்களா என்பது பலரது மனதிலும் எழுந்த ஐயம்.

பாரதிய ஜனதா ஆட்சியை வீழ்த்துவதனால் அதனுடன் சேர்ந்து அதன் நாற்றமெடுக்கும் அரசியலையும் விழுத்தாமல் அந்த விஷப் பூண்டுகள் மீண்டும் தழைக்காமல் தடுக்க முடியாது. இந்தக் காரியம் பாராளுமன்ற அரசியல் மூலம் செயற்படுத்தக் கூடியதல்ல என்பது எந்த மாக்ஸியவாதியும் அறிந்திருக்க வேண்டிய உண்மை.

இந்திய தேசியவாதத்தின் பேரில் இந்தி–இந்து–சாதிய அரசியல் தான் வளர்க்கப்படுகிறது. மதச்சார்பின்மை என்ற கோஷம் மட்டுமே போதாது. பாரதிய ஜனதா கட்சி கூட இன்று மதச்சார்பின்மை வேடம் போடப் பழகி விட்டது. சாட்டுக்கு ஒரு முஸ்லிமையும் தாழ்த்தப்பட்ட சாதியில் ஒருவரையும் முன்வரிசையில் வைக்க அவர்கட்கும் தெரியும். பாரதிய ஜனதாவின் சாதிய மதவெறி அரசியலை அம்பலப்படுத்துவதும் அதை முறியடிப்பதும் பாராளுமன்ற மூலம் சாதிக்கக்கூடிய தல்ல.

சி.பி.எம். இத் தேர்தலை இந்தி–இந்து–சாதிய மேலாதிக்கத்துக்கு எதிரான வெகுஜன வேலைத்திட்டத் திற்குப் பயன் படுத்தலாம் என்பது ஒரு நல்ல யோசனை. ஆயினும் பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையையே கண்ணுங் கருத்துமாக உள்ளபோது பலவித மான சமரசங்களும் அவசியமாகி விடுகின்றன. கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு விதமான சந்தர்ப்பவாதக் கட்சியுடன் உடன்படிக்கை செய்கிற போது அந்தச் சந்தர்ப்பவாதம் அக் கம்யூனிஸ்ட் கட்சிகளிலும் தொற்றிக்கொள்கிறது. இது கடந்த மூப்பது வருட வரலாறு மட்டுமல்ல இன்றைய பிரதான போக்காகவும் மாறி விட்டது.

சமீப காலத்தில் காஷ்மிர் பிரச்சினை சிக்கலடைவதற்கு பாரதிய ஜனதா ஆட்சியின் பங்களிப்பு பெரியது. ஆனாலும், ஜூலை மாதப் போர் மூலம் இந்தியாவின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யக்கூடிய ஒரே அரசு என்ற மயக்கத்தை பாரதிய ஜனதா ஆட்சி உருவாக்குவதில் சிறிது வெற்றிகண்டுள்ளது. போன வருட முடிவில் வெங்காய விலை ஏற்றத்துடன் சேர்ந்து சரிந்த அதன் செல்வாக்கு மீண்டும் நிமிரத் தொடங்கிவிட்டது.

தொடர்ச்சி 11ம் பக்கம்....

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகம் வேண்டுவது விடுதலையை தீவிர தேசியவாதத்தை அல்ல

எல்லா இளைஞர்களையும் போல காலத்திற்கு காலம் மலையக இளைஞர்களிடமும் பலவிதமான அரசியல்கருத்துக்கள் அறிமுகம் செய்யப்படுகின்றன. தற்காலத்தில் தீவிரவாத மலையகத்தமிழ் தேசியவாதம் பற்றி சில இளைஞர்கள் பேசி வருகின்றனர். அக்கருத்து ஏற்கனவே பல இடங்களில் பரீட்சிக்கபட்டதே ஆகும்.

தீவிரவாத தேசிய வாதம் நமது நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் கூடபரீட்சிக்கப்பட்டுள்ளது. அதில் கிடைக்கின்ற அனுபவங்கள் மலையகத்திற்கு வந்து சேர நாளாவதில்லை. பேரினவாதத்தால் பாதிக்கப்பட்டு அதே வீச்சில் எவ்வித மதிப்பீடுகளின்றி அல்லது பிறமதிப்பீடுகளினால் பதிலடி கொடுப்பதில் கௌரவப்பிரச்சினையை மட்டும் எடுத்துக் கொள்ளும் தன்மை பாதிக்கப்படும் இனத்தின் சிறு முதலாளித்துவ சிந்தனையின் வெளிப்பாடாகும். மலையகத்தின் தொழிற் சங்கத் தலைமைகளின் தொண்டமான் முதல் சந்திரசேகரன் வரை மலையகத் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷை களை ஆகக் கூடியளவிற்கு பிரதி நிதித்துவம் செய்யும் மிதவாத சக்திகளாக இருக்க வில்லை. அவர் களால் மலையகத் தமிழ் மக்களுக்குச் சமத்துவம் இன அந்தஸ்தை பெற்றுக் கொடுக்க முடியாது. அதனால் அவர்களிட மில்லாத தீவிரத்தை மட்டும் மலையக இளைஞர்கள் அரவணைத்துக் கொள்ள நினைப்பது மலையகத்தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத நடவடிக்கைகளுக்கு நிவாரண மாகாது. மாக்சியப் பார்வையில் தீவிரவாத நடவடிக்கை இன்றி புரட்சி சாத்தியமில்லை என்பது உண்மை.

ஆனால் அதீத பிடிப்புக்களாலும் பைத்தியக் காரத்தனத்தினாலும் மலட்டுத் தனத்தினாலும் குருட்டுத் தனத் தினாலும் வெளிப்படும் தீவிரவாதமும் புரட்சிகர தீவிரவாதமும் பிரித்து அரியப்பட வேண்டும்.

மாக்சிய புரட்சிகரப் போராட்டங்களில் முக்கியமாக கொள்ளப் படும் சீனப்போராட்டங்களில் கிராம தோறும் மக்களின் குழுக்களை ஏற்படுத்துதல் கூட்டுறவு முறைமைகளை நிலைநிறுத்துதல் சுயநிறைவு பொருளாதார ஏற்படுகளைச் செய்தல் என்பவற்றிற்குப் பிறகே தீவிரவாத நடவடிக்கைகள் அறிமுகம் செய்யபட்டன. போராட்டங்களில் சீனாவை அப்படியே பிரதிபண்ணத் தேவையில்லாவிடினும் மக்களின் சமூக அரசியல் தராதர நிலைமைகள் என்பவற்றை கவனத்தில் எடுக்காமல் மக்களுக்காக மக்களிலிருந்து



தொடங்காவிடின் அதனால் யாருக்குப் பிரயோசானம்? எனவே மலையகத்தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான போராட்டங்கள் நீண்ட நடைமுறைகளை கொண்டன. மலையகத் தலைவர்கள் எனப்படுபவர்களின் இயலாமைக்கு பதிலீடு தீவிரவாதமாக அமைந்தால் மலையக தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளுக்கான எல்லா பிரசவங்களும் சுகமாக இருக்கும் என்பது ஒரு வகை அவசரப் புத்தியினால் ஏற்படும் மாயைமட்டுமன்றி முட்டாள் தனமா னதுமாகும். மலையகத்தமிழ் மக்களின் மீது இன ரீதியான அடக்குமுறைகள் எதுவுமில்லை அல்லது அவை பிரதான மானவை அல்ல என்று கூறுவது தவறான தாகும். அதே போன்று மலையக தமிழ் மக்களது தேசிய அபிலாசைஷ களை வென்றெடுப் பதற்காக குறுகிய கால, நீண்டகால வழிமுறைகள் பற்றிய தெளிவின்மை யாலேயே தீவிரவாத தேசிய வாதத்தை பற்றி சிந்திக்க வைப்பதாக இருக்கலாம். மலையக தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, அவர்கள் வாழுகின்ற பிரதேசங்கள், அவர்களின் பொருளாதார பலம், என்பவற்றை அடிப்படயாக கொண்டே வழிமுறைகள் பற்றி சிந்திக்க வேண்டும்.

மலையக தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம். அவர்களுக்கும் சுயநிர்ணய உரிமை இருக்கிறது. அதேவேளை அவர்களின் சுயநிர்ணய உரிமையின் பிரயோகம் தொடர்பிலும் வித்தியாசம் இருக்கின்றது. வடக்கு கிழக்கு வாழ் இலங்கை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப்பிரயோகம் மலையகமக்களுக்கான சுயநிர்ணய உரிமைப்பிரயோகமும் வித்தியாசங்களை கொண்டவை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். அத்தோடு வடக்கு கிழக்கு போரட்டங்களிலிருந்து கிடைக்கின்ற அனுபவங்களும் பாடமாகக்கொள்ளப் படல் வேண்டும். வடக்கு கிழக்கு இளைஞர் இயக்கங்களுடன் சில மலையக இளைஞர்கள் தொடர்பு கொண்டதாக கூறப்பட்ட போதும் அவர்களின் செயற்பாடுகள் வடக்கு கிழக்கை மையமாகக்கொண்டதாக அமைந் திருந்தன என்பதே உண்மை யாகும்.

பாதுகாப்பு வட்டாரங்களின் அறிக்கைகளின்படி மலையக வெகுஜன இயக்கம் என்ற அமைப்பும் மலையக விடுதலை இயக்கம் என்ற அமைப்பும் தீவிரவாத அமைப்புக்களாக இயங்கியதாக அறியப்படுகின்ற போதும் அவை மலையகத்தமிழ் மக்களின் தேவைகளிலிருந்து தோன்றியனவாக இருக்கவில்லை. அவ்வாறான அமைப்புகள் தேவையா என்ற கலந்துரையாடலில் சிலர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. அவர்கள் அவர்களது கலந்துரையாடல்களை ஆரோக்கியமாக்குவதற்கு கடந்தகால படிப்பினைகளையும் புறச்சூழ்நிலைகளையும் அடிப்படையாகக் கொள்வது அவசியம். அவற்றால் ஏற்படப்போகும் பிரதிகூலங்கள் பற்றிய மதிப்பீடுகள் ஆழமாகச் செய்யப்பட வேண்டும் தொழிலாளிகள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் மலையக சமூகத்தின் அமைப்பு பற்றிய ஆய்வும் அவசியமாகும். சிறுதொகையான படித்த இளைஞர்களின் தேவைகளி லிருந்தன்றி பெரும்பான்மையான மலையகத்தமிழ் மக்களின் தேவையிலிருந்து சரியான அரசியல் அவசியங்கள் ஏற்படமுடியும். பெருந்தோட்டக் கம்பெனிகளினால் தொழிலாளர் மீது மேற்கொள்ளப்படும் அடுக்குமுறைகளைபாராது இருக்க முடியாது. அவர்களினால் எமது பெருந்தோட்ட வளம் அபரிதமாக சுரண்டப் படுவதும் பெருந் தோட்டத் துறைக்கு அழிவேற்படு வதையும் கண்டும் காணாமல் இருக்கவும் முடியாது. ஆக தோட்டத்தொழிலாளர் வர்க்கத்தை முதன்மைப்படுத்துகின்ற வர்க்க ரீதியான இனரீதியான இரண்டு அடக்குமுறைகளுக்கும் எதிராக போராட்டங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டிய வழிவகைகள் பற்றி அரசியல் ஸ்தாபன அடிப்படையில் சிந்தித்தால் தீவிரவாத மலையக தேசிய வாதம் செல்லுபடியாகாமல் போய்விடலாம்.



அரசாங்க மட்டத்தில் நிறுவனப் படுத்தப்பட்ட நிலைமையிலிருந்து பேரினவாதம் மக்கள் மத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. இந் நிலையில் குறுகிய மலையகத் தேசியவாதத்தை அல்லது குறுகிய மலையக தீவிரவாத தேசியவாதத்தை மலையக இளைஞர்கள் மத்தியில் தூண்டுவது மிகவும் இலகுவான காரியமாகும். ஆனால் வளர்ச்சியடைந்துள்ள பேரினவாதத்துக்கு குறுகிய தீவிரவாத தேசியவாதம் தீர்வாக அமையப்போவதில்லை. அதனால் ஏற்படும் அழிவுகள் அதனை தூண்டுபவர்கள் இறந்துவிட்டாலும் கூட தொடரக் கூடியதாகவே இருக்கும். இலங்கையிலிருந்தும் ஏனைய நாடுகளிலிருந்தும் போதுமான அளவு உதாரணங்களைக் காணமுடியும் அவ்வாறு தொடரும் அழிவுகள் அந்நிய சக்திகளின் உள்நோக்கம் கொண்ட அல்லது மேலாக்க ஏகாதிபத்திய அக்கறைக் கொண்ட தலையீடுகளுக்கு வழிவகுக்கும். அதனால் மலையக தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி முழு நாட்டிற்கும், இந் நாடு அமைந்திருக்கும் பிராந்தியத்திற்கும் அழிவையே மீதமாக்கும். ஆதலால் மலையக இளம் தலைமுறை தீவிர மலையக தேசியவாதம் குறித்து பரந்தளவு பட்டறிவுடன் கூடிய விவாதங்களில் ஈடுபடுவது அவசியமாகும். ●

## அரசாங்கம் — ஐ.தே.க

*1ம் பக்க தொடர்ச்சி*

நாடு எங்கே நகர்த்திச் செல்லப்படும் என்பதில் கூட தூர நோக்கற்றவர்களாகவே இவர்கள் இருந்து வருகின்றனர்.

இது தான் இவர்களது நிலை என்றால் இணக்கப்பாட்டிற்கான பேச்சுவார்த்தை வெறும் விளையாட்டாகத்தான் இருக்கும். தமது அரசியல் தீர்வு முயற்சி வெற்றி பெறாமைக்கு அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலையில் பழிசுமத்தி வருகிறது. அந்தப் பழியினை திசை திருப்புவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இப் பேச்சுவார்த்தையை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்துகிறது.

இவர்களால் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை உருவாக்கிக் கொள்ளமுடியாமைக்கு அடிப்படைக் காரணம் பேரினவாத நிலைப்பாடுதான். போரின் கொடுரத்தை புத்திஜீவிகளும் அரசியல் வாதிகளும் முழுமையாக உணரவில்லை என்று அமைச்சர் பீரிஸ் சுட்டிக் காட்டி இருப்பது அரசாங்க, எதிர்க்கட்சிகளுக்குள்ளும் வெளியேயும். உள்ள சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கு முற்றிலும் பொருத்தமானது தான். அதற்கு உதாரணமாக முன்னாள் நீதியரசர் தலைமையில் மாத்தறையில் இடம் பெற்ற தீர்வுப்பொதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அமைந்துள்ளது.

இந்நிலையில் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணக்கப்பாட்டிற்கு வரமுடியுமா என்பதும் அதற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பேரினவாத சக்திகள் இணங்குமா என்பதும் கடந்த கால அனுபவங்களில் உரைத்துப்பார்க்க வேண்டிய ஒன்றாகும். எவ்வாறாயினும் வர்த்தக சமூகத்தினரின் முன் முயற்சியில் நேர்மையிருப்பின் அதற்கு பக்கபலமாக மக்கள் சக்தி அணி திரட்டப்பட வேண்டம். லட்சோப லட்சம் மக்கள் வீதிக்கு இறங்கினால் ஆட்சியினரையும் எதிர்க்கட்சியினரையும் ஏனைய வர்களையும் வழிக்கு கொண்டு வர இயலும். அத்தகைய முயற்சி இன்றி நேர்மை, பெரும் தன்மை நாட்டுப் பற்று காரணமாக அரசாங்க எதிர்க் கட்சியினர் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான இணக்கப்பாட்டிற்கு வந்து கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியாது. அவர்கள் இன்று இறங்கியிருப்பது வெறும் தேர்தல் விளையாட்டேயாகும்.

## மலையகத்தில்...

1ம் பக்க தொடர்ச்சி...

செயற்பாடகளை விஸ்தரித்து வருகிறது.

இது இவ்வாறிருக்க மாகாணசபை உறுப்பினராக இருக்கும் மனோ கணேசன் பாராளுமன்ற எம்.பி. யாவதற்குரிய ஆதரவை அதிகரித்துக் கொள்வதற்காக அமைப்புகளையும், தனிநபர்களையும் அணுகி வருகிறார்.

ம.ம.முயின் தலைமையிலான கூட்டணி என்பதை மனோ கணேசனுடனிருக்கும் பலர் எதிர்த்தபோதும் அதைப்பற்றி பொருட்படுத்தாது ம.ம.முயுடன் கூட்டாக செயற்பட மனோ கணேசன் முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.

இ.தொ.கா தலைமையிலான இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்ற கூட்டணி மாகாணசபை தேர்தலுடன் காலவதியாகி விட்டது. எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் எப்படியும் மீண்டும் பாராளுமன்ற ஆசனத்தை பெற்றுவிட வேண்டும் என்ற கூட்டணியை அமைப்பதற்கான முஸ்திபுகளில் ஈடுபட்டுள்ளது. ம.ம.மு தலைமையிலான கூட்டணி அமைவதில் இ.தொ.காவின் மத்திய மாகாணசபை உறுப்பினர் ஒருவர் அதிக ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிகிறது.

ஆக மீண்டும் மலையக மக்களின் வாக்குகளை கூட்ட இருக்கும் கொள்ளை அடிப்பதற்காக உருவாக இன்னொரு கூட்டணியின் அபாயம் குறித்து மலையக மக்கள் எச்சரிக்கையாக இருப்பார்களாக.

## பலாலி நிலச்...

1ம் பக்கம் தொடர்ச்சி...

எதிராகப் பல்வேறு நிலைகளில் இருந்தும் கடுமையான எதிர்ப்புகளும் கண்டனங்களும் தெரிவிக்கப்பட்டன. 24-03-99 அன்று புதிய இடதுசாரி முன்னணி வெள்ளவத்தையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடாத்தி கண்டன. உக்கிரத்தை வெளிப்படுத்தியது. 25-03-99 அன்று மேற்படி காணிச் சுவீகரிப்பு கைவிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ள செய்தி வெளிவந்தது.

ஆனால் இப்போது வேதாளம் மீண்டும் முருங்கையில் ஏறத்தயாராகி உள்ளது என்றே அறிய முடிகிறது. இது துன்பதுயரங்களில் மத்தியில் இடம் பெயர்ந்த நிலையில் அரைகுரை வாழ்க்கை வாழ்ந்து வரும் வலி வடக்கு மக்களுக்கு வீழ்ந்துள்ள மற்றொரு பேரிடியாகும்.

இது ஒரு மொசடியும் நம்பிக்கைத் துரோகமான செயலாகும். குடாநாட்டின் உள்ளும் வெளியே வாழும் வலி வடக்கு மக்கள் ஏற்கனவே தமது எதிர்ப்பை கண்டனங்களாத் தெரிவித்து வருகிறார்கள். வலி வடக்கு பிரதேசசபை, யாழ். அரச சார்பற்ற நிறவனங்களின் ஒன்றியம். வலி வடக்கு இடம் பெயர்ந்தோம் நலன் காப்புச் சங்கம், குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் போன்ற பல அமைப்புகள் தமது எதிர்ப்புகளை தீர்மானம் செய்து ஜனாதிபதி வரை அனுப்பியுள்ளனர்.

மக்களது குரலுக்கும் கோரிக்கைகளுக்கும் செவிசாய்க்காது நிலச் சுவீகரிப்பில் அரசாங்கம் விடாப்பிடியாக நிற்பதற்கு அதன் யுத்த-ராணுவ உள்நோக்கமே காரணமாகும். அது பலாலி ராணுவ தளத்தை சகல வசதிகளும் கொண்ட சர்வதேச ராணுவத்தள மட்டத்திற்கு உயர்த்தும் நீண்டகாலத்திட்டத்தை உள்ளடக்கிய ஒன்றாகும். இது அமெரிக்காவின் வழிகாட்டலுக்கு உட்பட்ட விடயமும் ஆகும். எனவே தொடர்ந்தும் பல்வேறு அமைப்புகளும் மக்களும் பல்வேறு நிலைகளில் இருந்தும் தமது கடும் எதிர்ப்பை முன்னெடுக்க வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



# நீலன் முதலும் அல்ல கடைசியும் அல்ல

## படுகொலைகளும் - கண்டனங்களும்

கடந்த 29-07-99 அன்று தமிழர் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரும், சட்ட வல்லுனரும். பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மிக நெருக்கமான ஆலோசகரும், அமெரிக்க ஆளும் வட்டாரங்களின் அன்பைப் பெற்றவருமான கலாநிதி நீலன் திருச்செல்வம் கொழும்பில் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரால் படுகொலை செய்யப்பட்டார். இக் கொலை பற்றி அலரி மாளிகை முதல் வெள்ளை மாளிகை வரை நம் நாட்டின் ஜனாதிபதி, பாராளுமன்ற அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி பில் கிளின்டன், கோபி அனான் போன்றவர்களும் தமது கண்டனங் களையும் அனுதாபங் களையும் தெரிவித்துக் கொண்டனர்.

மேற்படி சம்பவம் பற்றி புதிய பூமியின் செய்தி நிருபர் புதிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேலிடம் உங்கள் கட்சி ஏன் கண்டனமோ அனுதாபமோ தெரிவிக்கவில்லை எனக் கேட்டார். அதற்கு அவர் பின்வருமாறு பதிலளித்திருந்தார்.

எங்களது கட்சி ஒரு மாக்சிச லெனினிசக் கட்சியாகும். நாம் எதனைச் செய்யும் போதும் எங்களுக் குரிய அடிப்படை நிலைப்பாட்டில் இருந்தே செய்வோம், வெறும் சம்பிரதாயத்திற்காக அல்லது எல்லோரும் செய்கிறார்கள் சொல்கிறார்கள் என்பதற்காக எதையும் செய்வதில்லை. நமது நாட்டைப் பொறுத்தவரை அரசியல் படுகொலைகள் என்பது ஒருவகை அரசியல் கலாசாரமாக வேர் ஊன்றியுள்ளது. இதற்கான அடிப் படைக் காரணங்களைக் கண்டறி வதையும் இல்லாதொழிப் பதையுமே நாம் வற்புறுத்து கின்றோம். நாட்டில் அரசியல் படுகொலைகளுக்கு வழிவகுத்தவர் களும், அவற்றை ஊக்குவித்து வந்தவர்களும், நேரடியாகவும் மறைமுகமாகவும் செயல்பட்டவர் களும் இன்று கண்ணீரும் கண்டனமும் வெளியிடுவது தான் வேடிக்கையான தாக உள்ளது. மாக்சிச லெனினிச வாதிகளாகிய நாம் எப்பொழுதும் தனிநபர் அரசியல் படுகொலைகளை ஏற்றுக் கொண்டதில்லை. எப்பொழுதும் அதனைச் கண்டித்தே வந்துள்ளோம்.

நீலன் திருச்செல்வத்தின் அரசியல் படுகொலையானது கடந்த கால் நூற்றாண்டு அரசியல் களத்தில்



முதலாவது கொலையும் அல்ல முடிவான தொன்றும் அல்ல என்பது கவனிக்கப்படல் வேண்டும். இத்தகைய அரசியல் படுகொலைகள் அன்று யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பித்த வேளை தமிழ் அரசியல் தலைவர்கள் எனப்பட்டவர்கள் அதனைக் கண்டிக்கவோ நிராகரிக்கவோ முன்வரவில்லை என்ற கசப்பான வரலாற்று உண்மையை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

இவ்வேளை ஒரு சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகின்றேன். 1975ல் ஒரு முறை வல்வெட்டித்துறை சந்தியில் அமைந்துள்ள சனசமூக நிலைய மண்டபத்தில் ஒரு பகிரங்க அரசியல் கருத்தரங்கு மாலை 6 மணிக்கு அங்குள்ள இளைஞர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. முன்னாள் பட்டினசபைத் தலைவர் ஒருவர் அதற்கு தலைமைதாங்கினார். அன்றைய எமது கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் நா.சண்முகதாசனும், நானும் ஏனைய தோழர்களும் அக் கருத்தரங்கில் கலந்து கொண்டோம். அன்றைய தினம் காலையில் தான் யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா பொன்னாலையில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

அன்றைய கருத்தரங்கில் பிரதான உரையாற்றிய தோழர் சண் மேற்படி படுகொலைச் சம்பவத்தைச் சுட்டிக் காட்டினார். அல்பிரட் துரையப்பாவின் அரசியலுக்கும் அவரது நடைமுறைகளுக்கும் எமது கட்சி எவ்வித ஆதரவையோ உடன்பாட்டையோ கொண்டதல்ல. ஆனால் அரசியல் படுகொலைகள் மூலம் விடுதலையோ அன்றி எந்த வித விமோசனத்தையோ தமிழ் மக்கள் அடைந்து கொள்ள முடியாது. மாக்சிச லெனினிச வாதிகளாகிய நாம் எவ்வித ஆரசியல் படுகொலைகளையும் ஏற்றுக் கொள்வதில்லை. அவற்றை கண்டிகின்றோம் என்றும் கூறினார். உதாரணத்திற்கு தோழர் லெனினின் அண்ணன் ஜார் மன்னனுக்கு எதிரான படுகொலை முயற்சியில் ஈடுபட்டதை லெனின் பிற்காலத்தில் ஏற்றுக் கொள்ள மறுத்து கண்டித்த சம்பவத்தையும் சுட்டிக்காட்டினார்.

ஆனால் அன்றைய துரையப்பா படுகொலையை அகிம்சாவாதியும், ஈழத்து காந்தியும், தந்தையும் என வர்ணிக்கப்பட்ட திரு.செல்வநாயகம் உட்பட எந்தத் தமிழ்த் தலைவரும் கண்டிக்கவோ நிராகரிக்கவோ இல்லை என்பது நினைவில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அன்று உசுப்பி விடப்பட்ட அரசியல் படுகொலைகள் எத்தனை வழிகளில் எந்தெந்த ரூபங்களில் எத்தனை தீவிரவாத தமிழர் இயக்கங்களால் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள் எனப்பட்டவர்களுக்கு இழப்பு ஏற்படும் போது மட்டும் கண்டனமும் அனுதாபமும் தெரிவிப்பவர்கள் சாதாரண நிலையில் அரசியல் படுகொலைகளுக்கு ஆளாக்கப்பட்டவர்களுக்கு என்ன நியாயம் கூறப் போகிறார்கள், முக்கியமாக அரச பயங்கரவாதத்தால் நிகழ்த்தப்பட்டு வரும் கண்மூடித் தனமான படுகொலை களையும், பாலியல் வல்லுறவுக் கொடூர கொலைகளையும் மௌனமாக ஏற்றுக் கொள்பவர்கள் தமக்கு வேண்டியவர்களுக்கு ஏதாவது நடக்கும் போது மட்டும் உச்சக் குரலில் கண்டனம் தெரிவித்துக் கொள்கின்றனர். எனவே எம்மைப் பொறுத்த வரை ஒட்டு மொத்தத்தில் அரசியல் படுகொலைகள் எங்கிருந்து வந்தாலும் கண்டிக்கப்பட வேண்டியவைகளேயாகும். ஆனால் படுகொலைகளுக்கு உள்ளாகும் நபர்களின் அந்தஸ்து நிறைகளுக்கு ஏற்றவாறு நாமும் எமது கண்டன அளவைக் கூட்டவேண்டும் குறைக்க வேண்டும் என்ற நிலை நமக்கு இருக்க முடியாது. அத்துடன் இத்தகைய அரசியல் படுகொலைகளை உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள அரசியல் ஆதிக்க சக்திகள் தத்தமது தேவையின் அடிப்படையில் கண்டனமாகவும் அனுதாபமாகவும் பயன்படுத்தும் உள்நோக்கத்தை எவ்வகையிலும் எம்மால் ஏற்றுக் கொள்ளவியலாது என்பதே நமது நிலைப்பாடாகும் என்றும் கூறினார்.



நூற்றாண்டு தின நினைவில்
1888~1988
மாபெரும் மனிதநேயக்
~ கலைஞர் ~
~ எழுத்தாளர் ~
~ கவிஞர் ~

### ப்ரெக்ட்

### அதிரடிப்படை வீரனின் பாடல்

*பசியின் காரணமாக*
*கண் மயங்கினேன், வயிற்றில்*
*இனம்புரியாத வலியுடன்.*
*கூக்குரல்கள் என்னைத் தட்டியெழுப்பின*
*''ஓ ஜெர்மனியே விழித்தெழு''*

*மனிதர்களின் மாபெரும் அணிவகுப்பு சென்றது*
*''மூன்றாம் பேரரசுக்காக'' அவர்கள் கூறினர்*
*எனக்கு வாழவேறு வழியே இல்லாததால்*
*அவர்களது அணிவகுப்பில் நானும் சேர்ந்து கொண்டேன்*

*படைத்தலைவன் பளபளக்கும் பூட்சுடன் நடந்தான்*
*எனது கால்களோ ஈரத்தில் ஊறியிருந்தன*
*ஆனால் இருவரும் அடிபிசகாமல் நடந்தோம்*

*முழுமனதுடன்*
*இடதுசாரிப்பாதைதான் முன்னேற்றப் பாதை*
*என்றுதான் நினைத்தேன்*
*அவனோ அது தவறென்று கூறினான்*
*அவன் ஆணையிட்ட வழியில் நடந்தேன்*
*கண்களை மூடிக்கொண்டு பின்தொடர்ந்தேன்*

*பசியால் வயிறு காய்ந்து,*
*உடல் மெலிந்து, முகம் வெளுத்தவர்களும்*
*வயிறாரச் சாப்பிட்டவர்களும்*
*ஒருங்கிணைந்து நடந்தோம்*
*என்னவோ மூன்றாம் பேரரசாமே?*
*அதற்காக.*

*எந்த எதிரியைச் சுடவேண்டுமென்று*
*எனக்கு அவர்கள் எடுத்துரைத்தனர்*
*அவர்களது துப்பாக்கியால் குறிபார்த்துச் சுட்டேன்*
*எட்டிப்பார்த்தால், எனது சகோதரன்தான்*
*பஞ்சத்தாலும், பசியாலும் நாங்கள் ஒரே இனம்*
*நானோ எதிரியின் படையுடன் இணைந்து நடக்கிறேன்*
*எனது சகோதரனின் எதிரியுடன், என் சொந்த எதிரியுடன்*

*எனவே என் சகோதரன் இறந்து கொண்டிருக்கிறான்*
*எனது கைகளாலேயே வீழ்த்தப்பட்டு*
*ஆயினும் அவன் தோற்று விட்டால்*
*நானும் ஒழிந்துபோவேன் என்பதை உணர்கிறேன்.*

**தமிழில்: கலைச்செல்வன்**

*நன்றி: காலக்குறி*

# கணவனை எலும்புக்கூடாகக் கண்ட மனைவி! எலும்புக் கூட்டை அப்பா எனக் கூறமுடியுமா?

சாந்தினி 30 வயது நிரம்பிய இளம் குடும்பப் பெண். மூன்று குழந்தை களின் தாய். மீசாலையைச் சேர்ந்தவர். 1989ம் ஆண்டு அல்வாய் கொற்றா வத்தையை சேர்ந்த சதீஸ் குமார் சாந்தினியை காதலித்து திருமணம் செய்து கொண்டார். எழ்மையிலும் தமது குடும்பத்தை இனிதே நடாத்தி வந்தனர். மூன்று குழந்தைகள் அவர்களுக்கு. தனது குடும்பத்தைக் காப்பாற்ற சகல வேலைகளுக்கும் சென்று வந்தவர் இராசையா சதீஸ் குமார். குடா நாட்டின் துன்பதுயர் நிறைந்த வாழ்க்கையில் எதிர்நீச்சலிட்ட பல்லாயிரக் கணக்கான குடும்பங் களில் இந்த இளம் குடும்பமும் ஒன்று. முதலாவது குழந்தை சர்மிலன் வயது5, இரண்டாவது கௌதனுக்கு ஒரு வயது மூன்றாவது குழந்தை சியாம்சன் இரண்டு மாதக் கருவாக இருந்த போதே சதீஸ்குமார் 1996 ஆகஸ்டில் காணமல் போனார். வேலை தேடித் கொண்டிருந்த சதீஸ்குமார் அரியாலையில் உள்ள ரவி கராஜில் வேலைக்குச் சேர்ந்தார். கல்வியங் காட்டில் உள்ள உறவினர் வீட்டில் குடியிருக்க ஆரம்பித்து அங் கிருந்து, மேற்படி கராஜில் வேலை செய்து வந்தார். 1996 ஆகஸ்ட் 19ஆம் திகதி வேலைக்குச் சென்றவர் திரும்பவே இல்லை. நிமிடங்கள் மணியாகி, நாட்களாகி, மாதங்களாகி, வருடங்களாகிக் கொண்டன. கணவனை எதிர்பார்த்த மனைவி க்கும் தந்தையை எதிர்பார்த்த குழந்தைகளுக்கும் ஏமாற்றமே கிடைத்தது. இறுதியில் சதீஸ்குமாரின் எலும்புக் கூட்டைத் தான் மனைவி அடையாளம் காட்டவேண்டிய அவல நிலைக்கு உள்ளானார். ஒரு எலும்புக் கூட்டைக் காட்டி இதுதான் உங்கள் அப்பா என்று குழந்தைகளுக்கு காட்டமுடியுமா? இத்தகைய கொடுமை புத்தம் சரணம் கச்சாமி எனத் தினமும் ஓதிக்கொண்டு ஆட்சித் தலைவர் களுக்கு அனுசாசனம் வழங்கும் நாட்டில் தான் நடைபெற்றுள்ளது. செம்மணியில் கடந்த மாதம் தோண்டி எடுக்கப்பட்ட இரண்டு எலும்புக் கூடுகளில் சதீஸ்குமாரின் எலும்புக் கூடு ஒன்றாகும். இன்று சாந்தினி சதீஸ் குமார் என்னும் இளம் தாய் தனது மூன்று குழந்தை களுடன் வாழ்க்கை இருண்டு போய்



செம்மணியில் எலும்புக் கூடாக மீட்கப்பட்ட சதீஸ்குமார் தனது மனைவி மூத்த குழந்தையுடன் முன்பு எடுத்த படம். (நன்றி: உதயன்)

இடிவிழுந்த நிலையில் காணப் படுகிறார். கொலைவெறி கொண்ட இராணுவமும் அவர்களைக் கொலை புரிய வைத்த ஆட்சியின் தலைவர்களும் என்ன பதில் கூறப்போகிறார்கள். புலி என்பார்களா? அல்லது விதி என்று கூறுவார்களா? இப்படி செம்மணியில் மண்ணுக்குள் கிடக்கும் பலநூறு பேர்களின் குடும்பங்களின் வாழ்க்கைக்கு எத்தகைய நிவாரணமும் ஈடாகுமா? பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் தான் மிஞ்சும். ஆனால் இந்தப் பிசாசுகளை சாந்தினி போன்ற ஆயிரம் ஆயிரம் இளம் குடும்பப்பெண்கள் வெளி விடும் ஒவ்வொரு ஏக்கப் பெருமூச்சும் நிச்சம் தீச்சுவாலையாக மாறி சுட்டெரிக்கும் என்பதில் ஐயமில்லை.

**யாழ்–சூரியதேவன்.**

நன்றி - நூலகத்திட்டம்



## அரசு சார்பற்ற.......

6ம் பக்க தொடர்ச்சி...

அரசுநிறுவனங்களின் கூட்டுச் செயல்பாடு திட்ட வரைவுக்குள் இணைக்கப்படுவதால் அரசியல் முரண்பாடுகளுக்கெதிரான நடைமுறைச் செயல் பாடுகளை குறைத்து குறுக்கிவிடுகின்றன. NGO- வின் உள்ளூர்செயல்பாட்டின் தன்மையில் "உரிமையாக்கம்" என்பது பரந்துபட்ட பொருளாதார கண்ணோட்டத்தில் நவதாராள அரசு அனுமதிக்கும் வரையறைகளுக்குள் சிறிய வட்டங்களில் சமூக வாழ்வை மிகக் குறைந்த ஆதாரங்களைக் கொண்டு மாற்றப் பார்ப்பதுதான்.

## NGO க்கள் 'பொது' என்பதையே இழிவுபடுத்துகின்றன

ஏழைகள், பெண்கள், ஒதுக்கப்பட்ட இனங்கள் ஆகியோரிடையே நன்மதிப்பைப் பெற NGOக்களும் அவர்களுடைய பின்-மார்க்சிய (Post-marxists) தொழில் நிபுணர்களும் சமூக-அரசியல் இயக்கங்களுடன் நேரிடையாக போட்டி போடுகின்றன. அவற்றின் கொள்கையும் அதை நடைமுறைப்படுத்தும் விதமும், வறுமையின் தோற்றுவாய், நிவாரணம் ஆகியவற்றிலிருந்து கவனத்தை திசைதிருப்பும் வகையில் இருக்கின்றன. (மேல்நோக்காகவும் வெளிப்புறமாகவும் பார்ப்பதற்குப் பதிலாக கீழ்நோக்காகவும், உட்புறமாகவும் பார்ப்பது) வெளிநாட்டு வங்கிகளின் சுரண்டலை ஒழிப்பதை விட்டு விட்டு சிறு நிறுவனங்களைப் பற்றிப் பேசி பிரச்சினையின் தீர்வாக முன்வைப்பது என்பது, கவனிக்கப்படவேண்டியது. இதன் நோக்கம் தனிமனிதன்தான் காரணம் என்று சொல்லி வருவாயை வெளிநாடுகளுக்கு மாற்றப்படுவதை மறைப்பதே. சமூகங்களுக்கிடையில் சொற்ப வளங்களுக்காக போட்டி உண்டாக்கி, கண்ணுக்குப் புலப்படாத வித்தியாசங்களைத் தோற்விப்பது சமூகத்துக்கு உள்ளும், சமூகங்களுக்கு இடையேயும் பகையை வளர்த்து விட்டு, வர்க்க ஒருமைப்பாட்டைக் குலைக்கத்தான் NGOக்களின் பணபலம் சமூகத்தின் ஒரு சாராருக்கு கொடுக்கப்படுகிறது. இது தொழில் நிபுணர்களுக்கும் பொருந்தும். அவர்களும் தனித்தனியே NGOக்களை ஏற்படுத்தி வெளிநாட்டு நிதியுதவியை கோருகிறார்கள். தங்களை ஆதரிப்பவர்களுக்காக வாதிடுவதாக சொல்லிக் கொண்டு வெளிநாட்டு புரவலர்களுக்கு உவப்பான திட்டங்களை முன் வைப்பதில் இவர்கள் போட்டி போடுகிறார்கள்.

இதன் பயனாக NGOக்கள் எண்ணிக்கையில் பெருகி வறிய சமூகங்களை பகுதிகளாகவும், சிறு பகுதிகளாகவும் பிரித்து விடுவதால், இம்மக்கள் தங்களை வருத்தும் அகன்ற சமூக நிலைமையைப் பற்றி தெரிந்து கொள்ளாமல், அமைப்புக்கு எதிராகப் போராட ஒருங்கிணைய முடியாமல் போய்விடுகிறது. தற்போதுள்ள அரசியல் மற்றும் சமூக நிலைமைகளுக்கு எதிரான சவால்கள் எழும்போது, அந்த "நெருக்கடி" நிலையை சமாளிக்கவும் இந்த வெளிநாட்டுப் புரவலர்கள் நிதியுதவி அளிப்பது சமீபத்திய அனுபவங்களின் மூலம் தெரியவருகிறது. பிறகு அவை நிதியை NGOக்களுக்கு வழங்கி "கூட்டாக செயல்பட்டு" அவற்றின் திட்டங்களை நவதாராள செயல்திட்டத்துடன் இணைத்துக் கொள்கின்றன. சமூக மாற்றத்துக்கான சமூக ஒருங்கிணைப்பு என்பதை விடுத்து, "தாராளச் சந்தை" ஒத்துப் போகக்கூடிய பொருளாதார மேம்பாடு என்பதற்குத்தான் நிதி ஒதுக்கீட்டில் முதன்மை தரப்படுகிறது.

NGOக்களின் அமைப்பும் இயல்பும், அவற்றின் அரசியலற்ற பாசாங்கு நிலைமையும், சுய-உதவியில் அவற்றுக்கு உள்ள அக்கறையும், ஏழைமக்களை அரசியல் பிரக்ஞையற்றவர்களாக்கி ஒருங்கிணைய முடியாமல் செய்கிறது. நவதாராள கட்சிகளும் ஜனரஞ்சக தொலைத் தொடர்பு சாதனங்களும் ஊக்குவிக்கும் தேர்தல் நடவடிக்கைக்கு இவை வலுவூட்டு கின்றன. ஏகாதிபத்தியத்தின் தன்மை, நவதாராளவாதத்தின் வர்க்க அடிப்படை, ஏற்றுமதியாளர்களுக்கும் தற்காலிக தொழிலாளர்களுக்கும் இடையிலான வர்க்கப் போராட்டம் ஆகியவற்றைப்பற்றிய அரசியல் கல்வி தவிர்க்கப்படுகிறது. மாறாக "விலக்கப்பட்டவர்கள்" அதிகாரமற்றவர்கள்" "தாங்கமுடியாத வறுமை" "ஆண்-பெண் மற்றும் இனவேறுபாடு" பற்றியெல்லாம் NGOக்கள் விவாதிக்கும் போது, இந்நிலைகளை உற்பத்தி செய்யும் சமூக அமைப்பை பற்றிப் பேசாமல், மேலோட்டமான கூறுகளை மட்டுமே விவாதிப்பதோடு நின்ற விடுகின்றன. "தனியார் தன்னார்வ நடவடிக்கை" யின் மூலம் ஏழைகளை நவதாராள பொருளாதாரத்துடன் இணைக்கும் NGOக்கள் தேசிய மற்றும் சர்வதேசிய அதிகாரக் கூட்டமைப்பைப் போற்றி பாதுகாக்கும் கவசம் போன்றதொரு அரசியல் உலகை சிருஷ்டித்து விடுகின்றன.

NGOக்கள் அதிகாரம் செய்யும் நிலையில் இருக்கும் சில பிரதேசங்களில் சுதந்திரமான வர்க்க அரசியல் நடவடிக்கை குறைந்து நவதாராளவாதம் கேள்வி கேட்பாறின்றி போய்விடுவது எதேச்சையான நிகழ்வு இல்லை. உண்மைநிலை என்னவென்றால், NGOக்களின் வளர்ச்சிக்கு நவதாராளவாதம் நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கும்போது, எல்லா இடங்களிலும் வறுமை தீவிரமாக பரவிவருகிறது. ஆங்காங்கே உள்ளூர் வெற்றிகள் கிட்டியதாக கேள்விப்பட்டாலும், நவதாராள வாதத்தின் ஒட்டு மொத்த அதிகாரம் கேள்விமுறை இன்றி போவதும், NGOக்கள் அதிகார வட்டாரங்களில் ஒட்டிக் கொள்ள மேன்மேலும் முயற்சி செய்வதும் கண்கூடு.

மாற்று வழிகளை ஏற்படுத்தும் பிரச்சினை கூட மற்றொரு வழியில் தடைப்பட்டு வருகிறது. முன்னாளைய கொரில்லாத் தலைவர்களும் சமூக இயக்கங்களும், தொழிற்சங்கங்களும், பெரிய அளவிலான பெண்கள் அமைப்புகளும் NGOக்களால் இணைத்துக் கொள்ளப்பட்டன. அதிகாரத்திலுள்ளவர்களுடன் இணைந்து சமூகத்துக்கு ஏதாவது நன்மைகள் செய்ய முடியுமென்ற எதிர்பார்ப்பில் அல்லது மயக்கத்தில் NGOக்கள்பால் இவர்கள் ஈர்க்கப்பட்டதும் உண்மைதான். அதிக சம்பளம் (சிலசமயம் டாலர்களில்) கௌரவம், வெளிநாட்டுப் புரவலர்களால் மதிக்கப்படுவது, வெளிநாட்டு மாநாடுகள், வலைப்பின்னல்கள், அலுவலக உதவியாட்கள், ஒடுக்குமுறையிலிருந்து பாதுகாப்பு போன்ற இந்த சலுகைகள் எப்படியும் ஆசையைத் தூண்டுபவைதான். சமூக அரசியல் இயக்கங்கள் இதற்கு நேரெதிராக குறைந்த லோகாயாத சலுகைகளையும், அதிக மதிப்பும் சுதந்திரமும் தருவதோடு, முக்கியமாக அரசியல் பொருளாதார அமைப்புக்களை கேள்விக்குள்ளாக்கும் சுதந்திரமும் தருகின்றன. NGOக்களும் அவற்றின் வெளிநாட்டு வங்கி ஆதரவாளர்களும் (அமெரிக்க வளர்ச்சி வங்கி, உலக வங்கி) பதிப்பிக்கும் செய்தி அறிக்கைகளில் சிறு நிறுவனங்களின் பிற சுய-உதவி திட்டங்களின் வெற்றிக்கதைகளையும் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் இன்று மெக்ஸிகோ நகரத்தில் உள்ளதுபோல் பரவலான நுகர்வின் அளவு குறைவதையோ சந்தை, மலிவான இறக்குமதிப் பொருட்களால் நிரம்புவதையோ, வட்டி விகிதங்கள் ஆகாயத்துக்கு உயர்வதையோ இவை குறிப்பிடுவதில்லை.

இந்த "வெற்றிகள்" கூட ஏழைமக்களின் ஒரு சிறு பகுதியினரை மட்டுமே அடைவதாலும், பிறர் இதே சந்தைக்குள் நுழைய முடியாத அளவில் மட்டுமே இவை வெற்றியாகிறது. இருந்தாலும், தனிப்பட்ட சிறு-நிறுவனங்களின் வெற்றி பற்றிய பிரச்சாரத்தின் நோக்கம் நவதாராளவாதம் பரவலாக ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு விஷயந்தான் என்ற மாயையினை உருவாக்குவதுதான். சிறு நிறுவனங்கள் மலிந்துள்ள பிரதேசங்களில் அடிக்கடி வெடிக்கும் வன்முறை தெரிவிக்கும் உண்மை என்னவென்றால் NGOக்கள் இன்னமும் சுதந்திரமான வர்க்க இயக்கங்களை முற்றிலுமாக ஒழித்துவிட முடியவில்லை என்பதுதான் அவர்களின் கருத்து. அவ்விடங்களில் மேலாண்மைப் பெறவில்லை என்பதையுந்தான்.

இறுதியாக, NGOக்கள் ஒரு புதுவித கலாச்சார-பொருளாதார காலனியத்தையும் சார்புத்தன்மையுமே வளர்க்கின்றன. ஏகாதிபத்திய மையங்கள் மற்றும் அவற்றின் அமைப்புகளின் "வழிகாட்டு" தல்களின் அடிப்படையில் தான் திட்டங்கள் வடிவமைக்கப் படுகின்றன. அல்லது அனுமதிக்கப் படுகின்றன. அவைகள் அமலாக்கப் பட்டு சமூகங்களிடையே விற்கப் படுகின்றன. ஏகாதிபத்திய அமைப்புகளால் அவற்றுக்கு ஏற்றபடி மதிப்பீடுகள் செய்யப்படும் போது குழுக்கள், சமூகங்கள், பண்ணைகள், கூட்டுறவு நிறுவனங்கள் யாவும் கைவிடப் படுகின்றன. எல்லாமும்/எல்லோரும் திட்ட மதிப்பீட்டாளர்களின்/ புரவலர்களின் தேவைகளை கவனத்தில் கொண்டு செயல்பட கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்படுகின்றன. புதிய அரசுப் பிரதிநிதி மேற்பார்வை பார்த்து புரவலரின் இலக்கை, மதிப்பீடுகளை கொள்கைகளை ஒத்துப்போவதை, நிதி ஒதுக்கீட்டை சரியானபடி உபயோகிப்பதை, நிச்சயப்படுத்துகின்றன. எங்கேயெல்லாம் வெளியிலிருந்து கிடைக்கும் உதவியை பெரிதும் நம்பியிருப்பதால், அந்த உதவி கிடைக்காவிட்டால் இவை குலைந்து போய்விடும்.

படிநிலை அமைப்புகளும், மாற்றப்படும் "உதவி" "பயிற்சி" ஆகியவற்றின் வடிவமும் பத்தொன்பதாம் நூற்றாண்டு அறக்கோட்பாட்டைப் போலவே இருப்பதால், இதனை உருவாக்குபவர்களும் கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கிளிலிருந்து. வேறுபட்டவர்கள் அல்லர். NGOக்கள் "அரசின் அடக்கியாளும் தன்மைக்கும் சார்ந்திருக்கச் செய்வதற்கும்" எதிராக "சுயஉதவி"யை வலியுறுத்துகின்றன. இப்படியாக நவதாராளவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களை கைப்பற்றுவதில் போட்டி போடும் NGOக்கள் ஐரோப்பாவிலும் அ.ஐ நாடுகளிலுள்ள தங்கள் சகாக்களிடமிருந்தும் முக்கியமான மானியங்களைப் பெறுகின்றன. சுய-உதவிக் கோட்பாடு பொது ஊழியர்களின் இடத்தில் தன்னார்வலர்களை முன்னேற்றக்கூடிய தொழில் நிபுணர்களை தற்காலிக அடிப்படையில் அமர்த்தும்படி வலியுறுத்துகிறது. அரசுசாரா அறிவுஜீவிகளின் தத்துவமே "ஒற்றுமை"யை "ஒத்துழைப்பாக"வும், நவதாராளவாதத்தின் பரந்த பொருளாதாரத்துக்கு கீழ்ப்படிதலாகவும் மாற்றுவதுதான். இப்படித்தான் உயர்வர்க்கத்தினரின் கையில் சென்று சேரும் அரசின் வளங்களிலிருந்து பார்வையை தூரவிலக்கி கவனத்தை ஏழைகளின் சுய-சுரண்டலின் மேல் குவிக்கிறது. பெரும்பான்மையான NGOக்கள் நவதாராளவாதத்தின் கருவிளகாக செயல்பட்டு வரும் அதே சமயத்தில், ஒரு சில அமைப்புகள் மட்டும் ஏகாதிபத்திய எதிர்ப்பபையும், வர்க்க அரசியலையும் ஆதரிக்கிற மாற்று நிலைப்பாட்டை வளர்த்தெடுக்க முயற்சி செய்கின்றன. இவை உலக வங்கி, ஐரோப்பிய, அமெரிக்க அரசின் உதவி எதையும் பெறுவதில்லை. தேசிய அதிகாரத்தைப் பெறப்போராடும் உள்ளூர் சக்திகளை ஒருங்கிணைக்க இவை ஆதரவு தருகின்றன. உள்ளூர் திட்டங்களை தேசிய சமூக-அரசியல் இயக்கங்களுடன் இவை இணைக்கின்றன. இவை பன்னாட்டு கம்பெனிகளுக்கு எதிராக பெரிய நிலப்பரப்பு கொண்டு எஸ்டேட்டுகளை ஆக்கிரமித்துக் கொண்டு பொதுச்சொத்தையும். தேசிய உரிமையையும் காக்கின்றன. நிலத்தை மீட்கும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சமூக இயக்கங்களுக்கு இவை அரசியல் ஆதரவு தருகின்றன. உள்ளூர் மற்றும் உடனடிப் போராட்டங்களை வரையறுப்பதில் அரசியலுக்கு உள்ள முக்கியத்துவத்தை இவை அறிந்திருக்கினறன. உள்ளூர் நிறுவனங்கள் தேசிய அளவில் போராட வேண்டும் என்றும், தேசிய தலைவர்கள் உள்ளூரில் இயக்கத்தில் செயல்படுவோருக்கு பதில் சொல்லக் கூடியவர்களாக இருக்கவேண்டும் என்றும் இவை சொல்கின்றன. NGOக்களின் செயல்பாடும் நவதாராள வாதத்துடனும் ஏகாதிபத்தியத்துடனும் அவற்றுக்கு உள்ள தொடர்பையும் குறிப்பிட்ட சில நாடுகளை உதாரணமாக எடுத்துக்கொண்டு ஆராயலாம். ●

**குறிப்பு:** இக்கட்டுரை பிங்கம்டோன்-ல் உள்ள நியூயோர்க் ஸ்டேட் பல்கலைக் கழகத்தின் சமூகவியல் பேராசிரியராகக் கடமைபுரியும் ஜேம்ஸ் பெட்ராஸ் மந்திலி றிவீயூ சஞ்சிகையின் 1998-7வது இதழில் எழுதியதாகும். 'ஏகாதிபத்தியமும் லத்தீன் அமெரிக்காவின் அரசு சாரா நிறுவனங்களும்' என்னும் தலைப்பில் விரிவாக எழுதப்பட்டதாகும். அதன் சில முக்கிய பகுதிகளை காலக்குறி காலாண்டு இதழ் 1998ல் வெளியிட்டது. தமிழில் 'நீர்வை' [illegible] செய்துள்ளார். நன்றி-காலக்குறி. ●

## இந்திய தேர்தல்....

8ம் பக்க தொடர்ச்சி...

பாரதிய ஜனதா ஆட்சி கவிழ்க்கப் பட்ட விதம் பற்றிய ஒரு அனுதாப அலையை உருவாக்குவதிலும் இந்தியாவின் பிற்போக்கு பத்திரிகை நிறுவனங்கள் ஓரளவு வெற்றி கண்டுள்ளன. சென்ற வருடத்தின் 'சோனியா அலை' கொஞ்சம் தணிந்து விட்டது. இவையாவும் சி.பி.ஐ, சி.பி.எம் போட்ட கணக்குக் களைச் சிறிது தவறாக்கி விட்டன.


பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதத்திற்கும் மேல் உள்ளது. அதற்குள் பலதும் நடக்கலாம். ஆயினும் பாரதிய ஜனதா கட்சி முன்னை விடப் பலமான நிலையில் ஆட்சிக்கு வந்தால் அதற்கு தடுமாறுகிற ஒரு ஆட்சி தானாக கவிழவும் அதன் அரசியல் வறுமையும் அதன் பின்னணியில் இருந்து செயல்படுகிற தீய சக்திகளும் தாமாக அம்பலமாகும் வரை பொறுத்திருக்க முடியாதவர்களும் வெகுஜன அரசியல் வேலைகளைச் செய்யத்தவறியவர்களும் பொறுப்பேற்க வேண்டும்.

எவ்வாறாயினும் பாரதிய ஜனதா கட்சியின் வெற்றி ஒடுக்கப்பட்ட மக்களது நம்மைக்கானதல்ல. எனவே பாரதிய ஜனதா கட்சியை முறியடிப்பது இந்தியாவின் உழைக்கும் மக்களது பிரதான கடமையாகிறது. நேரு பரம்பரையோ காங்கிரஸோ இந்திய முதலாளியத்தின் நலன்களையும் பிராந்திய மேலாதிக்கத்தையும் தவிர வேறு எதையும் முன் னெடுத்துச் செல்லப் போவதில்லை. இந்திய முற்போக்குச் சக்திகள் மக்கள் முன்னால் ஒரு உண்மையான மூன்றாவது சக்தியையும் ஒரு நல்ல தெரிவையும் முன்வைப்பதானால் அது இந்தத் தேர்தல் மூலமாகச் செய்யக்கூடிய காரியமல்ல. இந்தத் தேர்தல் மூலம் கிடைக்கிற பாடங்களாவது மக்களுடைய விமோசனத்துக்கான ஒரு வலிய சக்தியின் உருவாக்கத்துக்கு உதவும் என எதிர்பார்ப்போமாக.

- அவதானி -

## பன்னீரின் கவிதைகள்

இதுவரை பதிவாகிய மலையக இலக்கிய ஆக்கங்கள் பலவற்றில் லயத்து காப்பராக்களில் இருந்து வெளிவந்த ஏக்கம் பெருமூச்சு கவலை கண்ணீர் போன்றவற்றையே தரிசிக்க முடிந்தது. ஆனால் இன்றைய ஆக்கங்களில் புதிய எழுச்சிக்கான எதிர்ப்பு உணர்வும், உத்வேகமும், கோபக் கனலும் சிந்தனைத் தெளிவும் கொண்ட இலக்கிய ஆக்கங்களைக் காண முடிகிறது. இதனை இராகலைப் பன்னீரின் புதிய தலைமுறைகள் கவிதைத் தொகுதியில் கண்டு கொள்ளலாம். புதிய தலைமுறையினரின் நெஞ்சக் குமுறல்களை நிதானம், உணர்வு, உத் வேகம் கொண்ட கவிதைகளாக வடித்து தந்துள்ளார் இராகலைப் பன்னீர், வர்க்க இன ஒடுக்கு முறைக்கு உள்ளாகி நிற்கும் மலையக மக்களின் வாழ்வு மாற்றத்திற்கு பன்னீரின் கவிதைகள் வலிமையான இலக்கிய ஆயுதமாகப் பயன்படும் என்பதில் நம்பிக்கை உண்டு. இதுபோன்ற எழுச்சி மிக்க கவிதைகள் மலையக மண்ணில் இருந்து நூல் உருப்பெறுதல் காலத்தின் தேவையாகும். தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியிட்டுள்ள இக்கவிதை நூல் பற்றிய அறிமுகமும் விமர்சனமும் இதுவரை அட்டன், இராகலை, தலவாக்கெல்லை, கண்டி. கொழும்பு ஆகிய நகரங்களில் இடம்பெற்றுள்ளன. இது வரை ஐந்நூறுக்கு மேற்பட்ட பிரதிகள் மலையகத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் விற்பனையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ●



நன்றி - நூலகத்திட்டம்




புதிய பூமி

செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

PUTHIYA POOMI புதிய பூமி

சுற்று 06 ஓகஸ்ட்/செப்டம்பர் 1999 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்சி 30


## மலையகத்தில்

- ஆயிரம் தமிழ் கிராமசேவையாளர்கள் நியமனம் என தம்பட்டம் அடித்தார்கள். கிடைத்தவையோ நூற்றி ஒன்று மட்டுமே. அவர்களுக்கான மூன்று மாத காலப் பயிற்சி தனிச் சிங்களத்தில் வழங்கப்படுகிறது. நியமனம் பெற்றோர் திகைத்து நிற்கின்றனர்.
- சிறிபாத கல்வியல் கல்லூரியில் பகிஷ்கரிப்பு முடிந்து பல நாட்களாகிவிட்டன. ஆனால் மாணவர்களின் அடிப்படைக் கோரிக்கைகள் அம்போ என்ற நிலையில் மூலையில் கட்டி வைக்கப்பட்டுள்ளது. தற்காலிகத் தலைவரும் பிரதான கிளாக்கரும் கல்லூரி முழுவதையும் ஆட்டிப்படைக்கிறார்கள். தரகு வேலை பார்த்தோர் தம்பாட்டில் போய் விட்டார்கள்.
- பாடசாலைகளுக்கு வகுப்பறை இல்லை. எழுத கரும்பலகை கிடையாது. ஆசிரியர்களுக்கு கடும் பற்றாக்குறை. பாடசாலை செல்ல மாணவர்களுக்கு வசதி இல்லை. ஆனால் ஆயிரம் கம்யூட்டர்கள் மலையகப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுமாம். வியாபாரம் பரவாயில்லை.

# மக்களை அணிதிரட்டி எழுச்சியை ஏற்படுத்த இடதுசாரிகளினால் மட்டுமே முடியும்

## 1953 ஹர்த்தால் தரும் பாடம் அதுவேயாகும்

கொடுங்கோண்மையான அரசாங்கத்திற்கு எதிராக மக்களை அணிதிரட்டி மக்கள் எழுச்சியை ஏற்படுத்த இடதுசாரிகளால் மட்டுமே முடியும் என்பதை உணர்த்தியது தான் 1953 ஆகஸ்ட் 12ஆம் திகதி இலங்கை நாடெங்கும் நடைபெற்ற எழுச்சிகரமான ஹர்த்தால் போராட்டமாகும். அன்று இடதுசாரிகள் என்று நேர்மையாகவும், ஐக்கியப் பட்டும் இருந்ததாலேயே அது சாத்தியமானது. இன்று இடதுசாரிகள் என்று சொல்லப் படுபவர்களில் அநேகரிடம் நேர்மை மீனமும், தனிக்கட்சியை முதன்மைப்படுத்தும் போக்கும் காணப்படுவதால் இலங்கையில் இடதுசாரி இயக்கத்தில் பலவீனங்கள் இருக் கின்றன. 1953ல் ஹர்த்தாலில் இருந்து பாடங்களை படித்து மக்களின் விடுதலையை அடிப்படை யாகக் கொண்டு மக்களை அணிதிரட்டக் கூடிய பரந்துபட்ட இடதுசாரி ஐக்கிய முன்னணியை கட்டிவளர்க்க வேண்டிய அவசியத்தினா லேயே புதிய இடதுசாரி முன்னணி ஹர்த்தாலை நினைவு கூர்ந்து அதனது முதலாவது ஆண்டு விழாவை கொண்டாடுகிறது.




புதிய இடதுசாரி முன்னணியின் செயலாளர் குழு உறுப்பினரும் தேசிய ஜனநாயக இயக்கத்தின் செயலாளருமான தோழர் பெற்றிக் பெர்ணான்டோ மேற்படி தெரிவித்தார். ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி கொழும்பிலுள்ள அரச லிகிதர் சேவாசங்க தலைமையகத்தில் நடைபெற்ற ஆண்டுவிழாவில் உரையாற்றும் போதே அவர் மேற்படி குறிப்பிட்டார்.

புதிய இடதுசாரி முன்னணியின் செயலாளரும், புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளருமான தோழர் இ. தம்பையா தலைமையில் நடைபெற்ற ஆண்டுவிழாவில் புதிய இடதுசாரி முன்னணியின் தலைமைக்குழு உறுப்பினர்களில் ஒருவரும் புதிய ஜனநாயக கட்சியின் பொதுச்செயலாளருமான தோழர் சி.கா.செந்திவேல், பு.இ.ம. தலைமைக் குழு உறுப்பினர்களில் ஒருவரும் ஐக்கிய சோஷலிசக் கட்சியின் பொதுச்செயலாளருமான தோழர் சிறிதுங்க ஜயசூரிய, பு.இ.மு. செயலாளர்குழு உறுப்பினர்களில் ஒருவரும் தியேச கல்வி வட்டத்தின் செயலாளருமான தோழர் வசந்த திசநாயக்க ஆகியோர் உரையாற்றினார்கள்.

தோழர் பெற்றிக் பெர்ணான்டோ உரையாற்றும் போது மேலும் குறிப்பிட்டதாவது. 1953ன் ஹர்தாலை சமூகமாற்றத்துக் கான சரியான திசையில் தொடர்ந்து முன்னெடுத்து செல்ல இடதுசாரிகள் தவறியதனாலே இலங்கை நாட்டிற்கும், மக்களுக்கும் இன்று பேரழிவு ஏற்பட்டிருக்கிறது. வார்த்தைகளால் சமூகமாற்றம் பற்றி உச்சரித்தபோதும் மனதளவில் செயலளவில் பாராளுமன்ற அரசியலை முழுமையாக ஏற்றுக்கொண்டு, முதலாளித்துவ கட்சியுடன் கூட்டிணைந்து பட்டம் பதவி களுக்கு தங்களை சில இடதுசாரிகள் பலியிட்டுக் கொண்டனர். இன்றும் கூட அந்த இடதுசாரிகள் முதலாளித்துவ அரசாங்கத்தில் இணைந்து பட்டம் பதவிகளை பெறுவதிலேயே அதிக அக்கறை செலுத்தி வருகின்றன. ஜே.வி.பி வாக்குறுதிகளை வழங்கி வாக்குகளைப் பெற்று இடதுசாரி அரசாங்கத்தை அமைக்கப் போவதாக கூறுகிறது. தனிக் கட்சியாக நின்று சாதனைகளை நிலைநாட்டலாம் என்றும் நம்புகிறது. நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு மாகாணசபையில் பதவி போன்ற சலுகைகளை பெறுவதற்காக பு.இ.முன்னணியை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அவர் கூட்டணியில் இருந்த போதும் தனிக்கட்சி மேலாண்மையை நிலைநாட்டவே முயற்சித்தார்.

1953 ஹர்த்தால் இடதுசாரிகள் ஐக்கியப்படவேண்டும் என்பதையும், மக்கள் போராட்டப் பாதையையும் எமக்கு எடுத்துக்காட்டியுள்ளது பாராளுமன்ற பட்டம் பதவிகளுக்கு அப்பால், தனிக்கட்சி குழுவாதங்களுக்கு அப்பால் இடதுசாரி அமைப்புகள் ஐக்கியப்பட வேண்டியதன் அவசியத்தை நாம் உணருகிறோம். அதனை நிறைவேற்றும் பாதையிலேயே புதிய இடதுசாரி முன்னணி பயணம் செய்கிறது. அந்த பயணத்தில் சகல இடதுசாரி, முற்போக்கு சக்திகளும் இணைந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறோம். புதிய இடதுசாரி முன்னணி கொள்கை திட்டத்தை மேலும் விஸ்தரித்து இடதுசாரி ஐக்கியத்தை பலிப்படுத்துவோம்.

# ஆடு நனைகிறது என சரிநிகரில் ஓநாய் ஒன்று அழுகிறது.

"புதிய இடதுசாரி முன்னணி உறவும் முறிவும்" என்ற தலைப்பில் சரிநிகர் என்ற என்.ஜீ.ஓ பத்திரிகை அதன் 178 ஆவது இதழில் அதற்கே உரிய இடதுசாரி விரோத அடிப்படையிலான, உண்மைக்கு மாறான நச்சுக் கருத்துக்களை எழுதி யிருந்தது. சரிநிகருக்கு தொடர்ந்து எழுதிவரும் பொ. சோதிலிங்கம் என்பவர் புதிய இடதுசாரி முன்னணியில் ஏற்பட்டிருக்கும் கருத்து வேறுபாடு பற்றிய உண்மையான தகவல்களை புதிய பூமி காரியாலயத்திலிருந்து சேகரித்துகக் கொண்டு சென்றார். எனினும் அது பற்றி அவர் எதுவும் எழுத முடியவில்லை. மாறாக கடந்த 12ஆம் திகதி அரசலிகிதர் சேவா சங்க மண்டபத்தில் நடைபெற்ற ஆண்டு விழாவுக்கு சரிநிகரை சேர்ந்த சரவணன் என்பவர் வந்திருந்தார். இரண்டு பேச்சாளர்கள் பேசிய பிறகு அங்கிருந்து சென்றுவிட்டு அங்கு என்ன பேசப்பட்டது என்பதை கற்பனை செய்து 'கோமதி' என்ற பெயரில் மேற்படி விஷமத்தனமான கட்டுரையை எழுதியுள்ளார்.

அவர் எழுதியுள்ளது போன்று விக்கிரமபாகுவின் மாகாணசபை உறுப்பினர் பதவியை தமக்கு தரும்படி புதிய இடதுசாரி முன்னணியின் எந்தவொரு கட்சியும் கேட்கவில்லை. அப்பதவியை கேட்டோ, செயலாளர் பதவியை கேட்டோ, பு.இ.முன்னணிக்குள் அடிப்படை முரண்பாடு ஏற்படவில்லை. பு.இ.மு.வின் அங்கத்துவ கட்சிகளுக்கு தெரியாமல் யூ.என்.பியின் உதவியுடன் மேல்மாகாணசபை தலைவர் பதவியை பெறுவதற்கு விக்கிரமபாகு எடுத்த முயற்சியே பிரதான பிரச்சினையாக இருந்தது. அவர் எழுதியுள்ளது போன்று புதிய ஜனநாயக கட்சியோ, ஐக்கிய சோஷலிசக் கட்சியோ, தேசிய ஜனநாயக இயக்கமோ, தியேச கல்வி அமைப்போ மேற்படி முரண்பட்டால் பு.இ.முன்னணியை விட்டு வெளியேறவும் இல்லை. அறிக்கை போர் புரியவு மில்லை. மேற்படி முரண்பாடு பற்றிய கலந்துரையாடலின் முடிவில் யூலை 1ஆம் திகதி பு.இ.மு.வின் புதிய வருடத்துக்கான செயலாளர் தெரிவும் இடம்பெற்றது என்பதே சரியானது. கோமதி என்பவர் பு.இ.மு.யின் ஆண்டு விழா முடியும் வரை இருந்து அவதானிக்காமல் கற்பனையில் கட்டுரை எழுதியது போன்று ந.ச.ச. கட்சியை தவிர ஏனைய கட்சிகளின் அங்கத்துவர்களை விரல்விட்டு எண்ணமுடியும் என்றும் கற்பனை செய்துள்ளார், ந.ச.ச.கட்சி உறுப்பிணர்களே பு.இ.முன்னணியை தாங்கியதாகவும் எழுதியுள்ளார். ந.ச.ச.கட்சியிலிருக்கும் கோமதியின் உறவினர்கள் மீது இருக்கும் பாசத்தால் அப்படி எழுதியிருக்கலாம்.

விக்கிரமபாகு மேல்மாகாணசபையின் தலைவர் பதவியை ஏற்கப்போவது பற்றி சரிநிகரில் ஏற்கனவே வெளிவந்த கட்டுரைக்கு புதிய ஜனநாயக கட்சியும், புதிய பூமியும், எதிர்ப்பு தெரிவித்ததாக எழுதியிருப் பதில் எவ்வித உண்மையும் இல்லை. புதிய பூமியை வம்புக்கு இழுத்ததால் சரிநிகர் முன்பு வாங்கிக் கட்டியது உண்மைதான். அதற்காக அப்பட்டமாக "என்.ஜீ.ஓ நேர்மையாக" நடப்பதாக காட்டுவதா?

எல்லாவற்றுக்கும் மேலாக சரிநிகரின் உபதேசத்தை கேட்காததால் தான் பு.இ.முன்னணி உடைந்ததாக எழுதுவது எவ்வளவு வெட்கக் கேடானது. பு.இ.மு. உடைந்த பிறகுதான் புதிய ஜனநாயக கட்சியும், புதிய பூமியும் பு.இ.மு முரண்பாடுகள் பற்றி எழுதுவதாக கூறும் அவர் பு.ஜ.கட்சிக்கும், புதிய பூமிக்கும் மிகவும் பாரிய சமூகப்பொறுப்பிருக்கிறது என்பதை உணர மாட்டார். சரிநிகரில் எழுதுபவர்கள் போன்று பொறுப்பற்று புதிய பூமியில் எழுதுபவர்கள் இருக்கமாட்டார்கள்.

பு.இ.முன்னணியின் ஆண்டு விழா கூட்ட உரைகள் பற்றி அதனை கேட்காமலே எழுதிய 'கோமதி' விக்கிரமபாகு மீதும், ந.ச.ச. கட்சி மீதும் மிகவும் அடிமை விசுவாசம் கொண்டவர் என்பதை நிரூபித்து விட்டார். அக்கட்சியிலிருக்கும் அவரின் உறவினர்கள் மீதுள்ள பாசத்திற்காக உண்மைகளைத் திரிப்பது கோமதி என்பவருக்கு கைவந்த கலைதான்.

எனவே இடதுசாரி இயக்கம் பற்றி, ஐக்கியம் பற்றி பொய்களையும், அவதூறுகளையுமே எழுதும் சரிநிகரின் உபதேசம் இந்நாட்டு இடதுசாரி இயக்கத்திற்கு அவசியமே இல்லை. சரிநிகர் ஒரு என்.ஜீ.ஓ பத்திரிகை என்பதும் அது நிதிவழங்கும் எசமானர்களுக்குகாக எழுதுவதென்பதும் மக்களுக்குப் புரிந்த ஒன்று தான். அரசியலிலும், பொதுவாழ்விலும் ஏன் சொந்த வாழ்விலும் சீரழிந்த சமூகப் பெறுப்பற்றவர்களின் கூலிக்காக எழுதும் போது நேர்மைக்கும் உண்மைக்கும் கட்டுப்பட்டிருக்க வேண்டிய அவசியம் ஏற்படாது தானே.

**என். சங்கர்**

# வடக்கில் பச்சை வான் கிழக்கில் வெள்ளை வான்

## கைதும் தடுத்து வைத்தலும் தொடர்கிறது

வடக்கு கிழக்கில் சிவில் நிர்வாகம் இயல்பு வாழ்க்கை நடைபெறுகிறது. மக்கள் மன மகிழ்வோடுதான் வாழ்கிறார்கள். நல்லூர், செல்வச் சந்நிதி திருவிழாக்களைப் பாருங்கள் என அரசாங்க ஊடகங்கள் சதா சொல்லிக் கொண்டே இருக்கின்றன. ஆனால் வடக்கு கிழக்கில் மோதல் களும் அவற்றைத் தொடர்ந்து மக்கள் கொல்லப் படுவதும் கைது செய்யப்படுவதும் தாக்கப்படுவதும் தொடர்கின்றது. குறிப்பாக இளைஞர்கள். யுவதிகள் மாணவர்கள் பத்துக்குக் குறையாமல், நாளந்தம் கைது செய்யப்படுகிறார்கள். இவ்வாறு கைதுசெய்யப்படுவோர் யாழ் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப் படுவதில்லை. அனுராதபுரத்தில் ஆஜர் செய்யப்பட்டு தென்இலங்கைச் சிறைகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

இவற்றின் மத்தியில் யாழ்ப்பாணத்தில் பச்சை வான் ஒன்றில் வருபவர்கள் திடீர் திடீரென கைது செய்து கொண்டு செல்லும் சம்பவங்கள் மக்கள் மத்தியில் புதிய பயப்பீதியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 16–08–99 அன்று காலை 8.30 மணிக்கு விஜயகுமார் ஷர்மிலா(22) என்ற ஒரு பிள்ளையின் தாய் யாழ்–கன்னாதிட்டிச் சந்தியில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது பச்சை வானில் வந்த சீருடை அணிந்தவர்களால் கண்களை கட்டிக் கடத்திச் செல்லப்பட்டார். ஆனால் அன்று இரவு 7.30 மணியளவில் நாச்சிமார் கோவிலடியில் இறக்கிவிடப்பட்டார். இது பற்றி யாழ் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் மேற்படி இளம் பெண் வாக்கு மூலமளித்து முறைப்பாடு செய்துள்ளார். இந்த பச்சை வான் கடத்தல் இப்பொது தான் குடா நாட்டில் ஆரம்பித்துள்ளது. இதனால் மக்கள் குறிப்பாக இளைஞர் யுவதிகள் மாணவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

ஏற்கனவே மட்டக்களப்பில் அடிக்கடி வெள்ளை வானில் சென்று திடீரெனக் கடத்திச் செல்லும் நடைமுறை இருந்து வருகின்றது. ஏதாவது தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றால் கேள்விநியாயமின்றி மக்கள் மோசமாகத் தாக்கப்படுவதும் சுடப்படுவதும் சாதாரண நிகழ்வாகி விட்டது. அதே வேளை வேலைக்கும், பாடசாலைக்கும், ஏனைய தேவைக்கும் செல்பவர்கள் திடீரென வெள்ளை வான்காரர்களால் கடத்தப்படுகிறார்கள். பின்பு பெற்றோர் உறவினர்கள் தம்மவர்களைத் தேடி பொலீஸ் நிலையங்கள், முகாம்கள் சென்று விசாரித்தால் 'அப்படி எவரையும் கடத்தவில்லை எனக் கைவிரித்து விடுகின்றனர். ஆனால் சில மாதங்களுக்குப் பின் களுத்துறைச் சிறைச்சாலையில் இருந்து வீட்டிற்கு கடிதம் வரும் போது தான் குடும்பத்தினர் தம்மவர் சிறையில் இருப்பதை அறிய முடிகிறது.

இவ்வாறு வடக்கு கிழக்கில் இடம் பெறும் கடத்தல், கைது, தடுத்து வைத்தல் மற்றும் கண்மூடித் தனமான தாக்குதல் என்பனவற்றால் மக்கள் மத்தியில் கடுமையான அதிருப்தியும் எதிர்ப்பும் ஏற்பட்டுள்ளதையே காண முடிகிறது. அடக்கு முறைகள் எந்த மக்களையும் அடி பணிய வைக்க மாட்டாது. அதற்கு எதிரான போராட்டத் திசை நோக்கியே செல்ல வைக்கும் என்பதைப் புரிந்து கொள்ள ராணுவத்தால் முடியாத ஒன்றாகும்.

வெளியிடுபவர்: இ. தம்பையா இல. 47. 3ம் மாடி. கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட். கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : யூ. கே. பிரின்டஸ். 26/1இ சிவனந்தா வீதி. கொழும்பு 13.